# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 21 புதன்கிழமை (05.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 040


# குடாநாட்டின் கொலை, கடத்தல்களை ஆராய சர்வகட்சிக் குழுவை நியமிக்குக!

## எதிர்க்கட்சி தலைவர் ரணில் கோரிக்கை



கொழும்பு, ஜனவரி 05

யாழ். குடாநாட்டில் தற்போது அரங்கேறி வரும் கொலை, கொள்ளை, கடத்தல் போன்ற சம்பவங்களை அவதானித்து - ஆராய்வதற்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வகட்சிக் குழுவொன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழுவை அங்கு அனுப்பி வைக்க வேண்டும் - என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிபோதே அவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

யாழ். குடாநாட்டில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் கொலை, கொள்ளை, கடத்தல்களினால் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் அங்குள்ள நிலைமைகளைக்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தலைவிரித்தாடும் சம்பவங்கள் சர்வதேச மட்டத்தில் அரசுக்கு பின்னடைவு

### இப்படிக் கூறுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 05

யாழ்ப்பாணத்தில் தற்போது இடம்பெற்றுவரும் அசாதாரண சம்பவங்கள் அரசுக்கு சர்வதேச மட்டத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்றும் இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஜே.வி.பி. கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக கொலை, கொள்ளை, கடத்தல், காணாமல்போதல் மற்றும் பாலியல் வல்லுறவு போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வருவதை நாம் கூறுகிறோம். இதனால் யாழ்ப்பாணம் (02 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் அரசுக்கு எதிராக வலுவான கூட்டணி

### மனோகணேசன் அழைப்பு

கொழும்பு, ஜன. 05

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கு முகங்கொடுப்பதற்காக வலுவான எதிர்க்கட்சிகளின் கூட்டணிகள் தென்னிலங்கையிலும், வடக்கு, கிழக்கிலும் உருவாக்கப்படவேண்டும். இதன் மூலமே இந்த அரசை வீட்டுக்கு அனுப்பும் பணியை துரிதப்படுத்த முடியும்.

- இப்படி ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்த அரசை தனியொரு கட்சியாலோ (02 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தை நிறைவேற்றுவதில் இழுபறி நிலை

கொழும்பு, ஜன.5

உள்ளூராட்சிச் சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் மீண்டும் இழுபறிநிலை. தொகுதிவாரி தேர்தல் முறைக்கு அரசு பின்னடிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு. நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. கேள்வி நேரத்தின் பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பாக சபையில் சர்ச்சை எழுந்தது.

விருப்பு வாக்கு முறைமையை ஒழித்து தொகுதிவாரித் தேர்தல் முறைக்கு ஆதரவு தருகின்றோம். இன்றே நிறைவேற்றுங்கள் என்கின்றன எதிர்க்கட்சிகள்.

எங்களால்கொண்டுவரப்பட்டது (27 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சிச் சபைகள் நாளை கலைக்கப்படும்

கொழும்பு, ஜன.5

உள்ளூராட்சிச் சபைகளை நாளை கலைக்க அரசு தீர்மானித்துள்ளது என அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சிச் சபைகளை எதிர்வரும் 10ஆம் திகதி கலைக்க அரசு ஏற்கனவே தீர்மானித்திருந்தது. இருந்தும் எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்களை நடத்த ஏதுவாக நாளை 6 ஆம் திகதி உள்ளூராட்சிச் சபைகளைக் கலைக்க இப்போது அரசு தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சிச் சபைகள் கலைக்கப்படும் தினத்திலிருந்து தேர்தல் நடைபெறும் தினம் வரை உள்ளூராட்சிச் (02 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் - முஸ்லிம் கட்சிகளுக்கு பெரும் பாதிப்பு என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன.05

நாட்டிலுள்ள சிறுபான்மைக் கட்சிகளின் உள்ளூராட்சி சபைப் பிரதிநிதித்துவத்தை, இந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் முடக்கும். இச்சட்டமூலம் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, இந்த திருத்தச் சட்ட மூலத்தை எமது கட்சி எதிர்க்கின்றது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றஉள்ளூராட்சி சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற் (26 ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் குடும்பஸ்தரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜன.5

உரும்பிராயில் நேற்றுமுன்தினம் இரவு முதல் கூலித் தொழிலாளியான ஐந்து பிள்ளைகளின் தந்தையைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரும்பிராய், யோகபுரத்தைச் சேர்ந்த (27ஆம் பக்கம் பார்க்க)











## குடாநாட்டுக் குற்றச்செயல்கள் குறித்து விவாதிக்க பொதுமக்கள் பங்களிப்புடன் பொலிஸ் மாநாடு

### யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெள்ளியன்று

குடாநாட்டில் பெருகிவரும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக பொதுமக்கள் பங்களிப்புடனான பொலிஸ் மாநாடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற இருக்கிறது.

யாழ். குடாநாட்டில் கடந்த இரு வாரங்களாக அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கொலை, கொள்ளை, கடத்தல் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதனால் மக்கள் பயப் பீதியில் உறைந்து போயுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டிய பொலிஸார் அசமந்தப் (02 ஆம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கில் மீண்டும் இரத்தம்; மரண பயத்தில் அம்மக்கள்

பாதை அபிவிருத்திக்கான கொந்தராத்து போக்குவரத்துச் சேவைகளை நடத்தும் கம்பனிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 27 கிலோ மீற்றர் தூரப் பாதையைப் புனரமைக்க எட்டுக் கம்பனிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவர்கள் வடக்கை மீட்டது அரச சொத்தைத் திருடவா எனக் கேள்வி எழுப்புகின்றார் ஐ.தே.க. உறுப்பினரான தயாசிறி ஜயசேகர.

நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே தயாசிறி ஜயசேகர இப்படிக் கூறினார்.

2011ஆம் ஆண்டில் முதலாவதுசபை அமர்வு சபாநாயகர் சமல் ராஜ பக்ஷ தலைமையில் நேற்று இடம்பெற்றது.

வழமையான சபை நடவடிக்கைகளின் பின் வாய்மூல வினாக்களுக்கு அமைச்சர்கள் பதில் அளித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மட்டக்களப்பு - அக்கரைப்பற்று பாதை அபிவிருத்தி தொடர்பாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இக்கேள்விக்குப் பதில் அளித்த பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேயவர்த்தன 27 கிலோ மீற்றர் நீளமான பாதைகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன எனவும் இப்பணிகள் எட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று கூறிய பிரதியமைச்சர், அந்த எட்டு நிறுவனங்களின் பெயர்ப் பட்டியலையும் சமர்ப்பித்தார். அதேவேளை, இப்பாதை அபிவிருத்திக்கு ஒரு கிலோ மீற்றருக்கு நான்கரைக் கோடி ரூபா செலவாகின்றது என்றும் அவர் கூறிவிட்டார்.

அமைச்சரின் பதிலிலேயே அமைச்சரை மடக்கிய தயாசிறி, ஐயா இது என்ன வேடிக்கை வடக்கை மீட்டுவிட்டோம், கிழக்கை மீட்டுவிட்டோம் என்கிறீர்கள். ஆனால் வடக்கு,கிழக்கைமீட்டது அரசசொத்துக்களை கொள்ளை அடிக்கத் தானா?

27 கிலோமீற்றர் பாதையைத் திருத்தி அமைக்க எட்டு கம்பனிகளுக்கு கொந்தராத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு கம்பனியிடமும் கொமிஷன் அடிக்கவா? ஏன் இதனை ஒரு கம்பனியிடம் ஒப்படைக்கக் கூடாது என்று கேட்டார் தயாசிறி.

தயாசிறி கூறுவது தவறு. பாதை அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காகவே எட்டு நிறுவனங்களிடம் இப்பணிகள் ஒப்படைக்கப்பட்டன என்று இடைமறித்தார் அமைச்சர்.

ஐயா, இந்த அமைச்சர் என்ன கூறுகின்றார் என்று பாருங்கள். பாதை அபிவிருத்தியைத் துரிதப்படுத்த மனோகரன் போக்குவரத்துக் கம்பனி, எம்.ஆர். போக்குவரத்துக் கம்பனி, கிறீஸ்ரியன் போக்குவரத்துக் கம்பனி போன்ற போக்குவரத்துக் கம்பனிகளிடம் பணிகளை ஒப்படைத்துள்ளனர். அங்கேதான் மோசடிகள் இடம்பெறுகின்றன என்று தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டினார். இந்தக் குற்றச்சாட்டிற்கு அமைச்சரிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை.

**உயிர் கொல்லி நோய்க்கு போலித் தடுப்பூசியா?**

கேள்வி நேரத்தின் பின் ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார திஸா நாயக்க -

நாட்டில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ள ஏ.எச்.வன். என்.வன். என்ற உயிர்கொல்லி நோய் துரிதமாகப் பரவி வருகின்றது. இதனைத் தடுக்க அரசு துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்பொழுது அரச வைத்தியசாலைகளில் தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. ஆனால் அவை தரமானவையா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

அதேவேளை, அரச வைத்தியசாலைகளில் இலவசமாக ஏற்றப்படும் இந்தத் தடுப்பூசி தனியார் வைத்தியசாலைகளில் விலைக்கு விற்கப்பட்டுள்ளன. இந்தத் தடுப்பூசிகள் அங்கு எப்படிப்

## சபையில் கேட்டவை

போயின. இவ்விடயம் தொடர்பாக அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கவன ஈர்ப்பு பிரேரணை ஒன்றையும் அவர் முன்வைத்தார்.

**வடமாகாணம் மீண்டும் இரத்த பூமியாகும் அபாயம்**

எப்பொழுதும் இல்லாத வகையில் பாரம்பரியம் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிமுக்கியமான கவனஈர்ப்பு பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

அதாவது முப்பது வருடகால ரணகளத்தில் இரத்தக் காடாக இருந்த வட பகுதி மக்கள் இப்போதுதான் சற்று அமைதியடைந்தனர். இதனை ஏற்படுத்திய ஜனாதிபதிக்கு நன்றி கூறவேண்டும்.

ஆனால், இப்பொழுது மீண்டும் எமது மக்கள் மத்தியில் பீதியும், மரண பயமும் ஏற்பட்டுள்ளன. அன்றாடம் கொலைகளும் கொள்ளைகளும் இடம்பெறுகின்றன. மீண்டும் இந்த மண்ணில் இரத்தம் சிந்துகிறது. இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்த விடயத்தைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் அடையும் நோக்கில் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

**பிரதம நீதியரசர் இராஜினாமா செய்தாரா?**

டக்ளஸ் தேவானந்தாவின் இக்கூற்றை வலியுறுத்திய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிகவும் பாரதூரமான சம்பவங்களை சபையில் முன்வைத்துள்ளார். இது சட்டம், ஒழுங்குக்குச் சவாலாக அமைந்துள்ள்து என்பதால் இவ்விடயம் தொடர்பாக தனியான ஒரு விவாதம் நடத்தப்படவேண்டும் என்று கூறினார்.

அதேவேளை பிரதம நீதியரசர் தனது பதவியை இராஜினாமாச் செய்து கடிதம் எழுதியுள்ளார் எனத் தெரியவருகின்றது. இது ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் ரணில். இதனால் மிரண்டு ஏழுந்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இல்லை..! இல்லை..! அப்படி எதுவுமே இல்லை...! எதிர்க்கட்சித் தலைவர் கூறுவதில் உண்மையில்லை என்று ரணிலின் கூற்றை நிராகரித்தார்.

**அரசின் வேலையை கழுதைகள் செய்யவேண்டாம்**

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பான விவாதம் சபையில் பெரும் சூட்டைக் கிளப்பிவிட்டது. அரசு நேற்று ஒன்றையும், இன்று வேறொன்றையும் கூறுகின்றது. நேற்று உடன்பட்டதை இன்று இல்லை என்று வெட்கம் கெட்ட தனமாகப் பேசுகின்றார் அமைச்சர். நாங்கள் முன்பு தவறு செய்தோம் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். அந்தத் தவறைத் திருத்துவதற்காகவே இன்று ஆதரவு வழங்க முன்வந்துள்ளோம்.

தேர்தல் ஒன்றின் மூலம் மக்கள் முன் செல்லப் பயப்படுகிறது அரசு என்று கூறிய லக்ஷ்மன் கிரியெல்ல, இந்தச் சட்டவரைவை அமைச்சர் உடனேயே நிறைவேற்ற வேண்டும் என்றும் வாதிட்டார். அப்போது அமைச்சர் வாசுவுக்கும் ஐ.தே.க. உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கும் இடையில் காரசாரமான விவாதம் ஏற்பட்டது.

அப்போது ஆத்திரமடைந்த அமைச்சர், ஐயா இந்தச் சட்டவரைவை கொண்டு வந்ததே அரசுதான். அதை எப்போது வேண்டுமானாலும் நிறைவேற்றுவோம். அது எங்களுடைய வேலை. உங்களுக்கு என்ன அவசரம். அரசின் வேலையைக் கழுதைகள் செய்யவேண்டாம் எனச் சாடினார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

**குட்டைப் பாவாடையும் உள்ளாடை இல்லாத சாரங்களும்**

நேற்றைய விவாதத்தின்போது குட்டைப் பாவாடைகளும், உள்ளாடை அணியாமல் நடமாடும் சாரம் கட்டிய அமைச்சர்கள் தொடர்பாகவும் தாராளமாகவே பேசப்பட்டன.

இன்று உள்ளாடை அணியாமல் சாரம் கட்டிக்கொண்டு பல அமைச்சர்கள் நடமாடுகின்றனர். அதேபோன்று

உதயன் சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

தான் இந்த உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் சட்டமூலமும் என்று விமர்சித்தார் ஐ.தே.க. உறுப்பினரான தயாசிறி ஜயசேகர

**முழுமையடையாத சட்டமூலத்தை முன்வைத்த அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்**

அரசால் முன்வைக்கப்பட்ட இந்தச் சட்டவரைவுகள் பல சர்ச்சைகளுக்குப் பின், இன்று இரண்டாம் விவாதிப்புக்காக சபையிலும் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில் பல குறைபாடுகள் இருப்பதாகக் கூறுகின்றனர். அப்படியானால் பூரணப்படுத்தப்படாத சட்டவரைவை முன்வைத்த அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்று கூறினார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

**அஸ்வரின் கன்னி ஒழுங்குப் பிரச்சினை**

காலை முதல் ஆளும் கட்சி உறுப்பினராக ஏ.எச்.எம்.அஸ்வர் இவ்வருடத்தில் முதலாவது ஒழுங்குப் பிரச்சினையை எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராகவே கிளப்பினார். அதாவது எதிர்க்கட்சித் தலைவர் தனது பதவியை இராஜினாமாச் செய்யப்போவதாக தகவல் கிடைத்துள்ளது என்றார். என்றாலும் அஸ்வர் தொடர்ச்சியாக ஏழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைகள் நிராகரிக்கப்பட்டன.

## உள்ளூராட்சிச் சபை தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது தனியொரு அரசியல் தலைவராலோ வீழ்த்த முடியாது. அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றுசேர்ந்து வலுவான கூட்டணி ஒன்று தென்னிலங்கையில் உருவாக்கப்படவேண்டும். அத்தகைய கூட்டணி தமிழ்பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக வடக்கு, கிழக்கிலும் உருவாக்கப்படவேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் பொதுச் சின்னத்திலே எதிர்க்கட்சிகள் சார்பாக பொது வேட்பாளரை நிறுத்தியிருந்தோம். இந்த எதிர்க்கட்சிகளின் பொது கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலில் தொடரவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் இந்த எதிர்க்கட்சிகளின் பொது கூட்டணி இருந்திருக்குமானால், அரசுக்கு இந்த அளவுக்குப் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்திருக்கா. அதை பயன்படுத்தி கணிசமான எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசினால் வளைத்துப் போட்டிருக்கவும் முடியாது.

நாடாளுமன்றத் தேர்தலின்போது எதிர்க்கட்சிகளை பொதுச் சின்னத்தில் கூட்டணியாகப் போட்டியிட வைப்பதற்கு இறுதி வரை நாம் கடுமையான முயற்சிகளை எடுத்தோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் தலைவர்களுடன் இணைந்து நான் இந்த முயற்சிகளை எடுத்திருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையின் பிடிவாதம் காரணமாக இது சாத்தியமாகவில்லை. இதுவே இன்றைய அரசுக்கு மிகவும் சாதகமாக அமைந்துவிட்டது.

எனவே, பொது எதிர்க்கட்சிகளின் கூட்டணி உருவாக்கப்படவேண்டியதன் அவசியம் தொடர்பில் நான் இன்று ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக தேசியக் கூட்டணி, ஜே.வி.பி. ஆகிய கட்சித் தலைவர்களுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளேன்.

இத்தகைய தொடர்புகளை சிறிதுங்க ஜயசூரிய, விக்ரமபாகு கருணாரட்ன ஆகியோருடனும் ஏற்படுத்தியுள்ளேன். அதுபோல இன்னும் சில தினங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய தமிழ்க் கட்சித் தலைவர்களைச் சந்திப்பதற்கும் எமது கட்சி விரும்பியுள்ளத்து.

இந்நிலையில், பொதுச்சின்னத்தில் போட்டியிடக்கூடிய பொதுவான எதிர்க்கட்சி கூட்டணி உருவாக்கப்படுவதன் மூலமே அரசுக்கு எதிராக இன்று சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் எழுந்துவருகின்ற எதிர்ப்பு அலையை ஒருமுகப்படுத்த முடியும். அதன் மூலம் மக்களுக்கு நம்பிக்கையை தரமுடியும்.

பொதுக் கூட்டணித் தொடர்பில் எதிர்க்கட்சிகள் உடன்பாட்டுக்கு வராவிட்டால், ஜனநாயக மக்கள் முன்னணி கொழும்பு மாநகரசபை உட்பட பல உள்ளூராட்சி மன்றங்களில் தனித்து எமது கட்சியின் பிரபலமான ஏணிச் சின்னத்தில் போட்டியிடுவதையே நான் விரும்புகின்றேன் - என்றார்.

## உள்ளூராட்சிச் சபை நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளின் நிர்வாகம் விசேட ஆணையாளரிடம் ஒப்படைக்கப்படும்.

கலைக்கப்படும் மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை 330 ஆகும். இம்மாத இறுதியில் இச் சபைகளுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீதியில் ஆழ்ந்துள்ளது.பொலிஸாரும், இராணுவத்தினரும், புலனாய்வுத் துறையினரும் நிறைந்துள்ள யாழ்ப்பாணத்தில் இவ்வாறு சம்பவங்கள் இடம்பெறுவதால் பின்னணியில் படையினர் உள்ளனரோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவங்களைக் கட்டுப்படுத்தி மக்களை பாதுகாக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால், இந்த விடயத்தில் அரசு அசமந்தமாக இருப்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. சர்வதேச மட்டத்தில் அரசு இப்போது பின்னடைவைச் சந்தித்துள்ளது. இவ்வாறான சம்பவங்கள் அரசுக்கு மேலும் பின்னடைவைத் தரும்.

30 வருட கால யுத்தத்தின்போது மக்கள் இதே பிரச்சினைகளை எதிர்கொண்டனர். யுத்தம் முடிந்த பின்பும் பழைய நிலைமைதான் தொடர்கின்றது. யுத்தம் முடிவடைந்து 20 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் அந்த மக்களுக்கு இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து விடிவு கிட்டவில்லை - என்றார்.

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்பதற்கு சர்வகட்சி உறுப்பினர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அங்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

குடாநாட்டில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் இவ்வாறான நிலைமைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஒரு நாள் ஒதுக்கப்பட்டு, விவாதம் நடத்தப்படவேண்டும். அத்துடன், யாழ். குடாநாட்டு நிலைமை தொடர்பில் கட்சித் தலைவர்கள் மாநாட்டில் நான் கேள்வி எழுப்பவுள்ளேன்.- இப்படி அவர் கூறினார்.

## குடாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்காக இருப்பதாக பொதுமக்கள் பலராலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டு வருகின்றன.இதனால் யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தின் வழிகாட்டலின் கீழ்,யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும் சேர்ந்த உயர் அதிகாரிகள் இந்த மாநாட்டில் பங்குபற்ற இருக்கின்றனர்.

பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில், பொதுமக்கள் குற்றச் செயல்கள் தொடர்பில் தமக்கிருக்கும் சந்தேகங்களை நேரடியாக அவர்களிடமே கேட்டுத் தீர்வுபெற்றுக்கொள்ள முடியும். இந்த நிகழ்வில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு பொலிஸார் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபடுவதாக தெரிவிக்கின்ற போதும் அவ்வாறு எதுவும் நடை பெறுவதில்லை என்று அரச அதிபர் நேற்று முன்தினம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-15-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் மக்கள் அச்சம் தரும் சூழலில் மீண்டும் வாழ்வதற்கான நிர்ப்பந்தம்

## நாடாளுமன்றில் நேற்று டக்ளஸ்

கொழும்பு, ஜன.5

யாழ். குடாநாட்டு மக்கள் மீண்டும் அச்சம் தரும் சூழலுக்குள் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நாடாளுமன்றில் உரையாற்றிய போது தெரிவித்தார்.

அமைச்சர் தமது உரையில் -

இந்த நாட்டில் யுத்தம் நடந்து முடிந்திருக்கிறது. யுத்தத்தின் வடுக்களில் இருந்தும் அவலங்களில் இருந்தும் துயரங்களில் இருந்தும் எமது மக்கள் மீட்டெடுக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அதற்காக, நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் படைத் தரப்பினருக்கும் பல தடவைகள் நன்றி தெரிவித்து வந்திருக்கின்றேன்.

ஆனாலும், இனி இங்கு யுத்தம் இல்லை, இரத்தம் சிந்தும் நிலையும் இல்லை என்ற நம்பிக்கையோடு காத்திருந்த எமது மக்களின் நம்பிக்கைகள் சிதைக்கப்படும் படியாக சில சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

மழைவிட்டாலும் தூவானம் விடவில்லை என்பது போல் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் ஆங்காங்கே சில படுகொலை சம்பவங்கள், ஆள் கட்டத்தல்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் நடந்து வருகின்றன. இதனால் எமது மக்கள் மறுபடியும் ஓர் அச்சம் தரும் சூழலுக்குள் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

மறுபடியும் எமது வாழ்விடங்கள் இரத்தம் சிந்தும் பூமியாக மாறிவிடப்போகிறது எனும் வதந்திகளும் ஆங்காங்கே திட்டமிட்ட வகையில் பரப்பப்பட்டு வருகின்றன. அப்பாவி மக்கள் எதை நம்புவது? எதை நம்பாமல் இருப்பது என்று திகைத்து கொண்டிருக்கின்றார்கள். ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இது எமது மக்கள் சமூகத்தின் ஒரு மனிதாபிமான பிரச்சினை, அதற்காகவே நான் இந்த விடயத்தை இந்தச் சபையில் கவனத்தில் எடுக்க விரும்புகிறேன்.

எமக்கு வாக்களித்த மக்கள் என்பதற்காகவோ அன்றி எமது அரசாங்கத்துக்கு சர்வதேச ரீதியில் அபகீர்த்தி உருவாகி விடும் என்பதற்காகவோ நான் இதைத் தெரிவிக்க வரவில்லை. அது அடுத்த பட்சமான பிரச்சினை.

சகல மக்களும் இங்கு அச்சமின்றி ஒரு ஜனநாயக சூழலில் சம உரிமையோடு முகமுயர்த்தி வாழ வேண்டும் என்பதே எமது விருப்பங்களாகும். இதை பிரதான நோக்கமாகக் கொண்டே இது குறித்த விடயங்களை நான் இந்தச் சபையில் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். மக்களின் அவலங்களை வைத்து அரசியல் நடத்துவதற்கு நான் ஒருபோதும் விரும்பியிருக்கவில்லை. ஆனால் இதை வைத்து சிலர் அரசியல் இலாபம் தேடுவதற்குக் கூட முயற்சிக்கலாம். ஆனால் நாங்கள் அப்படியானவர்கள் அல்ல என்பது சகலருக்கும் தெரிந்த விடயம்.

யாழ்ப்பாணம், சங்கானையில் நடந்த குருக்கள் வீட்டு கொலை, கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்த பாதுகாப்புத் தரப்பினர் அதேபோன்று யாழ். குடாநாட்டில் நடந்து முடிந்த அனைத்து சம்பவங்களுக்குமான சூத்திரதாரிகளையும் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடிப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் யாராக இருப்பினும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

இது தவிர கடத்திச் செல்லப்பட்டவர்கள் தமது உயிர் மற்றும் உடல் சேதங்கள் இன்றி வீடு திரும்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அச்சத்தில் உறைந்து போயிருக்கும் சகல மக்களுக்கும் நம்பிக்கை தெரிவித்து நல்லதே நடக்கும். நடக்க வைப்போம். நம்பிக்கையோடு காத்திருங்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு உறுதியளிக்கின்றேன். -என்றார்.

### காணாமற்போனதாக முறையிடப்பட்டிருந்த

# எழுதுமட்டுவாள் ஆலயச் சிலைகள் யாழ்.நகர வர்த்தகரிடம் இருந்து மீட்பு

தென்மராட்சி, ஜன.5

எழுதுமட்டுவாள் அம்பாள் ஆலயமொன்றில் காணாமற்போனதாகக் கூறப்படும் நான்கு வெண்கலச் சிலைகள் யாழ்ப்பாணத்தில் உள்ள கடையொன்றில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர அனுமதிக்காத அப்பகுதியில் கடந்த மாதம் ஆலயத்தைப் பார்வையிடச் சென்ற ஆலய உரிமையாளர் அங்கு வைக்கப்பட்ட 3 அம்பாள் சிலைகளும் ஒரு வைரவர் சிலையும் காணாமற்போயிருந்ததை அவதானித்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தபோது பொலிஸாரால் அந்தச் சிலைகள் மீட்கப்பட்டு கடை உரிமையாளரும் கைது செய்யப்பட்டார்.

நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் சிலைகளுடன் கடை உரிமையாளரும் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராசா கடை உரிமையாளரை தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல அனுமதித்து வழக்கின் முறைப்பாட்டாளரான ஆலய உரிமையாளரை சிலைகளை அடையாளம் காட்டி ஒரு லட்சம் ரூபா பிணையில் எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டார். (ஓ-207)

# பலாங்கொடை தமிழ் ம.விக்கு மாணவரை அனுப்பாது பெற்றோர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன.5

பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பாமல் பெற்றோர் ஆர்ப்பாட்டம் பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்களின் பெரும்பகுதியினர் நேற்று முன்தினம் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமல் பாடசாலையின் முன்பாகவும் கல்விக் காரியாலயம் முன்பாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாடசாலை நிர்வாகத்தை கண்டித்தே இப்போராட்டம் நடத்தப்பட்டது. 800 மாணவர்களைக் கொண்டு உயர்தர வகுப்புவரை கல்வி கற்பிக்கும் இப்பாடசாலையில் நேற்று முன்தினம் சுமார் ஐம்பது மாணவர்கள் மட்டுமே வருகை தந்திருந்தனர் என்று பலாங்கொடை பிரதேச சபை உறுப்பினர் சுப்பிரமணியம் விஜயகுமார் தெரிவித்தார். இவ்விடயம் சம்பந்தமாக சப்ரகமுவ மாகாணக் கல்வியமைச்சுடன் தொடர்பு கொண்டபோது அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தவை வருமாறு-

"இப்பாடசாலையில் வெற்றிடமாக இருந்த அதிபர் பதவிக்கு தகுதி வாய்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் தனது பணியைப்பொறுப்பேற்பதற்கு முன்பாகவே பெற்றோர் பேராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவரது நியமனத்தை இரத்து செய்யுமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கிறார்கள். அவர்கள் நடத்தும் இந்தப் போராட்டத்தின் பின்னணியில் வேறு காரணங்கள் உள்ளன. இவ்வாறு அப்பேச்சாளர் தெரிவித்தார். (ஓ-5)

# மகஸின் கைதிக்கு பால் பைக்கற்றில் 'லெமன் ஜின்'


கொழும்பு, மகஸின் கைதி ஒருவரைப் பார்க்க வந்த நபரொருவர் பால் பைக்கற்று ஒன்றுக்குள் லெமன் ஜின் மதுபானத்தை நிரப்பிக் கொண்டு உள்செல்ல முயன்றபோது பிடிபட்டார்.

அவர் மீது சந்தேகப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள் பால் பைக்கற்றை பரிசோதிக்க முயன்றபோது அதில் துளையிட வேண்டாம் என்று இந்நபர் கேட்டுள்ளார்.

எனினும் அதிகாரிகள் பால் பைக்கற்றை திறந்து சோதித்தபோது அதற்குள் லெமன் ஜின் நிரப்பப்பட்டிருந்தது தெரியவந்தது.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டு பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஓ-5)

# தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த குமார் பொன்னம்பலம்



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் பத்தாவது சிரார்த்த தினம் இன்றாகும். க்யவர்களால் வெள்ளவத்தையில் வைத்து சுடப்பட்டு கொலை செய்யப்பட்டார். இலங்கைச் சரித்திரத்திலேயே ஒரு தமிழத் தலைவர் தமிழர்களுக்காக குரல் கொடுத்த காரணத்திற்காக கொலை செய்யப்பட்டமை இதுவே முதற்தடவையாகும். அவர் கொலை செய்யப்படும்போது அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவராக இருந்தார். மாபெரும் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் மறைவின் பின் கட்சியின் தலைமைத்துவதை ஏற்று எல்லோரும் மெச்சும் வகையில் கட்சியை வழிநடத்தி வந்தார்.

நான் சட்டத் தொழிலை ஆரம்பித்த காலம் தொடக்கம் அவர் இறக்கும்வரை அவருடன் மிகவும் அந்நியோன்யமாக பழகிவந்தேன். என்னை அவரும் அவருடைய குடும்பத்தினரும் தமதுகுடும்ப அங்கத்தவராகவே கணித்தனர். நான் இந்தியாவில் அப்பலோ மருத்துவமனையில் இருதய சத்திர சிகிச்சை செய்த போது அவரும் அவரது பாரியாரும் ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அண்ணை உங்களை நேசிக்கிறோம் என்று சொல்லுவார்கள். அவரது மறைவினால் அவரது குடும்பத்தவரிலும் பார்க்க நான்தான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன்.

நான் எனது சட்டத்தொழிலை அவருடன் இணைந்தே செய்தேன் அப்போதைய சூழ்நிலைக்கேற்ப அவர் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவராக இருந்தபோது இலங்கை வாழ் தமிழரது பிரச்சினையை திம்புக்கோட்பாட்டின் அடிப்படையில் தீர்க்கவேண்டும் என்ற நம்பிக்கையுடன் அப்படியான ஒரு தீர்வை கொண்டு வருவதற்கு எல்லா வழிகளிலும் செயற்பட்டார். இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைன்யயும் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனி உரிமை மீறல்களையும் சர்வதேச மயப்படுத்திய பெருமை அவரையேசாரும் இதற்காக அவருக்கு தமிழ் மக்கள் என்றும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

அவரின் இக் கொள்கையினால் அவரை கைது செய்யும்நோக்குடன் அப்போதைய அரசு இரகசியப் பொலிஸை அவரது வீட்டுக்கு அனுப்பி பல மணி நேரமாக விசாரணை செய்தது. அவரது வாக்குமூலத்தை எடுத்தது.

இன்னும் செம்மணிப் புகழ் அம்மணி சந்திரிகா அம்மையார் தென்னாபிரிக்காவில் வைத்து, தமிழர்கள் இலங்கைப் பூர்வீகக்குடிகள் அல்லர் என்று பேட்டியளித்ததை கண்டித்த ஒரே தமிழத் தலைவர் குமாரே.

அவர் இறப்பதற்குச் சொற்ப நாள்களுக்கு முன்னர் சந்திரிகா அம்மையார் தொலைக் காட்சியில் விடுதலைப் புலிகளை கடுமையாகத் தாக்கி புலிகளுக்கு ஆதரவாக இயங்குபவர்கள் கொழும்பில் இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற தோரணையில் பேசியிருந்தார்.

மறு நாள் காலை குமார் என்னுடன் தொடர்பு கொண்டு சந்திரிகா அம்மையாரின் தொலைக்காட்சி உரையை குறிப்பிட்டு தான் நீண்ட காலம் வாழ்வது கடினமென என்னிடம் சொன்னார்.

குமாரின் கொலையை விசாரணை செய்த பொலிஸ் அதிகாரியான விக்கிரமசிங்க விசாரணை அறிக்கையையும் கொலையோடு சம்பந்தப்பட்டவர்களின் விவரத்தையும் அந்த ஆண்டு புரட்டாதி மாதமே ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளித்தும் அவர் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

நான் இது தொடர்பாக பல முறை நாடாளுமன்றில் எனது கடும் விசனத்தைத் தெரிவித்துள்ளேன். தமிழினம் அநாதையாக்கப்பட்டு ஒரு தகுந்த தலைமைத்துவம் இல்லாமல் தவித்துக் கொண்டு இருக்கும் போது அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஒரே தமிழ்த் தலைவராக விளங்கியவர் அவரே.

புலம்பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்த வரையில் அவர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆற்றிய தொண்டுகளால் அவர்களின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தனர்.

இலங்கை அரசியல் சரித்திரம் எழுதும்போது ஜனநாயகக்கட்சி கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் (Democratic People's Alliance Manifesto) உருவாகுவதற்கு இவர் ஆற்றிய சேவை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். இந்த விஞ்ஞாபனத்தை பல கட்சிகள் பல நாள்களாக கலந்து ஆலோசித்து உருவாக்கின . ஒரு காலத்தில் இது பொன்னாவின் விஞ்ஞாபனம்" என்றும் கூறப்பட்டது.

இந்த விஞ்ஞாபனத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தினேஸ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி., முஸ்லிம் காங்கிரஸ், பல்கலைக்கழக மாணவர் முன்னணி சேர்ந்து உருவாக்கின.

இதில் அனைத்துக் கட்சிகளும். கையெழுத்திட்டன. இதைச் சிறிமா கைவிட்டிருக்காவிட்டால் தமிழர் பிரச்சினை அப்பொழுதே தீர்க்கப்பட்டிருக்கும். 1985 தொடக்கம் இறக்கும் வரை அவர் பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அவசரகால தடைச் சட்டத்தின்கீழ் செயற்பட்ட தமிழ் இளைஞர்களுக்காக இலவசமாக வாதாடி அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தார். அவர் தமிழ் இளைஞர்களுக்கு ஆற்றிய சேவை இதுவரை. வேறு எவரும் செய்யவில்லை.

ஆகையால்தான்போலும் அவர் இறந்த போது களுத்துறைச் சிறைச் சாலையில் கறுத்தக்கொடி பறக்கவிடப்பட்டது. அவரது மறைவிற்குச் சற்று முன் தேர்தலை எதிர்நோக்கி தமிழ் பகுதிகளில் போட்டியிடுவதற்கு ஒரு பட்டியலை அவர் தயாரித்தார். இதுவும் அவரது கொலைக்குக் காரணமாக அமையலாம். இவரைப் போல் இன்னொருவர் பிறக்கப்போவதில்லை.

**அப்பாத்துரை விநாயகமூர்த்தி**
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில் பணிநிலை வெற்றிடம்

எமது வடமராட்சி கிளையில் கீழ்காணும் பதவிநிலைகளுக்கு ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது.

1. **Course Counselors** Female
   should be qualified in G.C.E (A/L) having good command in English and computer literacy.
2. **Demonstrator** Male/Female (Full time)
   Computer Hardware or Graphics or Programming or accounting
3. **Instructors** Male/female
   Office application or Graphics or Programming or web designing or animation or accounting

**முன் அனுபவம் அற்ற ஆர்வமும் தகுதியுமுடைய எவரும் விண்ணப்பிக்கலாம்.**

**இரண்டு வாரங்களுக்குள் விண்ணப்பிக்கவும்.**

The Human Resource Manager
TECHNO WORLD STUDIES (Pvt) Ltd
No.344, Kasthuriyar Road.Jaffna.


### தவறவிடப்பட்ட கைச்சங்கிலி

யாழ். பிறவுண் வீதிக்கும் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கும் இடைப்பட்ட பிறவுண் வீதி, காங்கேசன் துறை வீதியில் எனது கைச்சங்கிலி 03.01.2011 திங்கட்கிழமை தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துடனோ அல்லது 0779599413 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


### வாடகைக்கு

புங்கன்குளம் வீதியில் கணக்கர் சந்திக்கு அருகில் மிகவும் நல்ல நிலையில் உள்ள சகல வசதிகளும் உடைய வீடு, தொழில் சார், கல்விசார் தேவைகளுக்காக வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
தொ.பே.: 0778890427

### கணினி பிரத்தியேக வகுப்பு

வீடுகளுக்கு சென்று கணினி பிரத்தியேகமாக கற்பிக்கப்படும். கணினி இல்லாதவர்களுக்கு LAPTOP மூலமாகக் கற்பிக்கப்படும்.
(சிறியவர்களுக்கும்)
தொடர்புகளுக்கு: 0779462840


### உறுதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கான உறுதிகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு வந்துள்ளன. இத் திட்டத்தில் இணைந்து கொண்டவர்கள் உறுதியினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)


After A/L >>Be a Degree Holder in Medical Field
Learn Sri Lanka Medical Council Approved

## HND in Pharmacy

Get a Government Job
Or Work in UK ?
Be a world Recognized Degree Holder !

Quality Assured

மருத்துவக்கல்வியின் முன்னோடிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக...

Lectures by MBBS Doctors
Guidance from Qualified Pharmacists
Internship Arrangements Free of Charge

Mode of Study : Part Time/Week end Classes
Entry Requirements: Pass in Chemistry in G.C.E A/L(3 s)

Free Counseling Available now !
Visit us for details
Call for appointments only :0777302882

**Knowledge Universe®**
Malaysian College of Business and IT
Tel: 0777302882 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)


## அறிவித்தல்

### சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), சாவகச்சேரி.

### கிளைக் குழுக்களைத் தெரிவு செய்தல் 2011-01-09 ஞாயிறு

மேற்படி சங்கத்தின் துணை விதி 20.02 இன் படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக இக் கிளைகளின் பொதுச் சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 9இக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறும் என யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**01. கிளைப் பொதுச் சபைக் கூட்டம் ஆரம்பம்: 2011.01.09 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு**

**02. கூட்டம் நடைபெறும் இடங்கள் விவரம் கீழ்வருமாறு:**

| தொடர்.இல | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | 184 | நாவற்குழி விற். நிலையம் | உதயதாரகை ச.ச.நிலையம், செல்வாநகர், நாவற்குழி வடக்கு. |
| 02 | 185 | தச்சன்தோப்பு | காந்தி சனசமூக நிலையம், நாவற்குழி கிழக்கு. |
| 03 | 188 | கைதடிச் சந்தி | மின்னொளி சனசமூக நிலையம், கைதடிச் சந்தி. |
| 04 | 189 | கைதடி மேற்கு | சரஸ்வதி சனசமூக நிலையம், கைதடி மேற்கு. |
| 05 | 190 | கைதடி வடக்கு | செல்வா சனசமூக நிலையம், கைதடி வடக்கு. |
| 06 | 191 | கைதடி நுணாவில் | வளர்மதி சனசமூக நிலையம், மட்டுவில் தெற்கு. |
| 07 | 192 | மகிழடி | கலைமகள் சனசமூக நிலையம், மட்டுவில், வேரக்கேணி. |
| 08 | 193+194 | சந்திரபுரம்+மானாவளை | அம்பாள் சனசமூக நிலையம், மட்டுவில், சந்திரபுரம். |
| 09 | 198 | பெருங்குளம் | ப.தெ.வ.அ.கூ.சங்கப் பணிமனை, டச்சு வீதி, சாவகச்சேரி. |
| 10 | 200 | சரசாலை | மகேஸ்வரி சனசமூக நிலையம், சரசாலை தெற்கு. |
| 11 | 201 | வேம்பிராய் | அறிவொளி சனசமூக நிலையம், மீசாலை வடக்கு. |
| 12 | 202 | மீசாலை வடக்கு (சிக்னல்) | பனை வெல்ல உற்பத்தி நிலையம், மீசாலை வடக்கு. |
| 13 | 203 | மீசாலை மேற்கு | வீனஸ் சனசமூக நிலையம், மீசாலை மேற்கு. |
| 14 | 204 | கைதடி மத்தி | வளர்மதி சனசமூக நிலையம், கைதடி மத்தி. |
| 15 | 206 | கச்சாய் | சாவகச்சேரி கிழக்கு முன்பள்ளி, அல்லாரை தெற்கு. |

**அ.பாலன்**
**கௌரவ செயலாளர்,**
**சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**திகதி: 03.01.2011**
**டச்சு வீதி,**
**சாவகச்சேரி.**

(அ/574340)

## மரண அறிவித்தல்

### திருமதி வாசுகி கெங்கேஸ்வரன்

(யாழ்.பல்கலைக்கழகம், விவசாய பீடம் – 2004)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் ரொறன்ரோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வாசுகி கெங்கேஸ்வரன் 03.01.2011 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர் தேவாமிர்தசுந்தரம் (இலங்கை மின்சார சபை – சுன்னாகம், 1994 மின் அத்தியட்சகர்) மற்றும் இந்திரா தம்பதியரின் அன்பு மகளும் மனோகரன் கெங்கேஸ்வரனின் (யாழ்.பல்கலைக்கழகம் விஞ்ஞான பீடம், 1989, CIBC - Canada) பாசமிகு மனைவியும் வீஷ்மன், விதுரன் ஆகியோரின் பாசமிகு தாயும் திலீபன், பிரதீபன் (மொறட்டுவ பொறியியல் பீடம் – 2000, இங்கிலாந்து), வானதி ஏஞ்சல் நாகலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற க.சிவபாதசுந்தரம், க.திருஞானசுந்தரம் (கொழும்பு), சந்திரலேகா, செல்வத்திரவியம், குமுதமலர் சிவஞானம் ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்ற நா.சிவரூபராணி, ஐ.மனோகரன் (Ret. ADE), ம.பஞ்சாட்சரராணி ஆகியோரின் அன்பு மருமகளும் சீனுகா, ஸ்ரெபனிக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சித்தியும் தரணியாவின் அன்பு மாமியும் ஏஞ்சல் நாகலிங்கம் (பிரான்ஸ்), திலீபன், சர்மினி (ஆசிரியை, அ.த.க.பாடசாலை, இராமநாதபுரம் கிழக்கு), ம.கோணேஸ்வரன் ( Inspector of Police, Sri Lanka), ம.ரவீஸ்வரன் (ஆசிரியர், யூனியன் கல்லூரி), மனோறஜினி கிருபாகரன் (ஆசிரியை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி), மனோமாலினி சிறீகரன் (ஆசிரியை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.01.2011) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு (கனடா) தகனக்கிரியைக்காக Mt. Pleasant Cemetery இக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இந்திரா தேவாமிர்த சுந்தரம் குடும்பத்தினர்,
மனோகரன் குடும்பத்தினர்.
தொ.பே.: 0777280260, 0776679555,
0014169277426.

**புனித அந்தோனியார் வீதி,**
**சுன்னாகம்.**


adidas PUMA

## 2011 ஆம் ஆண்டில் உங்கள் நண்பன் ஒலிம்பியா ஸ்போட்ஸ் அன்புடன் வரவேற்கின்றான்







- விளையாட்டு வீரர்களுக்கு தேவையான சகல வகையான Boots, Spots shoes, Spikes, Bottoms, Shorts, Stocking, Hockey Stic மற்றும்
- சகல நிகழ்ச்சிகளுக்கும் ஏற்றவகையில் வெற்றிக்கிண்ணங்கள், வெற்றிக் கேடயங்கள், மெடல்ஸ்
- அணியினருக்குத் தேவையான சீருடைகள் (Jersey) வடிவமைத்து பெயர், இலக்கம் பொறித்து பெற்றுக்கொள்ள
- மெய்வல்லுனர் நிகழ்வுகளுக்குரிய Putt Short, Discus, Javelin, High Jump Post, Stop Watch, Cross Bar, Baton, Measuring Tap.
- உடல் பருமன் என்றகவலையிலிருந்து விடுதலை பெற தேவையான AB Circle, AB Pro, Orbitrek, Total Gym,Tread mill.
- பாடசாலைகள், கழகங்களுக்குத் தேவையான சகலவகையான Balls, Bats, Nets, Rackets, Table Tennis Table மற்றும்
- கௌரவிப்பு நிகழ்வுகளுக்குத் தேவையான மெடல்ஸ், நினைவு சின்னங்களை வடிவமைத்துப் பெற்றுக்கொள்ள
- மாணவ தலைவர்கள், மாணவர்களுக்கு தேவையான Badges போன்றவற்றை உங்களுக்கு ஏற்றவகையில் பெற்றுக்கொள்ள
- பாண்ட் வாத்தியக் கருவிகள் அதன் உதிரிப்பாகங்கள்
- பொதுஅமைப்புக்களுக்கு தேவையான T.Shirt, Cap போன்றவற்றை வடிவமைத்து பெற்றுக்கொள்ள.

**போன்றவற்றை ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக்கொள்ள..**

**ஒலிம்பியா ஸ்போட்ஸ்** 06, ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம். T.P: 222 3490, 0778010219, 0778060267.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இதுவும் ஒரு வகை இன ஒடுக்கலே!

இறுதிக்கட்டப் போரின்போது சரண் அடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களில் எழுநூற்று மூன்று (703) உறுப்பினர்கள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

ஓமந்தை முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்குத் தலைமை வகித்தவர்களும், குண்டுத் தாக்குதல்கள் நடத்தியவர்களும், புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களும் அடங்குவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இறுதிப்போர் முடிந்து ஒன்றரை வருடங்களுக்குப் பின்னராவது இப்படி ஓர் அறிவிப்பு வந்திருப்பது சம்பந்தப்பட்டவர்களின் உறவுகளுக்கு சிறு ஆறுதலைத் தந்திருக்கும். சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, விவகாரங்கள் நீதிமன்றத்துக்கு வரும்போதே அவற்றின் தாற்பரியங்கள் தெரியவரும். ஒவ்வொருவர் மீதான குற்றப் பத்திரிகைகளிலும் தெரிவிக்கப்படும் விவரங்களைப் பொறுத்தே வழக்கு விசாரணைகள் எவ்வளவு காலத்துக்கு நீடித்துச் செல்லும் என அனுமானிக்கலாம்.

1983ஆம் ஆண்டிலிருந்தே சந்தேகத்தின் பேரில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களில் எழுநூற்று முப்பத்து நான்கு (734) பேர்கள் குற்றப்பத்திரிகைகள் எதுவும் சமர்ப்பிக்கப்படாமல் சிறைகளில் அடைத்து, தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன் ஒப்பிடுகையில் இறுதிப்போரின்போது கைது செய்யப்பட்ட 703 முன்னாள் போராளிகளின் நிலைமை சற்றுப் பரவாயில்லை என்று எண்ண வைக்கிறது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ், வெறும் சந்தேக நபர்கள் என்ற முத்திரை குத்தப்பட்டுச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருப்போரில் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் அடங்குவர்.

அப்போது இளைஞர்களாகவும், யுவதிகளாகவும் கைது செய்யப்பட்டுச் சென்றவர்கள் தமது வசந்த காலத்தை இழந்து, நோய், நொடியால் நொய்ந்து நடைப்பிணங்களாகக் காலத்தைப் போக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற நிலையில் படையினராலும் பொலிஸாராலும் கைது செய்யப்பட்டவர்களே இவர்களில் மிகப் பலருமாவர்.

சந்தேக நபர்கள் என்ற முத்திரையுடன் சுமார் மூன்று தசாப்தங்களாக இத்தனை பேர்களின் வாழ்வும் சீரழிக்கப்பட்டுள்ளது என்றால் அது ஒரு வகை இன ஒடுக்கல் எனக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஜனநாயக நாடு ஒன்றில் மக்களில் ஒரு சாரார் மீது இருபத்தெட்டு வருடங்களாக, அவர்கள் மீது எவ்விதக் குற்றச்சாட்டுக்களையும் சுமத்த முடியாத அரசு நூற்றுக்கணக்கானவர்களைச் சிறையில் அடைத்து வைத்திருப்பது மிகப்பெரும்மனித உரிமை மீறலுமாகும்.

அரசியல் கைதிகள், சந்தேக நபர்கள் என்று தனக்கு வாய்ப்பான பதங்களைப் பயன்படுத்தி நாட்டின் குறிப்பிட்ட ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களை மனித நேயம் சிறிதுமின்றி நீண்ட காலமாகச் சிறையில் அடைத்து வைத்திருப்பது குறித்து ஒரு ஜனநாயக நாட்டின் அரசு வெட்கப்பட வேண்டும். தனது ஆட்சிக்காலத்தில் மனித உரிமை மீறலும், இன ஒடுக்கலும் நடைபெறவில்லை என்று, இப்போது ஆட்சியில் உள்ள அரசு வாதம் செய்ய முடியாது. சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்த முடியாத நிலை தொடருவதற்கான காரணங்களைக் கண்டறிவதற்கேனும் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். முந்திய அரசின் காலத்தில் தவறு இடம் பெற்றதா, அதாவது வெறும் சோடித்தல் நடைபெற்றிருக்கிறதா என்பதனைக் கண்டறிய வேண்டிய பொறுப்பு இப்போது பதவியில் உள்ள அரசுக்கு உண்டு; அதன் தார்மீகப் பொறுப்புமாகும்.

இத்தகைய ஒரு நிலையில், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் நூற்றுக் கணக்கில் சந்தேகத்தின் பேரில் இருபத்தெட்டு ஆண்டுகால இடைவெளியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தால், ஆட்சியில் உள்ள அரசு இது விடயத்தில் கைகட்டி வாய்பொத்திப் பார்த்திருக்குமா? இல்லை!

பெரும்பான்மையினருக்கு ஒரு நீதி, சிறுபான்மையினருக்கு இன்னொரு நீதி என்பது ஜனநாயகம் ஆகாது. இதனை அரசும் அதன் அதிகாரிகளும் எப்போது புரிந்துணரப் போகிறார்கள்? இலங்கையின் இன ஒடுக்கல் என்று இதனைக் கொள்வதில் தப்பு ஏது?

# பனம்பொருள் உற்பத்தியை மேம்படுத்த இந்தியாவிடம் உபகரணம் கொள்வனவு

யாழ்ப்பாணம், ஜன. 5

பனம் பொருள் உற்பத்தித் துறையினை மேம்படுத்தும் நோக்கில் இந்தியாவிடம் இருந்து உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதற்கெனப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம், பொது முகாமையாளர் பாலோகநாதன் ஆகியோர் இந்தியாவுக்குப் பயணம் செய்யவுள்ளனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 30 திகதி வரை இந்தியாவில் தங்கியிருந்து அந்த நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் பனம் பொருள் உற்பத்தித்துறையின் சிறப்பம்சங்களை நேரில் அவதானித்து ஆராய்ந்து அறியவுள்ளனர்.

கோயம்புதூரில் பனை மரம் ஏறுவதற்கு உதவும் இயந்திரம் ஒன்றைப் பார்வையிட்டு அதன் பயன்பாடு எந்தளவுக்கு அவசியமானது என ஆராய்ந்து அதனைக் கொள்வனவு செய்வதற்கும் இதன்போது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வேலூரில் கைப்பணிப் பொருள்கள் வடிவமைப்பு மற்றும் பனம் ஓலைகளுக்குப் பங்கஸ் பிடிக்காமல் எவ்வாறு பாதுகாப்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது.

மாதவரம், எட்மோர் என்ற இடத்தில் பதனீர பதப்படுத்தல் பதனீரைப் போத்தலில் அடைத்தல் போன்ற செயற்பாடுகளையும் இவர்கள் ஆராயவுள்ளனர்.

பலவேட்காடு, திருச்செந்தூர், தூத்துக்குடி இராமநாதபுரம் ஆகிய இடங்களில் பனங்கட்டி, பனம் சீனி, கற்கண்டு ஆகியன தயாரிக்கும் முறைகள் குறித்தும் இவர்கள் ஆராயவுள்ளனர். (ம-14)

## சென்னைக்குத் தங்கம் கடத்த முற்பட்டவர் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது

கொழும்பு, ஜன.5

1.3 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்கத்தை கடத்த முற்பட்ட ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை நோக்கி புறப்படவிருந்த விமானத்தில் ஏறமுயன்றபோது, அவர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கடத்த முற்பட்ட தங்கம் 324 கிராம் எடையுடையதென விமான நிலைய சுங்க அதிகாரி பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்தார்.

வெள்ளைப் பூடுகள் வைக்கப்பட்டிருந்த பையொன்றில் மேற்படி தங்கம் மறைத்து வைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

சந்தேக நபருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுன் தங்கமும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் விமான நிலைய சுங்க அதிகாரி தெரிவித்தார். (ம)

# சகல ஆவணங்களையும் கையளித்தால் கால தாமதத்தைத் தவிர்க்க முடியும்

## '49 சிசி' உரிமையாளர்களுக்கு அறிவுறுத்து

யாழ்பாணம்,ஜன.5

யாழ். செயலகத்தில் உள்ள மோட்டார் திணைக்களத்திற்கு "49 சிசி" ரக மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்ய வருபவர்கள் அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்தால் கால தாமதமின்றிப் பதிவு செய்யப்படும்.

அவதானமாக செயற்பட்டு வீண் அலைச்சல்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

"49 சிசி" ரக மோட்டார் சைக்கிள்களைப் பொதுமக்கள் பதிவு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக எழுந்த குற்றச்சாட்டை அடுத்து அந்த அதிகாரியுடன் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

'49 சிசி' ரக மோட்டார் சைக்கிள்கள் பதிவுசெய்வதற்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிவரையும், கடந்த நவம்பர் மாதமும் அவகாசம் வழங்கப்பட்டது.

இருப்பினும் இது குறித்து பொதுமக்கள் அசண்டையீனமாக இருந்துவிட்டுத் தற்போது பொலிஸார் கடுமையாகப் பரிசோதிக்க ஆரம்பித்த பின்னர் ஒரு சில ஆவணங்களைவிட்டு விட்டுப் பதிவுகளுக்காக வருகிறார்கள்.

இதனால்தான் பொதுமக்கள் வீண் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதுவொன்றும் அதிகாரிகளின் அசண்டையீனமாக இருக்கமுடியாது.

எனவே, இது விடயத்தில் பொது மக்கள் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும். குறிப்பாக பதிவுகளுக்கு வருகின்றவர்கள் சகல ஆவணங்களையும் கொண்டு வருவதுடன் நண்பகல் 12.30 மணிக்கு முன்னர் வருகை தரவேண்டும்.- என்றார்.(ம-9)

## மீண்டும் போட்டியிட மாட்டாராம் மட்டு. மேயர்

கொழும்பு, ஜன.05

மட்டக்களப்பு மாநகர சபை கலைக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப்பட்டால் மீண்டும் போட்டியிட மாட்டேன் என மட்டக்களப்பு மாநகர மேயர் சிவகீத்தா பிரபா கரன் தெரிவித்துள்ளார்.

எனினும் 'ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வெற்றிக்காக உழைப் பேன்' என அவர் மேலும் குறிப்பிட்டார். மட்டக்களப்பு மாநகர சபையின் பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் ஒன்றரை வருடங்கள் இருக்கின்றன.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாநகர சபை கலைக்கப்படுமா என்பது தொடர்பில் தெளிவின்மை காணப்படுகின்றது. இந்த நிலையிலேயே மட்டக் களப்பு மாநகர சபை மேயர் இவ்வாறு தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## குடாநாட்டிலும் அரச ஊழியர்கள் சத்தியப் பிரமாணத்துடன் கடமையேற்பு

யாழ்ப்பாணம்,ஜன.5

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்புரைக்கு அமைவாக நேற்று முன்தினம் யாழ். குடாநாட்டு அரச திணைக்களங்களில் சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டு தமது கடமைகளை ஆரம்பித்தார்கள்.

யாழ்.செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் அனைத்து ஊழியர்களும் காலையில் தேசியக் கொடி ஏற்றி தேசிய கீதம் இசைத்துத் தொடர்ந்து மறைந்த இராணுவ வீரர்கள் மற்றும் நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வை மேற்கொண்டதை தொடர்ந்து சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டார்கள்

இதேபோன்று யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் உதவி அரச அதிபர் பணிமனைகள் உட்பட ஏனைய அரச தாபனங்களிலும் இந்த நடைமுறை பின்பற்றப் பட்டது.

பாடசாலைகளிலும் நேற்று முன்தினம் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கூடி தேசியக் கொடி ஏற்றி, தேசிய கீதம் பாடி சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டு பாடசாலைகளும் ஆரம்பமாகின.

புத்தாண்டில் அரச அலுவலர்கள் அனைவரும் மக்களுடைய வரிப் பணத்தில் இருந்து சம்பளம் பெறும் ஊழியர்கள் என்ற வகையில் மனித நேயத்துடன்மக்களுடைய தேவைகளை நிறைவு செய்யவும் மக்களை மனித நேயத்துடன் நடத்தவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-86)

## வலி.வடக்கில் வீதிகள் புனரமைக்கப்படவில்லை மீள்குடியமர்ந்த மக்கள் சிரமத்தின் மத்தியில்

வலி. வடக்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் வீதிப் புனரமைப்பு பணிகள் தாமதமடைந்து வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பற்றைக் காடுகளால் மூடப்பட்டிருந்த வீதிகள் மக்களாலும், 'பெக்கோ' இயந்திரங்கள் மூலமாகவும் துப்புரவாக்கப்பட்டன. இருப்பினும் வீதிகளை தார் கலவையிட்டு செப்பனிடும் பணிகள் இடம்பெறவில்லை.

இதனால் அந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது இடங்களை மீளக் கட்டியெழுப்புவதில் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்கிவருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக மாவட்ட செயலக அதிகாரிகளிடம் கேட்டபோது,

அந்தப் பகுதிகளில் உள்ள வீதிகளின் திருத்தத்திற்கான மதிப்பீடுகள் இதுவரை தமக்கு கிடைக்கவில்லை. இதன் காரணமாகவே அந்தப் பகுதிகளில் வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை. மதிப்பீடுகள் கிடைக்கும் பட்சத்தில் உடனடியாகவே அவற்றை ஆரம்பிக்க முடியும்.- என்று தெரிவித்தனர். (ம-15)

## நாளை

| | | |
|---|---|---|
| மார்கழி 22 | | 06.01.2011 |
| | | வியாழக்கிழமை |
| திதி: | : | துதியை |
| | | பி.ப.04.47 வரை |
| நட்சத்திரம் | : | திருவோணம் |
| [illegible] | | [illegible] |
| [illegible] | : | [illegible] வரை |
| ராகுகாலம் | : | 02.01-03.31 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் சிறுவர்கள் 150 பேருக்குச் சைக்கிள்கள்

யாழ்.குடாநாட்டில் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள சிறுவர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் அடங்கலாக 150 பேருக்குச் சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புச் சேவைகள் நிலையத்தினால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தச் துவிச்சக்கர வண்டிகள் வழங்குவதற்கான நிதியுதவிகளை சிறுவர் அபிவிருத்திப் பெண்கள் வலுவூட்டல் அமைச்சு வழங்கியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகத்திலிருந்தும் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள சிறுவர்கள் 90 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் யுத்தத்தின்போது சரணடைந்த 60 சிறுவர் போராளிகளுமாக 150 பேருக்கே இந்தச் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன. (ம-15)


**Computer Express**
**Institute of Information Technology**
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

**விசேட கட்டணக்கழிவுடன்**
**O/L பரீட்சை எடுத்த மாணவர்களிற்கான புதிய பிரிவுகள்**

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 1000/= 3 Months | Diploma in Desktop Publishing 1000/= 4 Months | Diploma in Web Page Designing 1000/= 3 Months |
| Diploma in Graphic Designing 1000/= 4 Months | Diploma in Hardware Engineering 1000/= 3 Months | Diploma in Auto CAD 1000/= 3 Months |
| Diploma in Computer Science 1000/= 4 Months | Honors Diploma in Computer Science 1000/= 3 Months | |

**Advances Courses**
Diploma in Video Editing 4Months -1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும் ஏராபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Batch i - 07/01/2011 9am or 3pm
Batch ii - 08/01/2011 9am or 3pm
Batch iii - 09/01/2011 9am or 3pm
Batch iv - 12/01/2011 9am or 3pm

15/01/2011 க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

கம்பனிக்கணக்குகளை உள்ளடக்கி முன்னணி Accounting Software களினூடாக
**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Book + MYOB (5 User)
Tally Accounting Package
Tally Date மாற்றலாமா?? முடியும்.....
Course Fee - 1000/=
ஆரம்பம் : 08/01/2011 09/01/2011 02.00PM



# கைலாசநாத வேத சிவாகம பாடசாலை

அமரர் நயினை
**சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக் குருக்கள்**
நினைவாக வேத, ஆகமப் பாடசாலையில்
இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட
சாஸ்திரிகளினால் இலவசமாக வேத, ஆகம
பாடங்கள் கற்பிக்கப்படவுள்ளன.
மேலும் சோதிடம், திருமுறை, காவியம், கணினி,
ஆங்கிலம் போன்ற பாடங்களும்
கற்பிக்கப்படவுள்ளன. முழுநேர மாணவர்களுக்கு
இலவசமாக தங்கி நின்று கற்கும்
வசதிகளும் உண்டு.
பகுதிநேர வகுப்புகளும் நடைபெறும்.
எமது பாடசாலையில் 3வருட பாடத்தினை
பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு அவர்களுடைய
மேலதிக கல்விக்காக எமது செலவிலேயே
இந்தியாவின் சிவபுர பாடசாலை, பிள்ளையார்பட்டி
பாடசாலை ஆகியவற்றில் கற்க வசதிகள் செய்து
தரப்படும். வகுப்புகள் விரைவில்
ஆரம்பிக்கப்படவுள்ளதால் கற்கவிரும்பும்
மாணவர்கள் 15.01.2011 இற்கு முன்னர்
எம்மிடம் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**சிவஸ்ரீ ஐ.கைலை வாமதேவக்குருக்கள்,**
**கைலாசநாத வேத சிவாகமப் பாடசாலை.**
(Reg No: HA-4/JA/262)
தொ.பே.: 021 222 6910, 021 3219513.
376/79, இருபாலை வீதி, கோண்டாவில்.

(108466)


# கண்ணீர் அஞ்சலி

## பொன்னுச்சாமி நாகலிங்கம்



எண்ணற்கரிய பிறவியிலே குடும்பத்தின் குலவிளக்காக
நீர் உதித்து வாழ்வு மலர மனைவியின் கரம்பிடித்து
வாழ்வாங்கு வாழ்ந்து நானிலம் போற்ற மக்களை
மருகரைப் பேரரைக் கண்டு மகிழ்ந்து செல்வத்தின்
செழிப்போடு செல்வச் சீமானாய் தரணிபோற்ற
வாழ்ந்து இன்முகத்தோடு வரவேற்றுத் தானம் தவம்
கருணை பல செய்து புகழ் பூத்த தண்ணொளியாய்
வாழ்ந்து சிவனடி சேர்ந்தீரே!

அன்புடனும் பண்புடனும் பூவுலகில்
வாழ்ந்து நேசத்துடனும் பாசத்துடனும்
எம்மோடு பழகி இன்சொல் பேசி எல்லோருக்கும்
இன்முகம் காட்டிச் சுற்றத்தவருடன் அன்பும்
ஆதரவும் கொண்டு என்றும் நல்லவராய் எல்லோருக்கும்
உதவிசெய்யும் உத்தம குணத்துடன் வாழ்ந்தவரே!
இன்று உங்கள் பிரிவு எம்மை வாட்டுகிறதே!
இதயமலரால் அஞ்சலி செய்து பிரார்த்திக்கின்றோம்.

எமது சக மாணவன் நா.கமலபாஸ்கரன் அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் பொன்னுச்சாமி நாகலிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**Students University of Wolver Hamton**
**United Kingdom.**

(108462)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய வெங்காயம் இறக்குமதி செய்யப்படாமை குடாநாட்டில் அதன் விலை உயரக் காரணமாம்

யாழ்ப்பாணம். ஜன.5

யாழ். குடாநாட்டில் வெங்காயத்தின் விற்பனை விலை என்றுமில்லாதவாறு தற்போது அதி கரித்துக் காணப்படுகிறது.

திருநெல்வேலிச் சந்தையில் வெங்காயம் கிலோ இருநூறு ரூபா முதல் இருநூற்று நாற்பது ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

விவசாயிகள் மழைக்குரிய காலப் பகுதியில் வெங்காயச் செய்கையில் ஆர்வம் காட்டுவது குறைவான நிலையில் நவம்பர், டிசெம்பர், ஜனவரி ஆகிய மாதங்களில் வெங்காயத்தின் விலை அதிகரித்துக் காணப்படுவது வழமையாகும்.

ஆனால், இம்முறை வெங்காயம் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுவதற்கு முக்கிய காரணம், இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்படாமையே என்று துறைசார் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் இந்தியாவில் பெய்த கடும் மழை காரணமாக அந்த நாட்டில் வெங்காயச் செய்கை முழுமையாகப் பாதிப்படைந்துள்ளது.

அதன் காரணமாக இலங்கைக்கு தேவையான வெங்காயத்தை இறக்குமதி செய்ய முடியாமல் இருக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

தொடர்ச்சியாகப் பெய்த மழை வெள்ளம் காரணமாக வெங்காயப் பயிர்கள் அழிவடைந்துள்ளன. மேட்டு நிலப் பகுதியிலுள்ள பயிர்கள் ஓரளவு அழிவடையாமல் இருக்கிறது.

வெங்காயத்துக்கு மாற்றீடாக சமையலுக்கு உள்ளியைப் பயன்படுத்தலாம் என்றாலும் அதன் விலையும் உயர்ந்தே உள்ளது என்றார். இதேவேளை விதை வெங்காயத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(ம-14 -26)

## கல்வி மேம்பாடு...



ஊக்குவிப்பு: ஜேர்மனியில் உள்ள 'வெற்றிமணி' அமைப்பின் ஏற்பாட்டில் ஏழாலைப் பகுதியில் தரம் 5 இல் கல்வி கற்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. ஏழாலை வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சே.குபேரநாதன் மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணம் வழங்குகிறார்.

# போதையில் இளைஞர்கள் செம்மணியில் அட்டகாசம்

## பொது மக்கள் முகஞ்சுழிப்பு



செம்மணி, ஜன. 5

செம்மணி நீரேரியில் இளைஞர் கும்பல் ஒன்று மது போதையில் அரைகுறை ஆடைகளுடன் நீராடியதுடன் வீதியில் வாகனங்களில் சென்றவர்களுடனும் சேஷ்டை விட்டனர். இதனால் பொதுமக்கள் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

இந்த இளைஞர்களில் பலர் யாழ்.நகரில் கஸ்தூரியார் வீதிப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

சிறிய ஹன்ரர் வாகனம் ஒன்றில் வந்து இவர்கள் செம்மணியில் ஏ-9 வீதியில் உப்பளப் பக்கம் இருந்து மறுபக்கமாகப் பாய்ந்த வெள்ள நீரில் அரைகுறை ஆடைகளுடன் இறங்கிக் குளித்தனர்.

இவர்கள் தண்ணீரில் நின்றபடி வீதியில் சைக்கிளில் சென்ற யுவதிகளையும், பஸ்ஸில் சென்ற யுவதிகளையும் தகாத வார்த்தைகளால் திட்டினர். வாகனங்களின் குறுக்கே பாய்ந்தும் மறித்தும் சண்டித்தனத்திலும் ஈடுபட்டனர். உள்ளாடைகளுடன் சில சமயம் அதுவுமின்றித் தண்ணீரில் இருந்து எழுந்து வந்த இவர்களின் அட்டகாசம் தாங்க முடியாததாக இருந்தது என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

மேற்படி வீதியால் சென்ற பெண்கள் என்ன செய்வது எனத் தெரியாது கலக்கத்துடன் தலை குனிந்தவாறு சென்றதனையும் அங்கு அவதானிக்க முடிந்தது.

கும்பல் தமக்குத்தாமே சண்டையிட்டு விட்டு பின்னர் வாகனத்தில் ஏறிச் சென்றது.

இதே நேரம் இவர்களின் இந்த அநாகரிகச் செயலைக் கண்டு புத்திமதி சொல்லப்போன பெரியவர் ஒருவர் வாங் கிக் கட்டிக் கொண்டார். பின்னர் அவர்களிடம் இருந்து விடுபடுவதே அவருக்குப் பெரும் பாடாகிப் போனது.

(உ-288)




# யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்திலுள்ள கடிகாரம் செயற்படவில்லை

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ். மணிக்கூட்டு கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ள டிஜிற்றல் கடிகாரம் கடந்த ஒரு மாத காலமாக செயற்படாத நிலையில் உள்ளது.

அண்மையில் பெய்த கனத்த மழையினால் இந்தக் கடிகாரம் பழுதடைந்துள்ளது. இதனால் வீதியால் செல்லும் மக்கள் நேரத்தைத் சரிபார்க்க முடியவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

நகரின் மத்தியில் உள்ள இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தின் டிஜிற்றல் கடிகாரத்தை மீள திருத்தியமைப்பதற்கு சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(201-26)

# சுகாதார சேவைகள் அமைச்சின் வடமாகாண செயலாளர் பணிமனை யாழ்.மார்டீன் வீதியில்

யாழ்ப்பாணம்,ஜன.5

சுகாதார சேவைகள் அமைச்சின் வடமாகாண செயலாளர் பணிமனை மற்றும் திணைக்களம் ஆகியன யாழ்.மார்ட்டீன் வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் செயற்படவுள்ளன.

அந்த வகையில் திணைக்களத்தின் செயற்பாடுகளை எதிர்வரும் தைப்பூச தினத்தன்று ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார சேவை பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, செயலாளர் பணிமனை மற்றும் திணைக்களம் போன்றவற்றுக்கான தளபாடங்கள் மற்றும் இதர பொருள்கள் இந்த வாரத்தில் வந்து சேரவுள்ளதாகவும் மேற்படி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(201-26)

# குடாநாட்டில் டெங்குத் தாக்கம் கடந்த வருடத்தில் தணிவு

சண்டிலிப்பாய்,ஜன.5

யாழ்.மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டை விட கடந்த 2010 ஆம் ஆண்டு டெங்கு நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை பல மடங்கு குறைவடைந்துள்ளதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளைடெங்கு நோயின் அபாயம் குறித்து சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளாலும் மக்கள் மத்தியில் இந்த நோய் தொடர்பான விழிப்புணர்வுமே நோய்க்கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

நுளம்பால் ஏற்படும் டெங்கு நோயின் பரம்பல் மழை காலத்தில் ஆரம்பமாகி மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை எழுநூறுக்கும் அதிகமானோர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதேவேளை 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை சுமார் 100 பேர் வரை இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த வருடம் இந்த நோயின் தாக்கம் குறித்து இனம் காணப்பட்ட இடங்களில் நுளம்புகள் உற்பத்தியாவதைத் தடுக்கும் வகையில் புகையூட்டும் நடவடிக்கையில் சுகாதார பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

வலி.மேற்கில் மூளாய் சுழிபுரம் ஆகிய இடங்களில் தற்போதைய புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ம-135)

# தனியார் பாதுகாப்புச்சேவை இடம்பெறாமையால் சாவகச்சேரி வைத்தியசாலையில் நெருக்கடி

தென்மராட்சி, ஜன.5

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தனியார் பாதுகாப்பு சேவை கடந்த மூன்று தினங்களாக இடம் பெறவில்லை.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

கடந்த இரண்டு வருடங்களாக இந்த வைத்தியசாலையில் தனியார் பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர்கள் இரவு,பகல் சேவையில் சுழற்சி முறையில் பணியாற்றி வந்தனர். பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர்கள் பணியாற்றியதால் இங்கு கடமையாற்றிய இரு காவலாளிகள் வேறு வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த மூன்று தினங்களாக பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்கள் கடமைக்கு வராததால் வைத்தியசாலை நிர்வாகத்தினர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஏற்கனவே ஆண் சிற்றூழியர்கள் பற்றாக்குறையாக உள்ள நிலையில் காவலாளி வேலைகளையும் சிற்றூழியர்களே கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(201-207)

# பனை அபிவிருத்திச் சபைக்கு இணையத்தளம்

யாழ்ப்பாணம், ஜன.05

பனை அபிவிருத்திச் சபைக்கான இணையத்தளம் ஒன்று விரைவில் புதிதாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. 'கற்பகச் சோலை' என்ற பெயரிலேயே இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

தைப் பொங்கல் பண்டிகைக்கு அடுத்துவரும் நாள்களில் இந்தப் புதிய இணையத்தளம் www.katpahachcholai.com என்ற முகவரியுடன் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் சிறு தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக இந்த இணையத்தள சேவையை ஆரம்பித்த வைப்பார் என பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

(ம-14)

# குடாநாட்டில் 8 லட்சம் ரூபா செலவில் இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்.மாவட்டத்தில் 8லட்சம் ரூபா செலவில் இரண்டு இடங்களில் ஆரம்ப சுகாதார பிரிவு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித [illegible] நிதியத்தின் கீழ் இந்த வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள வித்தகபுரம் பகுதியில் 5 லட்சம் ரூபா செலவிலும் அரியர்லைப் பகுதியில் 3 லட்சம் ரூபா செலவிலும் இந்த ஆரம்ப சுகாதார பிரிவு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதுடன் இதற்குரிய வேலைத் திட்டங்களை கிராம மட்ட அமைப்புகள் மேற்கொள்ள உள்ளன.

இவ்வாறான ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுவதனால் அப்பகுதி மக்களின் சுகாதாரத் தேவைகள் ஓரளவாவது பூர்த்திசெய்யப்படும் என நம்பப்படுகின்றது.

(ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்யப்பட்டது 1Kg 450 மட்டும்.
காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே:- 021 222 6944



## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
## யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

**விவசாயப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்**

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது. பதிவிலக்கம் TVEC p 25/0026

- புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய செய்முறை ஊடான பயிற்சி
- க.பொ.த (சாதாரணம்/ உயர்) தரம் கற்ற அனைத்துப்பிரிவு மாணவர்களுக்கும்
- 17-26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாருக்குமான இலவச பயிற்சி நெறி
- பயிற்சி பெறும் காலத்தில் உதவு தொகை வழங்கப்படும்
- நூலகம், கணினி, ஆய்வுகூட வசதிகளை உள்ளடக்கியது
- பேராசிரியர் நித்தி கனகரட்ணம் அவர்களின் வழிகாட்டலில் அனுபவமிக்க விரிவுரையாளர்களால் பயிற்சி வழங்கப்படுகிறது.
- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புகளைப் பெறவும் சுயதொழில் வாய்ப்புகளைப் பெறவும் ஏற்ற பயிற்சி நெறி

**விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி**

விவசாய மூலதத்துவம், பயிர்வேளாண்மை, விலங்குவேளாண்மை, பூங்கனியியல், பண்ணை முகாமைத்துவம், கமப் பொறியியல் (ஆண்கள்), மனைப்பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய ஒரு வருடகால பயிற்சி நெறி

**விவசாய சான்றிதழ் பயிற்சி நெறி**

விவசாய மூலதத்துவம், பயிரியல், விலங்குவேளாண்மை, பூங்கனியியல், உணவு பதனிடல் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய 4 மாத பயிற்சி நெறி

டிப்ளோமா பயிற்சி நெறியில் சேர விரும்புவோர்10.01.2011 இலும், சான்றிதழ் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 11.01.2011 இலும் காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெற இருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு
அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்.
மருதனார்மடம், சுன்னாகம்.
தொலைபேசி இலக்கம் 0213214571
மின்னஞ்சல் jcagriintitute @ yahoo.com (108460)


## கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் புதிய கட்டடத்துக்கு மாற்றம்

வண்ணை, ஜன.5

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் 2011ஆம் ஆண்டுக்கான பணிகள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் புதிய பணிமனையில் இயக்குநர் வண. நெக்னோ அடிகளார் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ். மத்தியூஸ் வீதி, தியோகு சதுக்கத்தில் நிறுவனத்திற்குச் சொந்தமான காணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்திலே மேற்படி புதிய பணிமனை அமைந்துள்ளது.

குறிப்பிட்ட இடத்தில் வெவ் வேறாக மூன்று கட்டடத்தில் இயங்கிவந்த பொது நிர்வாகப் பிரிவு, சுனாமி பிரிவு, மற்றும் கமநலப் பிரிவு, உளசமூக விழிப்பூட்டல் பிரிவு போன்ற கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் முன்னெடுக்கும் சகல வேலைத் திட்டங்களும் ஒரே கட்டடத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. (ம-160)

## ஹசலக்க காட்டின் நடுவில் இரண்டு கஞ்சா தோட்டங்கள்

கொழும்பு, ஜன.5

கதிர்காமம் ஹசலக்க பொலிஸ் வலயத்துக்கு உட்பட்ட யகங்கல பிரதேசத்திலுள்ள காட்டின் நடுவில் பெரிய அளவில் நடத்தப்பட்டு வந்த இரண்டு கஞ்சாத் தோட்டங்கள் முற்றுகையிடப்பட்டதாக ஹசலக்க பொலிஸார் தெரிவித்தனர்.

ஹசலக்க பொலிஸ் பொறுப்பதிகாரி யூ.டீ.குணதிலக தலைமையில் சென்ற பொலிஸ் குழு இந்தத் தோட்டங்களை முற்றுகையிட்டு சுமார் 2 ஆயிரம் கஞ்சா செடிகளை அழித்துள்ளது.

காட்டுக்குள் மேலும் தேடுதல் நடப்பதாகவும் தப்பிச் சென்றுள்ள சந்தேக நபர்களைக் கைதுசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-5)

## முதியவர் காயம்

தென்மராட்சி, ஜன.5

முருங்கை மரத்தில் சிக்கியிருந்த தென்னோலையை எடுப்பதற்காக ஏறிய முதியவர் மரக்கிளை முறிந்ததில் விழுந்து காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் மட்டுவில் சந்திரபுத்தில் இடம்பெற்றது.

இதேஇடத்தைச் சின்னத்தம்பிகிருஷ்ணன் (வயது 74) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-207)

## விபத்தில் காயம்

தென்மராட்சி, ஜன.5

மீசாலை ஏ-9 வீதியில்இடம்பெற்ற வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் சாவகச்சேரி வடக்கு மடத்தடியைச் சேர்ந்த எஸ்.ரீசா (வயது 62) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-207)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 10.07.1924

விண்ணில்: 06.12.2010

அமரர்
**பரமு தெய்வேந்திரன்**

அன்பின் பிறப்பிடமாய், அறிவின் இருப்பிடமாய், பண்பின் பொக்கிசமாய் இவ்வுலகில் வாழ்ந்து வழிகாட்டிய எம் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி நேரில் வந்தவர்களுக்கும், பல வழிகளில் உதவியவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய வர்களுக்கும் எம் உளம் கனிந்த நன்றிகளைக் கூறிக் கொள்வதோடு எமது இல்லத்தில் இன்று(05.01.2011) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

7,பேக்கரி ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.





BCS @ IIS CITY CAMPUS

THE CHARTERED INSTITUTE FOR IT
Certificate in IT
Diploma In IT
PG Diploma in IT

Register before 12th Jan for April 2011 Exam
Course Commences : 23 / 01 / 2011

**IIS CITY CAMPUS**
200,Sivan Pannai Road, Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk


## நெஞ்சைவிட்டகலாத ஓராண்டு நினைவில்.....



புவியிர்ப்பு 07.07.1951

விண்ணேற்பு 17.12.2009

## திருமதி நாகலிங்கம் நேசமணி

திதி: பூர்வபக்க பிரதமை

எங்குசென்றாலும் எம்மிடம்
சொல்லி விட்டுப்போவீரே அம்மா
ஆனால் இன்று நீங்கள் சென்று
ஆண்டொன்று ஆனபோதும்
நீங்கள் எங்குசென்றீர்கள் என்று
சொல்லாது போனது ஏனோ அம்மா
ஆறாத சோகத்தையும் காயத்தையும்
எமக்குத் தந்தது ஏனோ அம்மா
(108433)

இன்று (05.01.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

38, ஜின்னா லேன்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

[illegible]
குடும்பத்தினர்.





சீட்டிழுப்பு இலக்கம் 713 திகதி 03-01-2011

வெற்றி எண்கள்

03 28 35 39 I

ஜக்பொட் பரிசு ரூ. 20,030,710/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 20,030,710/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 03 | 400,000/= | 1,200,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 2,000/= | 30,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 471 | 1,000/= | 471,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 740 | 1,000/= | 740,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 18065 | 60/= | 1,083,900/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8322 | 40/= | 332,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 211901 | 20/= | 4,238,020/= |
| | | மொத்தம் ரூ. | 8,095,800/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 600688046-1-41 |
| மொனராகலை | 600680138-9-09 |
| கேகாலை | 600687638-6-16 |
| கம்பஹா | 600695884-2-22 |
| நுவரேலியா | 600686363-1-41 |
| கொழும்பு | 600699705-1-21 |
| கண்டி | 600684070-0-20 |
| மாத்தளை | 600686414-0-30 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,495,800/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 20,602,300/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2011 ஜனவரி 06 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை.
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 23353467


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செட்டிகுளத்தில் போலி லேபல் ஒட்டப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல்கள் சிக்கின

வவுனியா, ஜன.5

வவுனியா செட்டிகுளம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் போலியான லேபல் ஒட்டப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த குடிதண்ணீர்ப் போத்தல்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் திடீர்ப் பரிசோதனையின்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த வாரம் செட்டிகுளம் பகுதியில் உணவகங்கள், கடைகள் ஆகியவற்றில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது போலியான லேபல் இடப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த குடிதண்ணீர்ப் போத்தல்கள் பிடிபட்டன. உடனடியாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் விசாரணைகளை மேற்கொண்டார். இதன் போது மேற்படி குடிதண்ணீரை உற்பத்தி செய்தவரின் விலாசம் போலியானதென்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதன் பின்னர் சகல குடிதண்ணீர்ப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. அத்துடன் சம்பந்தப்பட்டவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டது.

நோயாளர்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பான குடிதண்ணீர் வழக்குவதற்கென அதிகவிலை கொடுத்து வாங்கிக் கொடுக்கும் குடிதண்ணீரிலும் இவ்வாறான முறைகேடுகள் நடப்பது வேதனையான விடயமெனத் தெரிவிக்கப்பட்டது. (க-501)

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 4,816 குடும்பங்கள் மீள்குடியமர்வு

முல்லைத்தீவு, ஜன.5

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஐந்து கிராமங்களில் 4,816 குடும்பங்களைச் சேர்ந்த 14,853 பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக உதவி அரச அதிபர் திருமதி சுபாஜினி மதியழகன் தெரிவித்துள்ளார்.

மீள்குடியமர்ந்த இந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் விவசாய நடவடிக்கைக்கான உபகரணங்கள் தொண்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டதாகவும், தேவையான விதைநெல் விவசாயப் பகுதியினரால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இதைவிட கமநலச் சேவை நிலையத்தால் மானிய விலையில் உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் மேட்டுப் பயிர்ச் செய்கைக்கான விதைதானியங்கள் விவசாயப் பகுதியினரால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(க-500)

# அபிவிருத்திச் சங்கக் கூட்டம் கூட்டப்படாததால் பாடசாலை நிகழ்வுகளைப் புறக்கணிக்க முடிவு

முல்லைத்தீவு, ஜன.5

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் இரண்டு வருடங்களுக்கு மேல் கூட்டப்படாததால் பெற்றோர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தைக் கூட்டுமாறு பெற்றோர் பல தடவைகள் பாடசாலை அதிபரிடமும் செயலாளரிடமும் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் இதுவரை கூட்டம் கூட்டப்படவில்லை. அத்துடன் தாமாகவே சில முடிவுகளை எடுத்துவிட்டுப் பின்னர் தமக்கு அழைப்பு விடுவதாகவும் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கூட்டப்படாது ஏற்பாடு செய்யப்படுகின்ற எந்த நிகழ்விலும் பெற்றோர்கள் என்ற முறையில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லையெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

# சொந்தமாகக் காணிகள் இல்லாததால் கண்டாவளை மக்கள் பெரும் பாதிப்பில்

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் வாழும் பல குடும்பங்கள் சொந்தமாகக் காணி இல்லாததால் உதவிகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளதாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

கண்டாவளைப் பிரதேசத்தில் 80 இற்கும் அதிகமான குடும்பங்கள் சொந்தக் காணிகள் இல்லாமல் வாழ்ந்து வருகின்றன. குறிப்பாக வெளிக்கண்டல் ஆற்றங்கரையினை அண்டிய பகுதியில் அரச காணிகளில் உள்ள குடும்பங்களும், ஊரியான், முரசுமோட்டை ஆகிய பகுதிகளில் பன்னங்கண்டி ஆற்றங்கரையை அண்டிய பகுதிகளில் உள்ள குடும்பங்களுமே நிரந்தரக் காணியின்றி நீண்ட காலமாக வசித்து வருகின்றனர்.

இவர்களுக்கு நிரந்தரக் காணிகள் இன்மையால் நிரந்தர வீடுகளுக்கான அனுமதிகளோ அல்லது தற்காலிக வீடுகளை அமைப்பதற்கான அனுமதிகளோ வழங்கப்படுவதில்லை. இதனால் நீண்டகாலமாக இவர்கள் வீடுகளின்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேபோன்று ஊரியான் பிரதேசத்தில் பழைய கண்டி வீதியை அண்டியுள்ள பகுதியில் வாழும் 13 வரையான குடும்பங்களும், தாங்கள் நீண்ட காலமாக வசித்துவரும் காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக எந்தவித அடிப்படை வசதிகளுமின்றித் தாம் வாழ்ந்து வருவதாகவும் இவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (க-11)

## நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்...



பிரியாத உறவுகள்: முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் ஞா.தேவச்சந்திரன், வருமானவரி மேற்பார்வையாளர் வ.செ.திருச்செல்வம் ஆகியோருக்கு வழங்கப்பட்ட பிரிவுபசாரத்தின்போது சபை உத்தியோகத்தர்களுடன் காணப்படுகின்றனர். (72)




# விபத்தில் முதியவர் காயம்

முறிகண்டி, ஜன.5

முறிகண்டிப் பகுதியில் இடம்பெற்ற பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார்.

இச் சம்பவம் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த கே.சிதம்பரப்பிள்ளை (வயது 64) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(க-207)

# யுத்தத்தால் நோயாளிகளான ஐவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நிதியுதவி

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நிரந்தர நோயாளிகளான ஐவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நிதியுதவிகளை வழங்கியுள்ளார்.

சுவிஸ் நாட்டிலுள்ள 'சோலோ' வீடியோ சென்ரரின் நிதியுதவியுடன் அவர் இந்த உதவிகளை வழங்கினார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நிரந்தர நோயாளிகளாக மாறி பல்வேறு துன்பங்களை எதிர்கொண்ட ஐவருக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று அவர்களின் துன்ப துயரங்களை அறிந்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் இந்த நிதியுதவிகளை வழங்கினார்.

நோயின் தாக்கம் ஒருபுறம், இயற்கையின தாக்கங்கள் மறுபுறமென துயர்களை எதிர்கொண்டிருந்த சின்னத்தம்பி வீரசிங்கம், கோவிந்தபிள்ளை சிறிதரன், அருட்பிரகாசம் கோணேஸ்வரி, செல்வராசா ரேணுகா, சண்முகம் சித்திராதேவி ஆகியோரே நாடாளுமன்ற உறுப்பினரிடம் நிதியுதவியைப் பெற்றுக் கொண்டவர்கள் ஆவர்.

(க)

# கிளிநொச்சியில் இனங்காணப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் கையளித்தல்

(நேற்றைய தொடர்ச்சி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 540. GO-7002 | 571. HR-7477 | 602. JT-2616 | 633. NPJV-9788 | 664. GU-5713 | 695. 113-7572 |
| 480. 500-6362 | 510. JS-7818 | 541. JG-1151 | 572. MM-3161 | 603. 500-1798 | 634. GO-8349 | 665. MB-1645 | 696. NPMR-7217 |
| 481. JL-0767 | 511. JO-3265 | 542. MG-8942 | 573. MT-9325 | 604. GV-1270 | 635. 152-3884 | 666. HH-4279 | 697. EPHT-9339 |
| 482. NPMG-8588 | 512. MA-3269 | 543. 124-6682 | 574. MQ-0038 | 605. JL-6633 | 636. NPHA-5995 | 667. JU-4970 | 698. 134-3469 |
| 483. 125-3459 | 513. NPGP-0350 | 544. 500-7270 | 575. HS-0235 | 606. MF-3673 | 637. NPGP-5687 | 668. MA-7035 | 699. JD-4922 |
| 484. 501-0033 | 514. 147-7153. | 545. 134-7671 | 576. 93-0159 | 607. 500-1975 | 638. NPJO-0790 | 669. 121-3509 | 700. GR-8949 |
| 485. MX-3444 | 515. NPHS-2097 | 546. JZ-5354 | 577. 139-8758 | 608. 139-9618 | 639. 152-7853 | 670. 131-1745 | 701. HN-9747 |
| 486. GY-4429 | 516. NPJB-6949 | 547. HM-9008 | 578. NPMP-3528 | 609. JP-7850 | 640. HJ-3193 | 671. 150-7289 | 702. 154-3706 |
| 487. JW-1939 | 517. JR-6742 | 548. MT-2758 | 579. NPHU-4059 | 610. MD-2094 | 641. MC-6937 | 672. MI-0555 | 703. 104-3692 |
| 488. JB-7578 | 518. GV-0954 | 549. 156-4452 | 580. NPJN-7752 | 611. M P-0707 | 642. 155-3602 | 673. 138-1969 | 704. 144-1485 |
| 489. MD-7499 | 519. JA-2188 | 550. 130-3345 | 581. NPMP-6547 | 612. MH-6525 | 643. HN-9782 | 674. MK-8127 | 705. NPGU-0422 |
| 490. GB-6236 | 520. MP-8884 | 551. HG-0736 | 582. NWGA-6650 | 613. ME-3356 | 644. JY-2847 | 675. NPHI-6089 | 706. 500-8058 |
| 491. GF-6609 | 521. 147-5612 | 552. GY-9954 | 583. NPHH-6216 | 614. NWGI-3941 | 645. MI-6182 | 676. 155-6077 | 707. NPGI-7659 |
| 492. HE-6311 | 522. HY-5595 | 553. GU-5747 | 584. 125-6144 | 615. JB-7291 | 646. JS-7886 | 677. HG-1247 | 708. TS-8093 |
| 493. MG-7362 | 523. GW-5174 | 554. TL-4762 | 585.143-6764 | 616. JV-2706 | 647. MR-2764 | 678. HE-6164 | 709. MH-7607 |
| 494. GO-3542 | 524. 148-2345 | 555. HG-0769 | 586. NPHX-4663 | 617. TF-6500 | 648. MH-4041 | 679. 140-9256 | 710. NPJZ-3337 |
| 495. JL-2298 | 525. JD-6281 | 556. 145-3799 | 587. 500-9810 | 618. 122-8141 | 649. JY-5573 | 680. HO-0497 | 711. NPMB-2751 |
| 496. HH-2369 | 526. HR-9091 | 557. 156-8448 | 588. MF-8116 | 619. GZ-7010 | 650. 133-6780 | 681. 142-8692 | 712. NPHO-0499 |
| 497. NPJF-0943 | 527. JH-0645 | 558. JO-2449 | 589. NPGM-0545 | 620.151-7457 | 651. MC-7563 | 682. 146-8833 | 713. NPMP-6545 |
| 498. MD-9309 | 528. MX-3338 | 559. 93-2015 | 590. MD-5488 | 621. 500-5494 | 652. HB-0910 | 683. JS-4851 | 714. MG-7760 |
| 499. NPHH-4281 | 529. GA-5919 | 560. HC-3531 | 591. MK-9327 | 622. 156-0204 | 653. JZ-6874 | 684. 154-3813 | 715. MN-9361 |
| 500. NPJN-7698 | 530. GZ-5648 | 561. HR-7431 | 592. NPGQ-0941 | 623. NPTL-4942 | 654. JU-9528 | 685. HW-6276 | 716. 109-9781 |
| 501. 135-6195 | 531. MM-4000 | 562. HX-0127 | 593. NPMC-8679 | 624. MB-9192 | 655. JO-3040 | 686. 150-5291 | 717. 103-3118 |
| 502. EPGQ-9888 | 532. HH-4263 | 563. 102-7526 | 594. GN-1107 | 625. 110-1299 | 656. HR-3857 | 687. MD-9479 | 718. 142-1491 |
| 503. JJ-5505 | 533. JZ-8349 | 564. 136-3051 | 595. 141-7451 | 626. NPHC-3894 | 657. JU-9541 | 688. NPMQ-7912 | 719. 153-4125 |
| 504. 501-0010 | 534. GF-3959 | 565. GQ-9349 | 596. 101-9405 | 627. 150-0489 | 658. JS- 2176 | 689. 502-0338 | 720. JZ-9246 |
| 505. HB-2090 | 535. MM-3197 | 566. MA-9302 | 597. 500-8408 | 628. 131-3470 | 659. GN-1133 | 690. 105-6854 | 721. MW-9194 |
| 506. MV-8813 | 536. GF-9495 | 567. 140-7115 | 598. NPMA-3252 | 629. 137-4544 | 660. TL-5081 | 691. 144-9559 | 722. 97-2885 |
| 507. NPJB-8890 | 537. 128-3049 | 568. HI-9992 | 599. NPHZ-2793 | 630. NPMC-6822 | 661. JG-9994 | 692. 500-9505 | 723. 502-1018 |
| 508. NPJP-0218 | 538. HY-7689 | 569. 104-8246 | 600. NPHD-6538 | 631. JM-0334 | 662. 96-8821 | 693. GC-6557 | |
| 509. NPHZ-4515 | 539. JM-2309 | 570. JR-9865 | 601. 148-2042 | 632. NPGS-4484 | 663. 154-8756 | 694. GR-5667 | |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் மனோ கணேசன் கட்சியும் போட்டி?

கொழும்பு, ஜன்.5

கொழும்பு மாநகர சபை தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணியின் (ஜ.ம.மு) தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனை முதல்வர் வேட்பாளராக நிறுத்தி போட்டியிட வேண்டும் எனக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் விரும்புகின்றனர் என்று ஜ.ம.மு. செயலாளர் கலாநிதி ஏ.என்.குமரகுருபரன் இணையத்தளம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனவரி 7ஆம் திகதி நடைபெறவுள்ள அரசியல் குழுக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நான்கு ஆசனங்களையும் மேல் மாகாண சபையில் இரு ஆசனங்களையும் கடந்த காலத்தில் நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனத்தையும் பெறுமளவுக்கு வாக்குப்பலமுள்ள கட்சி என்ற வகையில் கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட ஜனநாயக மக்கள் முன்னணியின் அங்கத்தவர்கள் அக்கறையாக உள்ளனர் என அவர் கூறினார்.

கட்சியின் பல அங்கத்தவர்கள் மனோ கணேசனை மேயராக நிறுத்தி கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் தனித்து போட்டியிட வேண்டுமென விரும்புவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு உட்பட தமிழ்ப் பகுதிகளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட ஏனைய தமிழ் கட்சிகளுடன் கூட்டுச்சேர வேண்டும் எனக் கட்சி விரும்புவதாகவும் அவர் கூறினார்.

இது குறித்து 7ஆம் திகதி நடைபெறவுள்ள அரசியல் குழு கூட்டத்தில் இறுதிதீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் கட்சி தலைவர் மனோ கணேசன் அன்றைய தினம் தனது தீர்மானத்தை அறிவிப்பார் எனவும் கலாநிதி ஏ.என்.குமரகுருபரன் மேலும் கூறினார். (ம)


தேவை

நல்லின அல்சேஷன், அல்லது ஜேர்மன் சபேர்ட் நாய்குட்டி உடன் தேவை.

தொடர்பு: 0750476598

கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 05.01.2011 விநியோகிக்கப்படும்.

ராஜீவ்

நவாலி வீதி, ஆனைக்கோட்டை

T.P No : 0776090926, 0212222867

German Swiss மொழிகள்

German Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புகள் நடைபெறுகின்றது. CD மற்றும் புத்தக விளக்கத்துடன் Germanyல் இருந்து வந்த ஆசிரியரால் நடை பெறுகிறது.

10, Palaly Road, Jaffna. T.P. 0771604823.


## விபத்துகளில் இருவர் காயம்

தென்மராட்சி, ஜன.5

மோட்டார் சைக்கிள்கள் நாய்களுடன் மோதி விபத்துக்குள்ளானதில் பாடசாலை சிறுவன் உட்பட இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவங்கள் புதுவருடத் தன்று இடம்பெற்றன.

நுணாவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சிறிராஜகுமார் பிரதீப் (வயது 11) என்னும் மாணவனும் கொடிகாமத்தில் இடம்பெற்ற விபத்தில் சத்தியவதனன் (வயது 19) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-207)

### யாழ்.வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம்-பருத்தித்துறை
### ஆண்டுப் பொதுக்கூட்டமும் (2011) புதிய நிர்வாகக் குழுத் தெரிவும்

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் எதிர்வரும் (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத் தலைவர் திருமதி பி.சிவயோகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்குப் பழைய மாணவர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்,
திருமதி. எ.சற்குணலிங்கம்,

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயப் பழைய மாணவியும், யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் மாணவியும், தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர்களான திருமதி நில்மினி சயந்தனின் மகளும் மற்றும் சயந்தன் நிருசாந்தனின் சகோதரியுமாகிய

**செல்வி லாவண்யா சயந்தன்**

அவர்கள் தேசியமட்ட தமிழ்த்தினப்போட்டி-2010 நடனப்போட்டி-பிரிவு V இல் முதலாம் இடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளமையை மனதார பாராட்டுவதுடன் எதிர்காலத்தில் பல்வேறு விருதுகள் பெற்று நடனக்கலையில் மிளிர வேண்டுமெனவும் வாழ்த்துகின்றோம்.

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையம்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வளர்மதி கல்விக் கழகம்**

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

எமது கல்விக் கழகத்தில் கல்வி பயின்று 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் :

1. குகதாசன் கஜனி - 166 புள்ளிகள்
2. சிறிராஜ்குமார் பிரதீப் - 149 புள்ளிகள்
3. லோகேந்திரகுமார் தட்சரூபா - 148 புள்ளிகள்
4. மயூரன் ஆரூண் - 143 புள்ளிகள்
5. சிவாஜி சியாளி - 143 புள்ளிகள்

இவர்களையும் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் இவர்களுக்குக் கல்வி கற்பித்த கல்விக்கழக ஆசிரியர்களையும் விசேடமாகப் புலமைப் பரிசில் வகுப்புகளை நடத்திய ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வளர்மதி கல்விக் கழகம்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

நிர்வாகம்.

# தொல்கொடையில் ஒட்டோ-வான் விபத்து பணிக்குச் சென்ற யுவதிகள் இருவர் பலி!

கொழும்பு,ஜன.5

பியகம சுதந்திர வர்த்தக நிலையத்தில் பணிக்காக யுவதிகள் ஐவர் பயணித்த ஓட்டோவொன்று வான் ஒன்றுடன் மோதியதில் இரு யுவதிகள் மரணமாகியுள்ளனர். காயமுற்ற ஏனைய மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று மீகாவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடவத்தை-தொல்கொடை பிரதான வீதியில் உடுபிலப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமுற்ற வேபொட கிழக்குப் பிரதேச வாசியான டீ.ஜீ. ஜயந்திமாலா றாகம வைத்தியசாலையிலும் வேபொட பிரதேச வாசியான அனுஷா பிரியதர்ஷிணி உடுபில வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்ட பின் மரணமாகியுள்ளனர்.

மீகாவத்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **788**

சீட்டிழுப்பு திகதி **03.01.2011**

எழுத்து: **W**

வெற்றி இலக்கங்கள்: **02 03 56 67**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 10,000,000.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 15 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 339 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 671 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16620 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9457 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 236656 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 37314 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,168,680.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 10,572,217.60

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை

234/2, காலி வீதி, கொழும்பு 03.

தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk


merit

புத்தாண்டில் உங்கள் முதல் ஆரம்பம்

Computer கல்வியில் தொடங்கட்டும்

COMPUTER SCHOLARSHIP

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

O/L & A/L School Leavers

O/L மாணவர்களுக்கு Direct Offer நேரடி கட்டணக் கழிவு

இம்முறை சாதாரணதர பரீட்சை (2010) எழுதிய மாணவர்கள் Direct Offer மூலமாக இணைந்து 75% வரையிலான ஸ்கொலர்ஷிப்பைப்பெற்றுக்கொள்ளலாம்.

CSC® COMPUTER EDUCATION

A/L சான்றிதழுடன் வாருங்கள் ஸ்கொலர்ஷிப் பெற்றுச் செல்லுங்கள்




கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் A/L சான்றிதழ் ஒன்றின் பிரதியுடன் எமது பயிற்சி மையங்களை நாடுங்கள்

- பாடசாலை அதிபரினால் வழங்கப்பட்டது.
- பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்பட்டது.
- இணையம் மூலமாக பெறப்பட்டது.

25 YEARS

பரீட்சை எழுதிய ஆண்டு, மொழி மற்றும் வயதெல்லை கட்டுப்பாடுகள் இல்லை

Tally Accounting | Office Automation | Hardware & Networking
Graphics Design | Web Animation | Adv. Java Programming
Video Production | Computer Application Digital Pre - Press
2D & 3D Modeling | Cartoon Animation | Auto CAD

மேலதிக விபரங்களை உங்கள் அருகில் உள்ள எமது பயிற்சி மையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ASIAN COMPUTER EDUCATION

யாழ் நகர் : 2G , ஸ்ரான்லி வீதி, 021-2225677 | சாவகச்சேரி : 230, முதலாம் மாடி, கண்டி வீதி, 021-2270267
நெல்லியடி : கொடிகாமம் வீதி, 021-2262399 | வவுனியா : 92, குருமண்காடு சந்தி, மன்னார் வீதி, 024-2226050


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.300 ஓய்வூதிய அதிகரிப்பு இந்த மாதம் முதல் அமுலுக்கு

கொழும்பு, ஜன.5

2011ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்த 300 ரூபா ஓய்வூதிய அதிகரிப்பு இந்த மாதம் முதல் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது அறிவிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான மேலதிக கொடுப்பனவுகள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களம் தெளிவூட்டல் ஒன்றை முன்வைத்துள்ளது.

இதற்கமைய ஓய்வூதிய வாழ்வாதாரக் கொடுப்பனவு 2 ஆயிரத்து 675 ரூபாவாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்றவர்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவாக 750 ரூபா வழங்கப்படும்.

இதேபோல 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்றவர்களுக்கு 250 ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவு கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு நடைமுறை இந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் அமுலுக்கு வரவுள்ளது என ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (சி)

# சன் சீ கப்பல் மாலுமிகளில் நால்வர் விடுதலைப் புலி உறுப்பினர்களா?

## கனேடிய அதிகாரிகள் சந்தேகம்

கொழும்பு, ஜன.5

கனடாவுக்கு ஈழ அகதிகளை ஏற்றிச் சென்ற சன்சி கப்பல் மாலுமிகளில் நான்குபேர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கனடா அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவர்களைக் கனடாவில் தங்க வைக்க முடியுமா என்பது தொடர்பான விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் நாட்டில் தங்கியிருந்தால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் அந்த நாட்டு எல்லைப் பாதுகாப்பு முகவர் நிலையம் சந்தேகம் தெரிவித்துள்ளது.இவர்கள் தொடர்பான விசாரணைகள் இந்தமாதம் அல்லது அடுத்த மாதம் இடம்பெறுமெனக் கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபை யின் அதிகாரியான மெலிஸா அண்டர்சன் தெரிவித்துள்ளார்.

எம்விசன்சி கம்பலில் கனடாவிற்குச் சென்ற 492 பேரில் 49 பெண்களும், 157 ஆண்களும் குடிவரவு மற்றும் அகதிகள் சபை அதிகாரிகளால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# போதைப்பொருள் பாவித்த குற்றவாளிகளை வீரவில சிறைச்சாலைக்கு மாற்ற ஏற்பாடு

கொழும்பு, ஜன.5

போதைப்பொருள் குற்றச்சாட்டின் பேரில் சிறைவாசம் விதிக்கப்பட்ட கைதிகள் இனிமேல் வீரவில சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவர் எனச் சிறைச்சாலைகள் புனருத்தாபன மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் சந்திரசேன கஜதீரவின் ஆலோசனையின் பேரில் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வரவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வீரவில சிறைச்சாலையில் போதைப்பொருள் பழக்கத்தைக் கைவிடுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் வெலிக்கடை உட்பட பல்வேறு சிறைகளில் ஏனைய குற்றவாளிகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையை உடனடியாக மாற்றும் நோக்கிலேயே அவர்கள் வீரவில சிறைச்சாலைக்கு அனுப்பப்படவுள்ளனர் ன அவர் மேலும்கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் இத்தகைய குற்றவாளிகளைத் தடுத்து வைக்க தல்தென மற்றும் பல்லேகலப் சிறைச்சாலைகளும் பயன்படுத்தப் படவுள்ளதாகச் செயலாளர் தெரிவித்துள்ளார். (204-5)

# செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.5

முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா பயிற்சியில் வளவாளர்களாகக் கலந்து கொள்பவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு பேராசிரியர் எஸ்.சின்னத்தம்பியின் வழி காட்டலில் இடம்பெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளும் வளவாளர்கள் தமது வரவை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்பு பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204)

# ஏ.ரி.எம். இயந்திரங்கள் மோசடி; இருவர் பொலிஸாரால் கைது

தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரங்களிலிருந்து 14 மில்லியன் ரூபாவைத் தவறான வழியில் பெற்றுக்கொண்ட நால்வரில் இருவரைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரங்களில் உயர் தரத்திலான இலத்திரனியல் கருவிகளை பொருத்தி வாடிக்கையாளர்களின் தகவல்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இவ்வாறு பொருத்தப்பட்ட கருவிகள் தன்னியக்க பணப் பரிமாற்ற இயந்திரத்தை பயன்படுத்துவோர் பற்றிய தகவல்களை பிரதி பண்ணவல்லன.

பின்னர் இவர்கள் இந்த தகவல்களை இந்தியாவிலுள்ள தமது முகவர்களுக்கு அனுப்பினர். அவர்கள் போலி கடன் அட்டைகளை உருவாக்கி இலங்கையிலுள்ள தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரங்களைப் பயன்படுத்துவோரிட மிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களை பயன்படுத்தி அவர்களின் கணக்கிலிருந்து பணத்தை மீளப்பெற்றனர்.

ரூமேனியர்கள் என சந்தேகிக்கப்படும் ஏனைய இரண்டு சந்தேகநபர்களும் இதுவரை பிடிபடவில்லை.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## விருந்தினர் மகிழ்வுடன்...



வரவேற்பு: யாழ்.புனித ஜோன் பொஸ்கோ ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி ஜீவந்தி தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.இந்த நிகழ்வில் சிறார்களின் வரவேற்பு நடனம் இடம்பெறுகின்றது. (204-288)

# நாடு முழுவதும் இவ்வாண்டு மக்கள் தொகைக் கணிப்பீடு

கொழும்பு, ஜன. 5

30 ஆண்டுகளுக்குப் பின்னர் முதற் தடைவையாக நாடு முழுவதும் குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் காரணமாக குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை எனக் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதற்குமான குடிசன மதிப்பீடு இறுதியாக 1981 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டது.

இதன் பின்னர் 1991 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட போதிலும் முழு மாவட்டங்களிலும் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் எதிர் வரும் செப்ரெம்பர் மாதமளவில் உத்தேச நாடளாவிய ரீதியிலான குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

# ஹெரோயினை விழுங்கித் தற்கொலை செய்தவரின் வயிற்றுக்குள்ளிருந்து 45 பைக்கற்றுக்கள் மீட்பு

கொழும்பு, ஜன.5

கொழும்பு புறநகர்ப்பகுதியான இராஜ கிரிய - ஒபேசேகர புர பாலத்திற்கருகில் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட பிரபல போதைப்பொருள் வியாபாரியொருவர் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பியோடி தன்னிடமிருந்த 2,000 மில்லி கிராம் ஹெரோயின் பக்கற்றுகள் இரண்டை விழுங்கித் தற்கொலை செய்து கொண்டார் என வெலிக்கடைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒபேசேகரபுர, கிராமோதய மாவத்தை வாசியான கொடிப்பிலி ஆராச்சிலாகே சமிந்த எனும் 32 வயது நபரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டார்.

இவர் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பியோடி வீடொன்றுக்குள் மறைந்திருந்தபோது ஹெரோயினை விழுங்கியுள்ளார். அதன்பின் வாந்தி எடுத்த போது அவ்விரு பைக்கற்றுகளும் வெளியே வந்துள்ளன. அதன் பின் சுகவீனமுற்ற சந்தேகநபர் தலங்கம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார்.

இந்த நிலையில் வைத்திய சாலையில் சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொள் எப் பட்ட பிரேத பரிசோதனையின் போது சந்தேகநபரது வயிற்றுக் குள்ளிருந்து மேலும் 45 ஹெரோ யின் பைக்கற்றுகள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெலிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (சி)

# ஜனாதிபதி செயலக வேலைகள் மத வழிபாடுகளுடன் ஆரம்பம்

கொழும்பு,ஜன .5

புதிய வருடத்தில் நேற்றுமுன்தினம் மத வழிபாடுகளுடன் ஜனாதிபதி செயலக வேலைகள் ஆரம்பத்து வைக்கப்பட்டன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பல மதவழிபாடுகளும் இடம்பெற்றன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (த)

# மானிப்பாயில் நடமாடும் சேவையில் எச் 1 என் 1 தடுப்பூசி வழங்கல்

மானிப்பாய்ப் பிரதேச சபைக்கு உட்பட்ட பொதுமக்களுக்கு நட மாடும் சேவை மூலம் சுகாதாரப் பரிசோதகர் குழுவினால் எச் 1 என்1 காய்ச்சல் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் தடுப்பூசி வழங்கும் நிகழ்வுகள் வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தை உட்புறம், நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நேரடியாகச் சென்று வழங்கப்படுகின்றன. தற்போது யாழ்.மாவட்டத்தில் பன்றிக்காய்ச்சல் தொற்றும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் அவற்றை இல்லாதொழிக் கும் நடவடிக்கையாக இந்தத் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு நடைபெறுவதாக சுகாதார பரிசோதகர் குழு தெரிவித்துள்ளது. (204-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?




உங்கள் ராசிக்கு இரண்டில் சனி, நான்கில் ராகு, எட்டில் குரு, பத்தில் கேது என்கிற வகையில் பிரதான கிரகங்களின் அமர்வு உள்ளது. ஆறாம் இட அதிபதி சனிபகவானும் எட்டாம் இட அதிபதி குருபகவானும் ஒருவருக்கொருவர் சமமான பார்வை பெற்றுள்ளனர். இந்த நிலை விபரீத இராஜயோகம் எனற பலமான நன்மையைத் தருகிறது. ஆண்டின் இறுதியில் ஏழரைச் சனி விலகுவது இன்னொரு நன்மை. மனதில் நம்பிக்கை வளர்த்து உற்சாகமுடன் செயற்படுவீர்கள். தற்போது நடக்கும் சில குளறுபடியான சூழ்நிலைகள் படிப்படியாகச் சரியாகும். பேச்சில் கண்டிப்பும் நியாய தர்மத்தைப் பின்பற்றுகிற குணமும் குரு அருளால் உண்டாகும். இளைய சகோதரர்கள் அன்பு பாராட்டுவர். வீடு, வாகனப் பராமரிப்பில் கூடுதல் கவனம் பின்பற்ற வேண்டும். இஷ்ட, குலதெய்வ வழிபாடு, தான தர்மம் வழங்குதல் திட்டமிட்டபடி நிறைவேறும். எதிரிகள் மதிப்பிழந்து போவர். உடல்நலத்தைக் காப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவது நல்லது. தம்பதியர் ஒருவர் நலனில் ஒருவர் அக்கறையுடன் நடந்து மகிழ்ச்சி பெறுவர். நண்பர்களின் உதவி, ஆலோசனை தொடர்ந்து கிடைக்கும். இயந்திரங்களை கையாளும் தருணங்களில் உரிய பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றுவது அவசியம்.

•தந்தைவழி சார்ந்த உறவினர்கள் எதிர்பார்ப்பு மனதுடன் நடந்துகொள்வர். குடும்பத் தேவைகளை நிறைவேற்ற ஓரளவு கடன் பெறுவீர்கள். வெளிநாடு வேலைவாய்ப்பில் சாதகமான நிலை ஏற்படும். தொழிலதிபர்கள் தங்கள் தொழிலில் இருந்த சிரமம் விலகி முன்னேற்றம் காண்பர். அபிவிருத்திப்பணிகள் சிறப்பாக நிறைவேறும். கைவிட்டுப்போன பொருள் வந்து சேரும். சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து கிடைக்கும். தொழிலதிபர் அமைப்புகளில் பதவி பெறும் வாய்ப்புண்டு. நகை, புடைவை, வாகனம், கண்ணாடி, பீங்கான், பிளாஸ்டிக், தோல் பொருள்கள், மின் சாதனங்கள், கட்டுமானப் பொருள், தளபாடங்கள் என்பனவற்றை விற்பனை செய்பவர்கள் கூடுதல் வரவேற்புப் பெறுவர். மற்றவர்களுக்கு வியாபாரம் சுமாராக இருக்கும். கடனுக்கு விற்பனை நடந்தாலும் வரும் காலத்தில் நிலுவைப்பணம் வசூலாகிவிடும். அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் பணிபுரியும் இடத்தில் சுமூக சூழ்நிலை அமையப்பெறுவர். பணி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். உயர் அதிகாரிகளின் மனதில் உங்களைப்பற்றி நல்ல அபிப்பிராயம் வளரும். நிர்வாகப் பொறுப்புக்களை அடைவீர்கள். பணியில் கிடைக்கிற அதிஷ்டகரமான முன்னேற்றம் உங்களுக்கே உங்கள் மீது வியப்பை உருவாக்கும். பணித்திறன் தகுதியை வளர்த்துக்கொள்வீர்கள். சிலருக்கு வசதி நிறைந்த வீடு, கௌரவமான வெளியூர் வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

**பெண்கள்:**

பணிபுரியும் பெண்கள் படிப்படியாகப் பணி இலக்கை நிறைவேற்றுவர். பணியின் தரம் சிறந்து நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். சலுகை, கூடுதல் பொறுப்பு எதிர் பாராத வகையில் கிடைக்கும். குடும்பப் பெண்கள் கணவரிடம் நன்மதிப்பு, பாராட்டுப் பெறுவர். குடும்பத்தேவை பெருமளவில் பூர்த்தியாகும். மாங்கல்ய பலம் அதிகரித்துக் கணவரின் உடல்நலம் சிறக்கும். சுயதொழில் புரியும் பெண்கள் சராசரி உற்பத்தி, விற்பனை என்கிற நிலைமைகள் மாற்றம்பெறக் காண்பர். உற்பத்தி, விற்பனை சிறந்து கூடுதல் பணவரவு பெறுவீர்கள். எவருக்கும் பணம் சார்ந்த வகையில் பொறுப்பேற்கக் கூடாது.

**மாணவர்கள்:**

மாணவர்கள் மிகக் கவனமாகப் படித்து முன்னேற்றம் காண்பர். படிப்புக்கான பணவசதி திருப்திகரமாகக் கிடைக்கும்.சக மாணவர்கள் படிப்பில் ஒத்துழைப்புத் தருவர். தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பு அதிர்ஸ்டகரமாகக் கிடைக்கும்.

**விவசாயிகள்:**

விவசாயிகளுக்கு நல்ல வசூல் கிடைக்கும். கால்நடை வகையில் கிடைக்கிற பணவரவு முக்கிய தேவைகளுக்குப் பயன்படும். நிலம் தொடர்பான விவகாரங்களில் சமரசத் தீர்வு கிடைக்கும்.




உங்கள் ராசியில் சனிபகவான், மூன்றில் ராகு, ஏழில் குரு, ஒன்பதில் கேது என்கிற வகையில் பிரதான கிரகங்களின் அமர்வு உள்ளது. இதில் குரு, ராகு உங்களுக்குத் தாராள நற்பலன்களைத் தருவர். ஜென்மச்சனியின் தாக்கத்தைக் குரு பார்வையும், குருவின் 9ஆம் பார்வையையும் பெற்ற ராகுவின் 11ஆம் பார்வை ராசியில் பதிகிறது. இதனால் உங்களிடம் கருத்துபேதம் கொண்டவர்கள் கூட நன்மதிப்பு வைத்து உங்களை நாடிவருவர். நடை, உடை, பாவனையில் மாற்றம் ஏற்படும். வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்க இளைய சகோதரர்கள் உதவிகரமாக நடந்துகொள்வர். அவர்களுக்கான சுபநிகழ்வு இனிதாக நிறைவேறும். வீடு, வாகனத்தில் நம்பிக்கையானவர்களை மட்டும் அனுமதிக்கலாம். புத்திரர்கள் செயற்றிறன் வளர்த்து படிப்பு, வேலைவாய்ப்பில் உயர்ந்த நிலையை அடைவர். பூர்வீகசொத்தில் சீரான பணவரவு கிடைக்கும். உடல்நலத்தில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது அவசியம். எதிரி உங்களின் வழியாக மறைமுகப் பலன் பெறுவதின் காரணமாகப் பகைமை உணர்ச்சியைக் குறைத்துக்கொள்வர். திசை தெரியாத போக்கு ஏற்பட்டு நண்பர், உறவினர்களின் வழிகாட்டுதலால் சரியாகும்.

தம்பதியர் அன்பு, பாசத்துடன் நடந்து குடும்பத்தேவைகளை நிறைவேற்றுவர். வெளிநாடு வேலைவாய்ப்பில் இருந்த தடையைச் சரிசெய்து பண வருமானத்தை உயர்த்துவீர்கள். இளம் வயதினருக்குத் திருமண முயற்சி நிறைவேறும். தொழிலதிபர்கள் தொழிலில் இருந்த தேக்கநிலையை மாற்ற புதிய யுக்திகளைப் பின்பற்றுவீர்கள். உங்கள் வளர்ச்சிக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் விலகிச் செல்வர். வளர்ச்சியும் தாராள பணவரவும் கிடைக்கும். அபிவிருத்திப்பணிகள் நிறைவேறும். தொழிற் கூட்டமைப்புகளில் தகுதிவாய்ந்த பதவி, பொறுப்பு கிடைக்கும். நகை, புடைவை, வாகனம், கட்டுமான பொருள்கள், தோல், பிளாஸ்டிக், கண்ணாடி, பீங்கான், இறப்பர் பொருள்கள், எண்ணெய், பாத்திரம் விற்பவர்கள் சந்தையில் புதிய வாய்ப்புக் கிடைத்து முன்னேற்றம் காண்பர். மற்றவர்களுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் கருத்து ஒற்றுமையுடன் நடந்துகொள்வர். வியாபார அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றத் தாராள பண உதவி கிடைக்கும்.

**தருபவர்: வித்தியா**

அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் பணிகளைக் குறித்த காலத்தில் நிறைவேற்றுவர். சக பணியாளர்கள் உதவும் மனப்பாங்குடன் நடந்துகொள்வர். பதவி உயர்வு, விரும்பிய பணியிட மாற்றம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். கூடுதல் வரவைப் பாதுகாப்பான வகையில் முதலீடு செய்வீர்கள்.

**பெண்கள்:**

பணிபுரியும் பெண்கள் உற்சாகத்துடன் செயல்புரிந்து பணியைத் திறம்பட நிறைவேற்றுவர். தாமதமான பதவி உயர்வு கிடைக்கும். குடும்பப் பெண்கள், கணவரின் அன்பைப் பெறுவர். குடும்பச்செலவுகளுக்கான பணவசதி திருப்திகரமாகும். புத்திரர்களின் படிப்பு, திறமையை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றுவீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள், கூடுதல் மூலதனத்துடன் உற்பத்தியைப் பெருக்குவர். சந்தையில் வரவேற்பும், விற்பனையும் அதிகரிக்கும். இளம் பெண்களுக்கு திருமண முயற்சி நிறைவேறும்.

**மாணவர்கள்:**

மாணவர்கள் நிறைந்த ஞாபக சக்தியுடன் படித்து உயர்வான நிலை பெறுவர். வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை கிடைக்கும். சக மாணவர்கள் கூடுதல் நட்பு பாராட்டுவர். சுற்றுலாப் பயணத்திட்டம் நிறைவேறி இனிய அனுபவத்தைப் பெற்றுத்தரும்.

**விவசாயிகள்:**

விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவீர்கள். வசூல் சிறந்து சந்தையில் நல்ல விலை கிடைக்கும். கால்நடைப் பராமரிப்பில் கூடுதல் செலவு இருக்கும். நிலம் தொடர்பான சிரமம் விலகும். குடும்பத்தில் சுபகாரியம் திட்டமிட்டபடி நடக்கும்.


## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 06.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும் (பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்).

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே: 0212226944


## பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.5

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து பொலிஸ் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 336 தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கௌரவிப்பு நிகழ்வுகள் களுத்துறைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

320 தமிழ் இளைஞர்கள், 16தமிழ் யுவதிகள் கொண்ட அணி தமது பயிற்சி நெறிகளைப் பூர்த்திசெய்து பொலிஸ் உத்தியோகத்தர்களாக வெளியேறுகின்றனர்.

இந்த உத்தியோகபூர்வ நிகழ்வினை முன்னிட்டு பயிற்சி பெற்ற இளைஞர், யுவதிகள் இலங்கைப் பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரியாவுக்கு மரியாதை அணிவகுப்பு ஒன்றினை நேற்று செவ்வாய்க்கிழமை நடத்தினர்.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு இளைஞர், யுவதிகளின் பெற்றோர்களும் பிரத்தியேக வாகனங்களில் வரவழைக்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர். (204- 312)

## 16ஆம்அண்டு நினைவஞ்சலி



அமரர்
க.இளையதம்பி
(அதிபர்)
திதி: 05.01.2011

மண்ணில்
23★03★1936

விண்ணில்
02★01★1995

அன்பின் தெய்வமே!
நீட்டிய கரங்கள் நிலையற்றுப் போனது
காட்டிய அன்பு கலைந்து போனது
கூட்டிய குடும்பம் குலைந்து போனது
வாடிய உள்ளம் வதைபடுகின்றது
பிள்ளை என்று பிரியமளித்து
மைந்தன் என்று மனம் மகிழ்ந்து

தம்பி என்று தவமிருந்து
பெற்ற என்னை பேதலிக்கவிட்டு
சடுதியில் வந்த காலன்
கடுதியில் கொண்டு போனான் எம்
கண்ணீர் பூக்கள் காலடியில் காணிக்கை
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"மிதிலை",
கைதடி நுணாவில், சாவகச்சேரி.

**குடும்பத்தினர்.**
T. P.No. 0777169704

(108414)


## தேவை

நெல்லியடியில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள பல்பொருள் வாணிப நிலையத்திற்கு

1. கணக்காளர்
2. சிட்டை எழுதுநர்
3. விற்பனையாளர் தேவை

**ஜமுனா ஸ்ரோர்**
139,யாழ்.வீதி, நெல்லியடி.
T.P. 2263970, 0777422604

(108224)

## தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள "பிரகாந்த்" போட்டோக் கொப்பிக் கடைக்கு பெண் பிள்ளைகள் 2 பேர் தேவை. அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.


## நீங்காத நினைவுகளுடன் 6ஆம் ஆண்டில்.....



அன்னையின்
மடியில்:
05.08.1931

இறைவன்
அடியில்:
05.01.2006

அரியாலையில் பிறந்து
பொலிகண்டியில்
சிவப்பேறு பெற்ற

அமரர்
கலாபூஷணம் கந்தையா
பாலசிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி: பூர்வபக்க ஷஷ்டி 10.01.2011

ஆறாத் துயரில் ஆறாண்டு அழுத பின்னும்
மாறா உம் நினைவுகள் மறவாத நெஞ்சங்கள்
நீர் சென்ற கால்த் தடங்களின் பதிவில்
உம் நினைவில் கண்ணீருடன் வாடுகிறோம்.

"செந்தில் பதி",
பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை.

என்றும் உங்கள் நீங்கா
நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையில் ஒலிக்க விடப்பட்ட தேசிய கீதம்

யாழ்ப்பாணம்,ஜன.5

தேசிய கீதம் எந்த மொழியில் பாடப்படுவது என்ற சர்ச்சை நீடித்துவரும் நிலையில், புதிய ஆண்டு பதவி ஏற்பு வைபவம் நேற்று முன்தினம் அரச திணைக் களங்களில் இடம்பெற்றபோது தேசியக் கொடி ஏற்றுகையில் இசையில் மட்டும் தேசிய கீதம்- ஒலிக்க விடப்பட்டுள்ளது.

தேசிய கீதம் எந்த மொழியில் பாடுவது என்பது தொடர்பான சர்ச்சைகள் அமைச்சரவை மட்டத்தில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையிலேயே கடந்த 26ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற தேசிய பாதுகாப்புத்தின வைபவத்தில் தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியில் தேசிய கீதத்தைப் பாடினர்.

இது தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிடும்போது, ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கலந்துகொள்ளும் வைபவங்களில் சிங்களத்திலேயே தேசிய கீதம் பாடப்படுதல் வழமை என்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை, புதிய வருடம் தமது கடமைகளை ஆரம்பிக்கும் போது சத்தியப்பிரமாணம் மேற்கொண்டு ஆரம்பிக்க வேண்டுமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்திருந்தது.

இதன்படி சகல அரச திணைக்களங்களிலும் தேசியக் கொடி ஏற்றி சத்தியப் பிரமாணம் மேற்கொள்ளும் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது தேசிய கீதம் இசையில்மட்டும்ஒலிக்கவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-15)

# கொடுத்துவிட்டுப் பிடுங்கும் கொழும்பின் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்.பிரதம தபாலகத்தில் சேவையில் ஈடுபட்ட இரண்டு வாகனங்கள் கொழும்புக்கு மீள அனுப்பப்பட்டுள்ளன.

இந்த இரண்டு புதிய வாகனங்களும் அண்மையில் யாழ். பிரதம தபாலகத்துக்கு வழங்கப்பட்டன. ஏற்கனவே தபாலகத்தில் சேவையில் ஈடுபட்ட இரண்டு வாகனங்களுடன் இந்த இரண்டு வாகனங்களும் குடா நாட்டின் உள்ளூர் மற்றும் வெளியூர் தபால் சேவையில் ஈடுபட்டன.

தற்போது மேற்படி புதிய தபால் வாகனங்கள் இரண்டையும் கொழும்பு மத்திய தபாலகம் மீளப்பெற்றுள்ளது. இதேவேளை யாழ்.பிரதம தபாலகத்தில் இரண்டு தபால் வாகனங்களே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இந்த இரண்டு வாகனங்களுக்கும் தபால் சேவை முழுமையாக நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக தபாலக வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.(201-26)

# ஐந்துகண் பால அபிவிருத்திப் பணிகள் மந்த கதியில்; மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜன.5

சண்டிலிப்பாய் ஐந்துகண் பாலத்தின் அபிவிருத்திப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெறுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காரைநகர், இளவாலை, மாதகல் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பிரதான பாதையாக பயன்படுத்தும் சண்டிலிப்பாய் வீதியில் உள்ள ஐந்து கண் பாலம் கடந்த 3 மாதத்துக்கு முன்னர் உடைக்கப்பட்டு இரும்புப் பாலம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பின்னர் தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன. தற்போது மழை ஓய்ந்துள்ளதால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் ஒரு சில வேலையாள்களை மட்டும் கொண்டு அதன் அபிவிருத்திப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெற்று வருவதாகப் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பணிகள் விரைவுபடுத்தப்படாமல் மந்த கதியில் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அந்த வீதியைப் பயன்படுத்துவோர் தினமும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியாலாளர் வி. சுதாகரனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, ஐந்து கண் பாலம் அபிவிருத்தி ஒப்பந்தகாரர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அதன் பணிகளை விரைவுபடுத்துமாறு அவர்களிடம் வலியுறுத்தியுள்ளேன். பெரும்பாலும் இந்தப் பாலத்தின் அபிவிருத்திப்பணிகள் இந்த மாத இறுதியில் பூர்த்தியாகும் என்று அவர் தெரிவித்தார். (ம-9)

## புத்தாண்டு தினமன்று நெடுந்தீவில்....



மருத்துவ முகாம்: புத்தாண்டு தினத்தன்று வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா தலைமையில் இலவச மார்பு நோய் சிகிச்சை முகாம் மற்றும் சளிப்பரிசோதனை நெடுந்தீவில் நடத்தப்பட்டது. மருத்துவ மாணவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த நிகழ்வில் ஆசிரியை மனோன்மணியால் தயாரிக்கப்பட்ட " காசம் அற்ற தேசம் நோக்கி" என்ற நாடகம் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவ, மாணவிகளால் ஆற்றுகை செய்யப்படுகிறது. (ஓ)

# விசர் நாய்க் கடிக்கு ஆளாவோர் தென்மராட்சியில் திடீர் அதிகரிப்பு

தென்மராட்சி, ஜன.5

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருடம் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விசர் நாய்களினால் கடியுண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதிவேடுகளின் பிரகாரம் கடந்த வருடம் 1099 பேர் விசர்நாய்க் கடிக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து (ஏ.ஆர்.வி) ஏற்றியுள்ளனர்.

கடந்த ஜூலை முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான 6 மாதகாலப் பகுதியில் 700 இற்கும் மேற்பட்டோர் (ஏ.ஆர்.வி) தடுப்பூசி மருந்தை ஏற்றியுள்ளனர்.

மஹிந்த சிந்தனைப் பிரகாரம் கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கக் கூடாது என்பதனால் வீதிகளில் அலையும் நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து நாய்களினால் கடிபடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## மக்கள் போக்குவரத்துக்காக மணியந்தோட்டத்தில் புது வீதி

யாழ்ப்பாணம், ஜன.5

மணியந்தோட்டத்தில் பொது மக்களின் போக்குவரத்துவசதி கருதி புதிய வீதி ஒன்றை அமைக்க நல்லூர் பிரதேசசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கிணங்க புதிய 6ஆம் குறுக்கு வீதி அமைக்கப் படுவதாக நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மே.காந்தசீலன் தெரிவித்தார். (201-7)

# 'காப்பெற்' வீதிகள் அமைக்கும் பணி மீண்டும் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படும்

**வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பிரதம பொறியியலாளர் தகவல்**

யாழ்ப்பாணம்,ஜன.5

மழை காரணமாக யாழ். நகரில் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'காப்பெற்' வீதி அமைக்கும் பணிகள் மீண்டும் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். நகரில் இராசாவின் தோட்டச் சந்தியில் இருந்து ஒட்டு மடம் சந்திவரை 'காப்பெற்' வீதி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பிரகாரம் ஸ்ரான்லி வீதி வரைக்கும் இந்தப் பணிகள் நடைபெற்றுள்ளன.

பின்னர் தொடர்ந்து பெய்த மழை காரணமாக 'காப்பெற்' வீதிகளை அமைக்கும் பணிகள் தடைப்பட்டிருந்தன.

தற்போது மழை ஓய்ந் துள்ளதால் 'காப்பெற்' வீதிகளை அமைக்கும் பணிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் அடுத்த மாத நடுப் பகுதியில் பணிகள் பூர்த்தி யாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# கால்நடை வளர்ப்போர் கூ.சங்கத்தின் நிரந்தரக் கட்டடத்துக்கான காணி இல்லை

அச்சுவேலி, ஜன.5

வலி. கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துக்கு ''யு.எஸ்.எயிட்'' நிறுவனத்தின் நிதியுதவியுடன் நிரந்தரக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. ஆனால் அதற்குத் தேவையான காணி சங்கத்திடம் இல்லை. எனவே மேற்படி கட்டடம் அமைப்பதற்கு இரண்டு பரப்புக்காணி வழங்கி உதவுமாறு மேற்படி சங்கப் பணிப்பாளர்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கால்நடை வளர்ப்போரின் வசதியைக் கருத்தில் கொண்டு அச்சுவேலி, கோப்பாய் ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்களை நிறுவி கடந்த கால நெருக்கடி நிலையி லும் பல்வேறு வகையில் சேவையாற்றியது. தொடர்ந்தும் சேவையாற்றி வருகின்றது. அத்துடன் சங்கத்தின் செயற்பாடுகள் தனியார் இல்லங்களில் வாடகை அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கால்நடை வளர்ப் போர் சங்கங்களுக்குப் பொருத்தமான காணிகளில் கட்டடங் களை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு 10 மில்லியன் டொலர் நிதி உதவியை "யு.எஸ்.எயிட்" நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது.

எனவே வலி.கிழக்கு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துக்கான கட்டட நிர்மாணத்துக்குப் பொருத்தமான காணி இல்லாமையினால் சொந்தமான கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான வாய்ப்பை இழக்கவேண்டி உள்ளது.

கட்டடத்துக்கான காணியைப் பெற்றுக் கொள்வது தொடர்பான பரிசீலனை செய்த சங்கத்தின் பணிப்பாளர் சபை வலி.கிழக்கு பிரதேச செயலர், அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் காணி வழங்கும் வளநிலையில் உள்ள தனியார் ஆகியோரிடம் காணியைப் பொறுவதற்கான கோரிக்கையை விடுத்துள்ளது.

எனவே உரியமுறையில் இரண்டு பரப்புக்காணி கிடைத்தால் இந்த வருடமே சங்கத்துக்கான நிரந்தரக் கட்டடத்தை [illegible] தலைவர் [illegible]. ( 201-11)

# அச்சுவேலி மத்திய கல்லூரியில் மீண்டும் கணினிச் செயற்பாடு

அச்சுவேலி, ஜன.5

அச்சுவேலி மத்திய கல்லூரியின் கணினிக் கூடம் மீண்டும் செயற்படுகின்றது. கணினிக் கூடத்துக்கான மின்சாரக்கட்டண நிலுவை 60 ஆயிரம் ரூபாவை கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் செலுத்தி கணினிக் கூடத்தை இந்தத் தவணையில் இருந்து மீண்டும் செயற்படுவதற்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இதேவேளை, மேற்படி கணினிக் கூடத்துக்கான மின்சாரக் கட்டணம் உரியமுறையில் செலுத்தாமையால் கடந்த வருடம் மூன்றாம் தவணை ஆரம்பத்திலேயே மின்சாரம் துண்டிக்கப்பட்டு கணினிக்கூடம் செயற்படாமல் மூடப்பட்டிருந்தது.

கல்லூரியின் புதிய அதிபர் வே.அரசகேசரி கணினிக்கூடத்தின் நிலை தொடர்பாக பழைய மாணவர் சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததிலிருந்து பழைய மாணவர் சங்கம் மின்சாரக் கட்டண நிலுவையான 60 ஆயிரம் ரூபாவையும் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தியுள்ளது. எனவே இதனை அடுத்து இந்த வாரத்தில் இருந்து கணினிக் கூடத்தில் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (201-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
சிலருக்கு கடனாக பணம் கொடுக்கலாம். தொழில் ரீதியாக வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். உங்களின் மனக்குமுறல்களை மற்றவர்களிடம் புலம்புவீர்கள். புதிய காரியம் ஒன்றில் இறங்கலாமா? அல்லது வேண்டாமா? என்ற மனக்குழப்பம் உண்டாகலாம். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். எதிர்பாராத உதிரி வரவுகளைப் பெறலாம்.

**இடபம்:**
தொடங்கிய சில வேலைகளைப் பாதியில் விட்டு விடலாம். பெரிய மனிதர்கள் சிலர் உங்களைக் குற்றம், குறை சொல்லலாம். சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கி விட்டு மனவருத்தம் அடைவீர்கள். தூக்கமின்மையால் அவதிப்படலாம். உடன் பணிபுரிவோரை விமர்சித்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். கவனம் அவசியம்.

**மிதுனம்:**
பரிசு, பாராட்டுகளைப் பெறும் நாள். தம்பதியர் இடையே ஏற்பட்ட பிணக்குகள் அகலும். அவசரச் செலவுகளுக்காக சில பொருள்களை அடமானமாக வைத்துக் கடன் பெறலாம். தாய்வழி உறவுகள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். பால்ய நண்பர்களைச் சந்திக்கலாம். பணியில் அதிக அக்கறையுடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் மீதான பாசம் கூடும்.

**கடகம்:**
தர்ம காரியங்களுக்காக, நல்ல விடயங்களுக்காகச் செலவுகள் செய்வீர்கள். எந்த விடயத்திலும் மற்றவர்கள் குறை சொல்லாத வகையில் நடந்து கொள்வீர்கள். உடன் பிறப்புகள் மீதான பாசம் அதிகரிக்கும். பார்க்க நினைத்த நண்பர் ஒருவரைப் பாதையில் சந்திக்கலாம். இதோ அதோ என இழுத்துக் கொண்டிருந்த பணவரவுகள் வரலாம்.

**சிங்கம்:**
விருந்தினர்கள் வருகையால் கூடுதல் செலவுகளை எதிர்கொள்ளலாம். எந்த விடயத்திலும் அவசரப்பட்டு முடிவுகள் எடுக்க வேண்டாம். நண்பர்கள் சிலர் உங்களிடம் வாக்குக் கொடுத்து விட்டு அதை நிறைவேற்றாமல் இழுத்தடிக்கலாம். தந்தை வழியில் ஏற்பட்ட சிரமங்கள் குறையும். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகுமோ எனக் கவலை அடைவீர்கள்.

**கன்னி:**
தொழில் ரீதியான நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். பணிபுரிவோர் சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்துக் கவலை அடைவீர்கள். உறவினர் அல்லது நண்பர் ஒருவர் பணம் கேட்டுத் தொந்தரவு கொடுக்கலாம். குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். விரக்தி உண்டாகும்.

**துலாம்:**
கடந்த இரண்டு நாள்களாக இருந்த குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். கணவன்மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். கடனாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் கொடுப்பீர்கள். எதிர்பாராத உதவிகள் கிட்டும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புதிய பாதை தெரியும் நாள்.

**விருச்சிகம்:**
கடந்த இரண்டு நாள்களாக இருந்த குழப்பம் நீங்கித் தெளிவு பிறக்கும். கணவன்மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கடனாக வாங்கியிருந்த பணத்தைத் திருப்பிக் கொடுப்பீர்கள். எதிர்பாராத உதவிகள் கிட்டும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புதிய பாதை தெரியும் நாள்.

**தனுசு:**
சிரமப்பட்டு சில வேலைகளைச் செய்தாலும், அதனால் ஆதாயம் பெறுவீர்கள். மாமன், மைத்துனர்களுக்காகச் சிறு செலவுகளைச் செய்யலாம். அரசியல்வாதிகள் வீண் பேச்சுகளைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகளால் மகிழ்ச்சி, சந்தோஷம் அடைவீர்கள். வியாபாரிகளுக்குப் பணப்புழக்கம் அதிகரிக்கும். அடகு வைத்த பொருள்களை மீட்க நேரிடலாம்.

**மகரம்:**
நீண்ட நாள்களாகத் தள்ளிக் கொண்டே வந்த காரியங்கள் இன்று நடக்க வாய்ப்பு உருவாகும். பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம். சொத்து விவகாரங்களில் சிறு பிரச்சினை ஏற்படலாம். தொழில் ரீதியான உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்டலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். குடும்ப பாசம் கூடும்.

**கும்பம்:**
உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். பிரபலங்களின் நட்புக் கிட்டும். புதுப் பொருள் சேரும். வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மீனம்:**
மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும். சக ஊழியர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். கணவன் மனைவி இடையேயான அன்யோன்யம் அதிகரிக்கும். பல நாள்களாக இழுத்தடித்த சில காரியங்கள் நடக்கலாம். உங்களின் தவறு ஒன்றை மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைக்க முற்படுவீர்கள். பெண்களின் உதவி கிடைக்கும்.

# இலங்கை பணிப்பெண்மீது வல்லுறவு; சந்தேகநபர் நிரபராதியென விடுதலை

கொழும்பு, ஜன.5

இலங்கை பணிப்பெண்ணை வல்லுறவுக் குட்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்ட குவைத் பிரஜையொருவரை அந்த நாட்டு குற்றவியல் நீதிமன்றம் நிரபராதி என அறிவித்து தீர்ப்பளித்துள்ளதாக அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த பணிப்பெண்ணின் சார்பில் வீட்டு ஆட்சேர்ப்பு முகவர் நிலையம் மேற்படி வழக்கைத் தாக்கல் செய்திருந்தது.

சந்தேகநபர் தனது மனைவியுடன் புடைவை வாங்குவதற்காக கடைக்கு சென்றிருந்த போது பணிப்பெண்ணிடம் அப்புடைவையை அணியுமாறு கேட்டிருந்தார் என மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அப்புடைவையை அணிவதற்குத் தான் மறுப்புத் தெரிவித்தார் என்றும் இதனையடுத்துத் தனது அறைக்கு வந்த சந்தேகநபர் தன்னைத் தொடர்ந்து வல்லுறவுக்குட்படுத்தி வந்தார் என்றும் பணிப்பெண் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் பணியிலிருந்து இடை நிறுத்துவதற்காக அப்பெண்ணை ஆட்சேர்ப்பு முகவர் நிலையத்திற்கு சந்தேகநபர் அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த பெண் அச்சம் காரணமாக மேற்படி சம்பவத்தை ஆட்சேர்ப்பு முகவர் நிலையத்திற்கு அறிவிக்கவில்லை. இலங்கைத் தூதரகத்திற்கு தெரிவித்திருந்தார்.

இதேவேளை குறித்த பணிப்பெண்ணின் கூற்றுக்களில் நிவர்த்தி செய்ய முடியாத பல குழப்பங்கள் காணப்படுகின்றன எனச் சந்தேகநபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

குறித்த பணிப்பெண்ணுடன் உரையாட முடியாத நிலையில் அவரைத் திருப்பியனுப்புமாறு சந்தேகநபரின் மனைவி கோரியுள்ளார் என அச் சட்டத்தரணி மேலும் தெரிவித்துள்ளார். (சி)

## வாழ்வாதார அபிவிருத்தி...



உதவி: நியாப் திட்ட சுழற்சிமுறைக் கடன் திட்டத்தில் சரவணை கிழக்கு ஜே/20 கிராம அலுவலர் பிரிவு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் 14 பயனாளிகளுக்கு 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி வழங்கும் நிகழ்வு சரவணை பொது மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.
நிகழ்வில் பயனாளி ஒருவருக்கு சரவணை கிழக்கு ஜே/20 கிராம அலுவலர் கா.கணேசலிங்கம் உதவித் தொகை வழங்குகிறார். அருகில் வேலணைப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.செல்வச்சந்திரன் நிற்கிறார். (201)

## சாரணர் சங்கத்தின் 5 ஆவது ஜம்போறி அம்பாந்தோட்டையில்

தென்மராட்சி, ஜன. 5

இலங்கை சாரணர் சங்கத்தின் எட்டாவது தேசிய சாரணர் ஜம்போறி அம்பாந்தோட்டை அங்குறு கொலபெவல விளையாட்டு மைதானத்தில் கடந்த 27 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கையில் உள்ள அனைத்து சாரணர் மாவட்டங்களின் சாரணர் அணிகள் கலந்து கொண்டன.

இறுதி நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட இளைஞர் அணியின் தலைவர் நாமல் ராஜபக்ஷ இளைஞர் சேவை பயிற்சிகளில் கலந்து கொண்டோருக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தார். (201-207)

## இன்று தான் உன்னைப் புரிந்தது...



நம் நாட்டில் காதல் திருமணங்கள் குறைவு. பெற்றோர் பார்த்து முடிவு செய்யும் திருமணங்களே பெரும்பாலும் நிகழ்கின்றன. முன்னரே பார்த்துப் பழகியிருக்காமல் கணவனும், மனைவியுமாக ஆகிறவர்கள், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளச் சிறிது காலம் ஆகும். திருமணமான பின் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் பூசலிட்டுக் கொள்வதும் உண்டு. பெரியவர்கள் பூசலைப் பெரிதாக்காமல் அவர்களிடையே பாலமாக இருந்து சேர்த்து வைக்க வேண்டும்.

திருமணமாகிப் பதினைந்து வருடத்துக்குப் பிறகு கணவன் மனைவியிடையே தகராறு, சண்டை அதிகரித்த நிலையில், "இன்று தானடி உன்னைப் புரிந்தது" என்றான் கணவன். ஆனால் மனைவி, "உன்னை எனக்கு அன்றைக்கே புரிந்து விட்டது" என்றாள்.

"உன்னுடைய அப்பா எனக்கு ஏதாவது வரதட்சணை கொடுத்தானா? நானாவது கேட்டேனா? உனக்குக் கொஞ்சம் கூட நன்றியில்லையே?"

"உன்னுடைய முகத்துக்குப் பெண் கொடுத்ததே பெரிய விடயம். அதனை விட வரதட்சணையும் கொடுப்பார்களா?" என்றாள் மனைவி.

"உன்னுடைய அப்பா திருமணத்தன்று இந்தக் கடிகாரத்தைக் கொடுத்தார். பார் கடிகார அழகை!" எனக் கணவன் கூறினான்.

"ஏன் கடிகாரத்துக்கு என்ன உங்களுடைய உடம்பில் இந்தக் கடிகாரம் ஒன்று தான் அழகாக இருக்கிறது" என்றாள் மனைவி.

உன்னுடைய அப்பாவிடம் அன்றைக்கே நான் கேட்டேன் "என் மாமா வேறு ஏதாவது கொடுக்காமல் கடிகாரம் கொடுக்கிறார்கள் என்று. அதுக்கு அந்த ஆள் என்ன சொன்னார் தெரியுமா? மாப்பிள்ளே! வேறு ஏதாவது கொடுத்தா ஓடிவிடும் கடிகாரந்தான் ஓடாது என்றார், சரியாகத் தான் சொன்னார். கடிகாரம் ஓடவே இல்லை. நான் தான் மணிக்கு மணி திருப்பி வைத்திருக்கிறேன்" எனக் கூறினார்.

இவ்வாறு கணவன் மனைவியிடையே தகராறுகள் வருவதுதான் பல குடும்பங்களிலும் இடம் பெறுகின்ற அன்றாடக் காட்சி.

ஒருவரின் குணத்தை மற்றவர் புரிந்து கொள்ள வேண்டும் அதற்கேற்ப நடந்து கொள்ளவேண்டும்.

"உங்கள் வீட்டுக்காரர் பிரியமாகச் சாப்பிடுவது என்னம்மா? " என்று யாராவது கேட்டால், "அது எதைப் போட்டாலும் உண்ணும்" என்பாள் மனைவி. இது எதனால்? மனைவி பரிமாறும் உணவை சுவைத்துச் சாப்பிடவேண்டும், நன்றாக இருப்பதைப் பாராட்ட வேண்டும். அவ்வாறு பாராட்ட மறுத்துச் சாப்பிடுவதால் தான் "அது எதைப் போட்டாலும் உண்ணும்" என்று ஆடு மாட்டைக் கூறுவது போல் கூறுகிறாள்.

கணவனின் ஆற்றலை மனைவியும் மனைவியின் ஆற்றலைக் கணவனும் பாராட்ட வேண்டும். இதனால்தான் இருவர் உள்ளமும் இணைந்தால் இல்லறம் சிறக்கும், இருவர் உள்ளமும் பிணங்கினால் இல்லறம் கசக்கும் என்று கூறப்படுகிறது.

இவ்விடத்தில் ஒரு நகைச் சுவைத் துணுக்கை நோக்கலாம் -


மனைவி - நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், நான் இறந்தால் என்னை மாதிரிப் பெண் ஒருத்தி உங்களுக்குக் கிடைக்க மாட்டாள்."

கணவன்- "மிகவும் நல்லது, அப்பவும் உன்னை மாதிரி ஒரு பெண்ணை ஏன் திருமணம் செய்யவேணும்? நல்ல பெண்ணைத் திருமணம் செய்து கொள்வேன்" என்றான் கணவன் - எனவே குடும்பத்தில் ஏற்படும் சிறு சிறு பிணக்குகள் இத்தகைய நிலைமைக்கு வளர்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது கணவனுக்கும் மனைவிக்கும் கட்டாயமான பண்பாகும்.

சுகி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன் (2)



யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்

யூலியன் அசாஞ்சே!

உலகம் முழுதும் எல்லோராலும் இப்போது உச்சாடனம் செய்யப்படும் பெயர்; விக்கிலீக்ஸ் தளத்தின் நிறுவுநர் இந்தத் தொடரின் நாயகன்.(வழமையாகத் தமிழ் சினிமாவில் நாயகன் மின்னல், இடி, தாரை, தப்பட்டை சகிதம் பூமாரிபொழிய அறிமுகமாகியே எமக்குப் பழக்கம். அந்தப் பழக்கத்தை விரும்புகிறவர்கள் இப்போது - யூலியன் அறிமுகமாகும் தருணத்தில்- 'புலி உறுமுது, இடி இடிக்குது' என்ற பாடலையோ அல்லது 'சிங்கம் ஒன்று புறப்பட்டதே!' என்ற பாடலையோ தமக்கு விரும்பியபடி மனத்திரையில் ஓட விட்டு ரசிக்கலாம்)

விடிந்தும் விடியாத ஒரு காலைப்பொழுதில் சோமாலிய மதகுருவின் பொட்டுக்கேடுகளைப் புட்டுப் புட்டு வைத்தது விக்கிலீக்ஸ் இணையத்தளம். அதுமுதல் ஊடகத்துறையினர் மட்டுமல்லாது உலகத்தவர் எல்லோருமே இந்தத் தளத்தை உற்றுப் பார்க்கத் தொடங்கினர். விக்கிலீக்ஸ் எனும் புலனாய்வு இணையத்தை நிறுவி உலகெங்கும் நிகழ்கின்ற கண்ணுக்குத் தெரியாத மர்மங்களை உடைப்பதற்குப் பிள்ளையார் சுழி போட்டவர்தான் யூலியன் அசாஞ்சே. அவுஸ்ரேலியாவைப் பூர்வீகமாகக் கொண்ட அசாஞ்சே தன்னுடைய விக்கிலீக்ஸ் தளத்தை மற்றெல்லா இணையங்களை விடவும் வித்தியாசமானதாகவும் பரபரப்பான தகவல்களை சகல ஆதாரங்களோடும் வெளியிடும் பண்பு கொண்டதாகவும் உருவாக்கினார். அசாஞ்சேயின் பரபரப்பான தகவல் வேட்டைக்கு முதற் பலிதான் சோமாலிய மதகுரு.

சோமாலியா மதகுரு எப்படிச் சிக்கினார் என்பது இன்னமும் கூட அந்த மதகுருவுக்குத் தெரியாத விடயமாகவே இருக்கிறது. ஆனாலும் இணையக் கில்லாடியான அசாஞ்சேக்கு இதெல்லாம் சர்வசாதாரணமே.

அசாஞ்சேயின் பொழுதுபோக்கே இணையத்தில் எந்நேரமும் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கும் இரகசியங்களைக் கண்டறிவதுதான். அவ்வாறு இணையத்தில் அசாஞ்சே மூழ்கியிருந்த போதுதான் சோமாலிய மதகுருவின் மின்னஞ்சல் திறந்தபடியே இருப்பதைக் காண நேர்ந்தது. தன்னுடைய எண்ணம் ஈடேறிவிட்டது என்ற ஆனந்தக் கூத்தில் நண்பருக்கு மின்னஞ்சலை அனுப்பிவிட்டு அதிலிருந்து சம்பிரதாயபூர்வமாக வெளியேறாமலேயே (சைன் அவுட் பண்ணாமலேயே) அவசர அவசரமாகக் கணனியின் மூச்சை நிறுத்திவிட்டார் மதகுரு. இது சோமாலியாவிலிருந்து எங்கோ ஓர் மூலையில் இணையங்களை நோண்டிக்கொண்டிருந்த அசாஞ்சேயின் கழுகுப் பார்வையில் சிக்கிவிட்டது. விடுவாரா அசாஞ்சே?

தன்னுடைய இணையத்தளத்தை பரபரப்பாகப் பார்க்கவைப்பதற்கு ஒரு விடயம் கிடைத்துவிட்ட மகிழ்வில் சுறுசுறுப்பானார். மதகுருவின் எல்லா மின்னஞ்சல்களும் அலசப்பட்டன. இதன்போது தனது நண்பருக்குத் 'தொழில் முறைக் கொலையாளிகள் அல்லாத ஆனால் கொலை செய்வதில் கெட்டித்தனம் உள்ள நாலு பலசாலிகள் தேவை' என்ற தொனியில் மதகுரு அனுப்பிய கடிதமும் அதற்குப் பதிலளித்து நண்பர் அனுப்பிய கடிதமும், காரியம் முடிந்தவுடன் எல்லாவற்றையும் விலாவாரியாகத் - தன்னுடைய வாக்கு மூலம் போல - மதகுரு நண்பருக்கு அனுப்பிய நன்றிக் கடிதமும் யூலியனின் வலையில் வீழ்ந்தன. அதிலுள்ள அத்தனை விடயங்களையும் அலசி ஆராய்ந்து, மோமாலியாவில் மதகுருவால் கொலையுண்டவர்களில் விவரங்களையெல்லாம் தேடிப்பிடித்து ஒன்றிணைத்து விக்கிலீக்ஸின் முன்பக்கங்களில் நிரப்பினார்.

மதகுருவின் கொலை முகத்தைக் கண்டு உலகமே திகைத்தது. ஆன்மீகக்குரு ஒருவர் படங்களில் வருகின்ற வில்லனைப் போன்ற கொடூரங்களைப் புரிந்தமை ஆதாரத்தோடு வெளிவந்ததைக் கண்டு சோமாலியாவின் மத அமைப்புகள், குறித்த மதகுருவுக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்கின. தன்னுடைய மின்னஞ்சலின் இரும்புக் கதவுகள் உலகத்தின் முன்னால் திறந்துகொண்டதும் மதகுருவால் எதுவுமே செய்ய முடியவில்லை.

பேயறைந்தவர் போல திகைப்பைச் சுமந்துகொண்டு, முத்து படத்தில் வருகின்ற வயதான ரஜினியைப் போல 'விடுகதையோ இந்த வாழ்க்கை' என்று சோகமாகப் பாடிக்கொண்டே தன்னுடைய தலைமைக்குரு பதவியைப் பறிகொடுத்துவிட்டுப் போவதைத் தவிர மதகுருவுக்கு வேறு தெரிவெதுவும் இருக்கவில்லை. கம்பிக் கூண்டுக்குள் வாடிக் கொண்டிருக்கும் மதகுரு நொடிக்கொரு தடவை யூலியன் அசாஞ்சேயை நினைத்து மனத்துக்குள் இன்னமும் உறுமிக்கொண்டிருப்பது மட்டும் நிச்சயம்.

ஓளண்யன்

சோமாலிய மதகுருவின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தியதன் மூலம் விக்கிலீக்ஸ் என்ற பெயர் பட்டிதொட்டியெங்கும் பரவியது.ஆனாலும் அசாஞ்சே நினைத்தது இதை அல்ல. அவரைப் பொறுத்தவரை மதகுருவின் கொலைகளைப் பகிரங்கப்படுத்தியது. யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றதுதான். எதையும் பிரமாண்டமாகச் செய்யவேண்டும் என்ற தேடல் உடையவர் அவர். ஆகவே இரகசியப் புதையல்களைத் தேடும் வேட்டையில் அவர் இறங்கினார். சாதாரணமான கணினியறிவுள்ளவர்களுக்கு இணைய இரகசியங்களைக் கண்டுபிடிப்பது கஷ்டமான காரியம்தான். ஆனாலும் யூலியன் அசாஞ்சே போன்ற இணைய மகாக் கில்லாடிகள் அதனை இலகுவாகக் கண்டுபிடிப்பார்கள்.

ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும் இணைய ரகசியங்களை மிகப் பொறுமையுடன் அவதானித்துக் கொண்டிந்தார் அசாஞ்சே. அந்தப் பொறுமைக்குப் பரிசு கிடைத்தது. ஒரு சில ஆவணங்களை மாத்திரமே எதிர்பார்த்துத் தேடிய அசாஞ்சேக்கு இலட்சக்கணக்கில் இரகசியங்கள் சிக்கத் தொடங்கின. அந்த இரகசியங்களின் கதவுகள் ஒவ்வொன்றாகத் திறந்து கொண்டபோது முழு உலகுமே உறைந்துபோனது. அந்த இரகசியங்கள் என்ன?

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

---

# றோட்டோரத்திலே...

எப்போதுமே பிறர் நலனைவிடவும் தம்முடைய தனிப்பட்ட வசதியை மட்டுமே மனதில் கொண்டு காரியமாற்றுவதற்கு யாழ்ப்பாணத்தவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. இதனால் என்னதான் விபரீதம் நிகழ்ந்தாலும் அதைப்பற்றியெல்லாம் அவர்களுக்கு அக்கறை இல்லை.அதிலும் தம் வீட்டின் முன்னால் உள்ள வீதியில் பிறரின் போக்குவரத்துக்கு இடையூறு பண்ணுவதற்கென்றே பலவித வழிமுறைகளையும் இவர்கள் கைக்கொள்கின்றனர். பிறர்படும் துன்பத்தைப் பார்த்து ரசிப்பதற்கென்றே காரியமாற்றுபவர்களும் நம்மிடையே உள்ளனர்.

மழையின் வரவோடு வீதிகளின் இருமருங்கிலும் பச்சையாய்ப் புற்கள் தலைக் காட்டத்தொடங்கி விடும். ஆடு, மாடு வைத்திருப்பவர்களுக்கு இது வசதியாகப் போய்விடுகின்றது. தூர இடங்களுக்குச் சென்று தமது கால்நடைகளை மேய்ச்சலுக்காகக் கட்டவேண்டிய கவலை இருந்த இடம் தெரியாமல் பறந்தோடிப் போய்விடும். வீட்டுக்கு முன்னால் பச்சைப் பசேலெனப் புற்கள் வளர்ந்திருக்கையில் வேறெங்கோ - தூரவாகக் - கொண்டு சென்று தமது கால்நடைகளை மேய விட யாழ்ப்பாணத்தவர்கள் என்ன இளிச்சவாயர்களா? இவ்வாறு மேயக் கட்டும் போது நிலமட்டத்தில் இருந்து எப்படியும் இரண்டு அடி உயரத்தில் கயிற்றைக் கட்டாவிட்டால் எம்மவர்களுக்குப் பத்தியப்படாது.

அப்படியான ஒருவரின் இரண்டு மாடுகள் ஒரு மாலைநேரத்தில் கோப்பாய் - இராச பாதையில் வீதியோரமாக மூசி,மூசி மேய்ந்துகொண்டிருந்தன. தமது தீவனத்தை அடைவதிலேயே குறியாக இருந்த அந்த இருமாடுகளும் வீதியில் செல்வோரைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலை கொள்ளவில்லை. யாழ் - பருத்தித்துறை வீதி புனரமைக்கப்பட்டு வருவதால் குறித்த வீதியையே பெரும்பாலானோர் தற்போது பயன்படுத்தி வருகின்றனர். மாலைநேரமென்பதால் தம்முடைய அலுவல்களை முடித்துக் கொண்டு வீடு செல்ல வேண்டும் என்ற அவசரகதியில் பலரும் விரைந்து கொண்டிருந்தனர். அவர்களில் வியாபாரி ஒருவர், இதற்கு மேல் பொருள்களைக் கட்ட முடியாது என்று சொல்லுமளவுக்கு, எம்.ரி. நைன்ரி மோட்டர் சைக்கிளில், முக்கித்தக்கி வந்து கொண்டிருந்தார். இதோ! வந்து விடப் போகிறேன் என்று மழையும் பயம் காட்டிக் கொண்டிருந்தது. மழை வந்துவிட்டால் அவ்வளவுதான் [illegible] செல்லும் பொருள்கள் எல்லாம் நாசமாகி விடும்.



பதற்றத்தோடு பயணித்துக் கொண்டிருந்தவர் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்த இடத்தை அண்மித்தார்.பரமசாது போல தரையோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருந்த மாட்டின் கயிற்றை வியாபாரி [illegible] சமயத்தில், அது சுனாமி அலை மாதிரி வீறுகொண்டெழுந்தது. அடுத்த நொடி அந்தரத்தில் பறந்து வித்தை காட்டி விட்டுச் சட்டென முகம் குப்புற விழுந்து மண்ணை முத்தமிட் டார் வியாபாரி. அவர் மினக்கெட்டுப் பத்திரமாகக் கொண்டு வந்த பொருள்கள் எல்லாம் தரையெங்கும் பரவி, கண்காட்சிப் பொருள்களாயின. விழுந்து கிடந்த வியாபாரி தலையை நிமிர்த்திப் பார்த்த போது, அவருக்குப் பின்னால் வந்த இன்னும் சில மோட்டார் சைக்கிள் பயணிகளும் அவரைப்போலவே நடு வீதியில் அங்கப்பிரதட்சணை செய்து கொண்டிருந்தனர். விழுந்தவர்கள் எல்லோரும் விபத்தால் உண்டான காயங்களின் வலிகளோடு எழுந்து நின்று தமது மோட்டார் சைக்கிளுக்கு ஏற்பட்ட சேதங்களைக் கவலையோடு பார்த்துக்கொண்டிருக்கையில் வாயெல்லாம் பல்லாக மாடுகளின் உரிமையாளர் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தார்.

''கண்ணை மூடிக்கொண்டு, பிளேனில போறமாதிரி முறுக்கிக்கொண்டு போனால் உப்பிடித்தான். உங்களுக்கெல்லாம் லைசென்ஸ் ஆர் தந்தது?. நல்ல காலம் என்ர மாடுகளில மோதாமல் விட்டிட்டீங்கள்.'' என்று சாவகாசமாகச் சொல்லியபடியே தனது மாடுகளைச் சற்றுத் தள்ளி, மீண்டும் 2 அடி உயரத்தில் மேயக்கட்டிவிட்டுச் சென்றார் அவர்.

எப்படியிருக்கிறது நியாயம்? இன்னமும் அவர்மட்டுமல்லாது ஏராளமானோர் இப்படித்தான் தமது கால்நடைகளை மற்றவர்களுக்கு இடையூறு வந்தாலும் பரவாயில்லை என்ற நினைப்பில் றோட்டோரங்களில் கட்டிவருகிறார்கள். இப்படியான பிரகிருதிகள் இருப் பதால் தான் இங்கு மாதம் மும்மாரி பொழிகிறது போலும்.

*

கோணல் பக்கங்கள்

ஓடுகாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பெண்களுக்கு ஆண்கள் நண்பர்களே...

கலாசாரம், பண்பாடு போன்ற விடயங்களால் பெண்கள் சீரழிந்து போவதற்கு பெற்றோரும் ஒரு விதத்தில் காரணமாக இருக்கின்றனர். பிள்ளைகளை நல்வழிப்படுத்தல், அவர்களது வாழ்வின் எதிர்காலத்தை சிறந்த முறையில் உருவாக்குதல் போன்றனவே பெற்றோரின் கடமையாகும்.

பாலின வேறுபாடு இன்றி பெண்கள் ஆண்களுடன் நட்புறவுடன் பழகுவதைச் சில பெற்றோருடன் சமூகத்தினரும் தப்பான கண்ணோட்டங்களில் பார்க்கின்றனர். ''எங்கே நமது பிள்ளைகள் வழி தவறிப் போய்விடுவார்களோ என்ற மனப் பயம்தான்'' இதற்குக் காரணம். அது மட்டுமல்லாமல் பெற்றோர் கண்டிப்புடன் பிள்ளைகளைப் பாதுகாத்து வளர்க்கும்போது அவர்கள் உள ரீதியாகப் பாதிப்படைந்து தவறுகள் செய்வதற்குக் காரணமாகின்றனர். ஆண், பெண் என்பது கடவுளால் உருவாக்கப்பட்டது. அதை நாம்தான் வேற்றுமையாக எண்ணுகின்றோம்.

பெண்கள் ஆண் நண்பர்களுடன் நட்புறவுடன் பழுகுவதைப் பெற்றோர்கள் அனுமதித்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவது பெண்கள் நல்வழியில் வாழ்வதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக அமையும். ஆண்கள் கெட்டவர்கள் என்ற எமது தாழ்வான எண்ணத்தைத் தூக்கி எறிந்து அவர்கள் தவறான செயற்பாடுகளைச் செய்வதற்கான காரணிகள் எவ்வாறு உருவாகின்றன என்பதை பெண்களாகிய நாம்தான் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

ஆண், பெண் பாகுபாடின்றித் தமது வாழ்வைத் தொடரும் போது ஆண் பிள்ளைகள் பெண்பிள்ளைகளுடன் சகோதரத்துவமாக, சமத்துவத்துடன் பழகத் தொடங்குவார்கள். அவ்வாறின்றித் தனிமைப்படுத்தி வளர்க்கும்போது நான் என்ற ஆதிக்கம் மனதில் தோன்றும். இதனால்தான் தவறுகள் நடைபெறுகின்றன.



சிறுவயதிலே இவ்வாறு வேறுபாடின்றி பெண் பிள்ளைகளை எல்லோருடனும் பழகுவதற்கு அனுமதிக்க வேண்டும். அத்துடன் கவனிப்பும் இருத்தல் வேண்டும். அது பிள்ளைகள் மத்தியில் உளத்தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாது.

பெண்பிள்ளைகள் தமக்குரிய கட்டுப்பாட்டுடன் இருப்பதற்கு உடல் ரீதியாகவும், உணவுகள் சம்பந்தமாகவும் முக்கிய விடயங்கள் பற்றிய விழிப்புணர்வை பருவம் எய்திய காலத்தில் இருந்து பெற்றோர்கள் பெண் பிள்ளைகளுக்கு ஏற்படுத்த வேண்டும்.

பெண் பிள்ளைகளை ஆண்களுடன் பழகவிடாது வீட்டுக்குள் வைத்து வளர்ப்பதுதான் சரியென நினைத்துப் பிள்ளைகளையும் உள ரீதியாகப் பாதிப்படையச் செய்து தாமும் பயந்து கொண்டிருப்பது அவசியம் தானா?

நிஷா.

# வாயாடிகளா பெண்கள்?



ந.இலக்கியன்.

பெண்களுக்கு ஒரு விசேட குணம் உண்டு. ஏதேனும் சக தோழியைக் கண்டால் உற்சாகமான உரையாடலைச் சட்டென ஆரம்பித்து விடுகிறார்கள். கடை வீதி, அலுவலகம், ஆலயம் ஏன் சுட்டெரிக்கும் தார் வீதி என்றால் கூட இந்த உரையாடல்தடைப் படுவதில்லை.

நலமா? எனத் தொடங்கும் உரையாடல் குழந்தைகள், வீடு, வேலை, மாமியார், நண்பர்கள் எனக் கிளை விட்டுப் பரந்து விரிந்து பொழுது போவதை அறியாமல் பேசிக்கொண்டே இருப்பார்கள்.

பெண்களின் உரையாடல் பெரும்பாலும் வறட்டு உரையாடலாய் இருப்பதில்லை. சிரிப்பும் கேலியும் கிண்டலும் உற்சாகமும் என உலகத்தின் மிக முக்கியமான பணி உரையாடல் என்பது போல அவர்கள் அதில் ஒன்றிவிடுவார்கள்.

ஆண்கள் பலருக்கும் இந்தக்கலை வாய்ப்பதில்லை. நலமா ? என ஆரம்பிக்கும் உரையாடல் நல்லா இருக்கேன் என்ற பதிலைக் கேட்டபின் எப்படித் தொடர்வது எனத் தெரியாமல் நொண்டியடிக்கும்.

அதனால் எழுகின்ற பொறாமையோ என்னவோ இந்தப் பெண்களே இப்படித்தான், யாரையாவது பார்த்தால் போதும் மணிக்கணக்காய் பேச ஆரம்பித்து விடுவார்கள் எனத் ஆண்கள் அடிக்கடி அலுத்துக் கொள்கிறார்கள்.

இப்படி மனம் விட்டு உரையாடுவதும் நண்பர்களுடன் பேசி மகிழ்வதும் பெண்களின் ஆரோக்கியத்துக்கு மிகவும் நல்லது எனும் புதிய ஆராய்ச்சி ஒன்றை மிச்சிகன் பல்கலைக் கழக ஆய்வாளர்கள் வெளியிட்டுக் கதை பேசும் பெண்களின் மனதில் இன்னும் கொஞ்சம் இன்பத்துப்பால் வார்த்திருக்கிறார்கள்.

மனித உடலிலுள்ள புரோகெஸ்ட்ரோன் எனும் ஹார்மோன் மன அழுத்தத்தையும், கவலை, பதட்டம் போன்றவற்றையும் குறைக்கக்கூடிய தன்மை உடையது. மனம் விட்டுப் பேசிச் சிரித்து உரையாடும் பெண்களின் உடலில் இந்த ஹார்மோன் அதிக அளவில் இருப்பதாகவும், இதுவே பெண்களின் மன மகிழ்ச்சிக்கு உத்தரவாதம் தருவதாகவும் அவர்களின் மருத்துவ விளக்கம் கூறுகிறது.

இத்தகைய உரையாடல்கள் வெறுமனே பொழுது போக்காக மட்டும் அமைந்து விடாமல் பெண்களுடைய நட்பு இறுக்கத்துக்கும் உதவும் மனப்பான்மைக்கும் கூடத் துணை செய்கிறது.

ஆனால் இப்போதெல்லாம் பெரும்பாலும் தொலைக்காட்சித் தொடர்களில் நேரம் செலவிடும் பெண்களுக்கு உரையாடலுக்காகச் செலவழிக்கும் நேரம் குறைந்து கொண்டே வருகிறது என்பது கண் கூடு. அத்தகைய சற்றும் பயன்தராத தொலைக்காட்சித் தொடர்களை விலக்கி விட்டு ஆரோக்கியமான உரையாடலுக்குப் பெண்கள் திரும்பினால்அறிவை விருத்திசெய்து உடல் ஆரோக்கியமாக வாழமுடியும்.


# சாதனைப் பெண்



மேரிகியூறி என்ற பெண்மணி 19வயதுக் கன்னியாக இருந்தபோது ஒரு செல்வந்தரின் வீட்டில் 10 வயதுக்குழந்தையைப் பராமரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தாள். அப்போது கிறிஸ்மஸ் விடுமுறை தினத்திற்கு வீட்டிற்கு வந்த, வீட்டுச்செல்வந்தரின் மூத்த மகன் மேரிகியூரியின் மீது காதல்கொண்டான். அவளைத் திருமணம் செய்ய விரும்பிய விடயம் செல்வந்தரின் காதுக்கு எட்டியதும் அரைக்காசுக்குக் கூட வழியில்லாத வேலைக்காரியையா மணக்கப்போகிறாய்? எனக் கடிந்துகொண்டார். இந்த விடயத்தை அறிந்த மேரிகியூரி வைராக்கியத்துடன் திருமண நினைப்பை நீக்கிவிட்டு பாரிசுக்குச் சென்றாள். அதன் பின்னர் விஞ்ஞானத்தில் தன்னை அர்ப்பணித்து ரேடியோக் கதிர் வீச்சுப்பற்றிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டு வெற்றியீட்டி அதில் நோபல் பரிசையும் பெற்றுக்கொண்டாள்.

கறுப்பி.

# என் அன்னையே...



அன்னையே.....!
என்னைப் பெற்றெடுக்காத
அன்னையே....
என் மேல் ஏன் உனக்கு
இப்படி ஒரு வெறுப்பு
பெற்றால் தான் பிள்ளையா?
சொல் ஒரு வார்த்தை
உன் உதிரம் தானே
என் உடலிலும்...
அதில் ஏதும் சந்தேகமா?
விடை தெரியாத
எத்தனையோ வினாக்கள்
என் இதயத்தைத் துளைத்து
உயிரை வெளியேற்றுகின்றன
சொல் ஒரு தடவை
உன் பதிலை....
'சிசேரியன்' மூலம் நான்
பிறந்தது தான்
இத்தனைக்கும் காரணமா?
சொல்லிவிடு என் அன்னையே....
எனக்கு ஒரு பதில் சொல்லிவிடு!



வினா.

## பெண்கள் பொம்மையா?

ஓர் ஆணுக்கு அவள் சமையல்காரி,
ஓர் ஆணின் வீட்டிற்கு அவள் வீட்டுக்காரி,
ஓர் ஆணின் கண் அழகிற்கும் மனப்
புளகாங்கிதத்திற்கும்
ஓர் அழகிய அலங்கரிக்கப்பட்ட பொம்மை
என்பதல்லாமல் பெண்கள் பெரிதும்
எதற்குப் பயன்படுகிறார்கள்?
பயன்படுத்தப்படுகிறார்கள்-
என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.
இது என்ன நியாயம்? மனித சமுதாயம் தவிர
மற்றபடி மிருகம், பட்டுப்பூச்சி, ஐந்து
முதலியவைகளில்
வேறு எந்த ஜீவனாவது ஆண்களுக்காகவே
இருக்கிறோம் நாம் என்ற கருத்துடன்
நடத்தையுடன்
இருக்கிறதா என்று பாருங்கள்.
இந்த இழி நிலை
பெண்களுக்கு அவமானமாய்த்
தோன்றவில்லையா?
ஆகவே ஆண்கள் பெண்களை இவ்வளவு
[illegible]
நடத்தலாமா? என்று கேட்கிறேன்.

இ.பகலவன், உடுவில்.

# ஏழை நான்



அன்று நீ
என்னைச் சீதனமில்லாமல்
மணந்தாய் - ஏன்
உனது வயதோ
நாற்பது

என் இள மன ஆசைகள்
எல்லாம் கற்பனை - ஆனாலும்
நான் ஒரு
அதிர்ஷ்டசாலி - ஏனெனில்

லட்சங்கள் தேடும் இளஞர்கள்
மத்தியில் நீ ஒரு மேதை - ஆனால்
பூவோடும் பொட்டோடும்
வாழ்வதற்கு
நான் போராடுகின்றேன்
சீதனச் சந்தையில்
சீர்கெட்ட வாலிபர்
செய்திடும் அராஜகத்தை
எதிர்த்துப் போராடும்
தமிழ்ப் பெண்ணின் போராட்டம்
புதுப்பொலிவு பெறுவது
எப்போது?

வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி அம்மன் கோயில் துறைமுகம்



- லக்ஸ்மன்

குடாநாட்டுடன் தரைவழியாக இணைக்கப்படாத தீவுகளில் அனலைதீவும் ஒன்று. இங்கிருந்து யாழ். நகர் செல்வதற்கு முன்னர் ஊர்காவற்றுறைத் துறைமுகம் பயன்படுத்தப்பட்டது. தீவுப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து கண்ணகி அம்மன் கோயில் துறைமுகம் தற்போது பயன்பாட்டில் இருந்து வருகின்றது. மெலிஞ்சிமுனைத் துறைமுகம் எனவும் இது அழைக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறைத் துறைமுகம் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததையடுத்துப் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இது பயன்படுத்தப்பட்டது. முன்னர் இந்தப் பகுதியைப் பயன்படுத்தியவர்கள் மீனவர்களும் போராளிகளுமாவர். அனலைதீவுக்கும் மெலிஞ்சிமுனைக்கும் இடைப்பட்ட தூரத்தைக் கடக்க 45 நிமிடங்களாகும். அனலைதீவு மக்களுக்குப் போக்குவரத்து ஒன்றும் பெரும் பிரச்சினை இல்லை. பத்துக்கும் அதிகமான படகுகள் சேவையில் உள்ளன. எல்லாமுமே தனியாருக்குரியவை. சுமார் 40வருடங்களுக்கு முன்னர் அனலைதீவு கடல் போக்குவரத்தை அப்போதிருந்த படகுச் சங்கம் கவனித்து வந்தது.

அனலைதீவில் இருந்தும் மெலிஞ்சிமுனையில் இருந்தும் காலையில் மூன்று சேவைகள் இடம்பெறுகின்றன. காலையில் 8மணி, 9மணி, 10மணிக்கு அனலைதீவில் இருந்து புறப்படும் படகுகள் அங்கிருந்து 9மணி 10மணி 11 மணிக்கும் மீண்டும் அலைதீவுக்குச் செல்வதால் பயணிகள் எவ்வித தடங்கலுக்கும் ஆளாகுவதில்லை. வெளியிடங்களில் இருந்து அங்கு கடமைக்காக வரும் உத்தியோகத்தர்களுக்கு இந்தப் போக்குவரத்து வசதியாக அமைய வேண்டும் என்பது அங்குள்ள மக்களின் ஒட்டுமொத்தக் கருத்தாகும். பிற்பகலில் 3 மணிக்கு ஒரு சேவை இடம்பெறுகிறது. இது மெலிஞ்சி முனையில் இருந்து மாலை 4.30 மணிக்குத் திரும்புகிறது. நாளொன்றுக்கு நான்கு தடவைகள் என்பதால் போக்குவரத்தில் கஷ்டம் என்று சொல்லிக்கொள்ள வாய்ப்புக்கள் இல்லை. பஸ்சேவைகளும் இதன் இணைப்பாக உள்ளன. எனினும் சில உத்தியோகத்தர்கள் அனலைதீவுக்குப் போவதில் கஷ்டம் என்கிறார்கள். போக்குவரத்தைப் பொறுத்தவரை கஷ்டம் என்பது ஏற்புடையதல்ல. சில படகினரைப் போன்று அதிக சனங்கள் இருந்தால்தான் போகலாம். இல்லையேல் படகு சேவையில் ஈடுபடாது என்ற நிலை அங்கு இல்லை. ஒரு ஐந்து, பத்துபேர் இருந்தாலும் படகுச் சேவை இடம் பெறுகிறது. ஒருவருக்குக் கட்டணம் ரூபா 40ரூபாவாக அறவிடப்படுகின்றது. சில சமயங்களில் எரிபொருளுக்கே காசுதேறாது. இருந்தாலும் சேவையை ஒழுங்காகவே முடிந்த வரை செய்து வருகிறோம் என்கிறார்கள் படகு உரிமையாளர்கள்.




இந்தச் சேவையில் பின்னாளில் நெடுந்தீவுச் சேவையில் இருந்த அலையரசி, தேவாரதம் (ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்கானது) இரண்டும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அலையரசி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டில் 1979ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி அனலைதீவுச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 1991ஆம் ஆண்டுவரை பயணிகளை ஏற்றி இறக்கியது. தேவாரதம் பெரிய அளவில் சேவையில் ஈடுபட்டதாக இல்லை. இப்போது நீண்ட நாள்களாகப் பழுதடைந்த நிலையில் இந்தப்படகு உள்ளது. இந்தப்படகை அனலைதீவு பல. நோ.கூ. சங்கத்துக்கு வழங்க இருந்ததாகவும் அதனைத் திருத்தியமைக்கக் கூடிய பணவசதிகளற்ற நிலையில் சங்கம் அதனைக் கையேற்க முன்வரவில்லை எனவும் தெரிகின்றது.

தனியார் படகுகள் சேவையில் இருந்தபோதும் அனலைதீவுக்கு அரசாங்கம் போக்குவரத்துச் சேவையை நடத்தவேண்டும் என்பதில் மக்கள் விடாப்பிடியாக உள்ளனர். தனியார் படகு இடையில் பழுதடைந்தால் உதவிக்கு உடன் படகுகள் எதுவும் வருவதில்லை எனவும் அரச படகு எனின் அந்தப்பகுதியில் ரோந்தில் இருக்கும் கடற்படையினரின் உதவி கிடைக்கும் எனவும் மக்கள் நம்புகிறார்கள். அண்மையில் ஒருபடகு பழுதடைந்து அனலைதீவுடன் தொடர்பு கொண்ட போது விரைந்து உதவிக்குவர எவருமே முன்வரவில்லை. கடற்படைப் படகுகளை உதவிக்கு அழைக்க படகோட்டிகள் முன்வரவில்லை. இதனால் பழுதடைந்த படகு நீண்டநேரம் கடலில் அந்தரித்துக் கொண்டிருந்ததாகவும் அதன் பின்னர் வந்த ஒரு படகு பழுதடைந்த படகை மீண்டும் அனலைதீவுக்கரை சேர்த்தது அரச படகு எனின் கடற்படையினரின் உதவியை நாடியிருப் பார்கள் எனவும் பொதுவான கருத்தும் நிலவியது.

படகுகள் பழுதடையும் பட்சத்தில் அனலைதீவு கடற்படையுடன் தொடர்புகொண்டால் அவர்கள் உரிய நடவடிக்கையைத் தாமதமின்றி எடுப்பார்கள் எனக் கூறும் பொதுமக்கள் நெடுந்தீவுக் கடலில் இது போன்ற சம்பவங்கள் நிகழும் போதெல்லாம் அங்குள்ள கடற்படையினர் விரைந்து மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்றி உதவுவதை நினைவு கூருகிறார்கள். இங்குள்ள படகு உரிமையாளர்கள் ஊழியர்கள் இது விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டும் என்பதும் மக்களின் கருத்தாகும்.



(தொடரும்...)

# ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி




(சென்றவாரத் தொடர்ச்சி.....)

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையைப் பின்னோக்கிப் பார்க்கின்றபோது பல சாதனைகளை அது பதிவு செய்துள்ளது. வேதனையான நிகழ்வுகளுக்கும் முகம் கொடுத்துள்ளதை அறிய முடிகின்றது.

1990 இல் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரியின் கட்டடங்கள் முழுமையாகச் சேதமடைந்தன. இதனால் ஊர்காவற்றுறைக் கொத்தணிப் பாடசாலைகள் இணைந்து சுருவில் பகுதியிலுள்ள தனியார் வீடொன்றில் தற்காலிகமாக இயங்கத் தொடங்கியன. 1991இல் ஊர்காவற்றுறையில் நிலை கொண்டிருந்த இராணுவம் மண்டைதீவை நோக்கி நகர்ந்தபோது பொதுமக்கள் அனைவரும் யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்தனர். இதனால் கல்லூரியும் இடம்பெயர்ந்தது. யாழ். மத்திய கல்லூரியில் மாலை நேரங்களில் தற்காலிகமாக இயங்கத் தொடங்கி 1992இல் யாழ். பரியோவான் கல்லூரி முகாமையாளர்களின் நல்லெண்ணத்துடன் ஊர்காவற்றுறைக் கொத்தணி, யாழ். பரியோவான் அக்கடமியில் இயங்கத் தொடங்கியது. கல்லூரி பல்வேறு இடப்பெயர்வுகளுக்கு எல்லாம் முகம் கொடுத்த போதெல்லாம் பல இன்னல்களுக்கு மத்தியிலும் அயராது அரும்பணியாற்றிய அதிபர் S.A.E. இரட்ணராஜா பதவியில் இருந்து இளைப்பாறியதும் க.இரட்ணசிங்கம் அதிபரானார். 1995இல் யாழ்.நகரை இராணுவம் கைப்பற்றியதைத் தொடர்ந்து பாடசாலை இடம்பெயர்ந்து உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கத் தொடங்கியது.

1996 இல் இடம்பெயர்ந்த மக்கள் தங்களுடைய சொந்த இடங்களுக்குத் திரும்பக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அச்சமயம் கல்லூரி சேதமடைந்திருந்த காரணத்தால் கரம்பன் கிழக்கு சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கத் தொடங்கியது. 1997 இல் சிறிய திருந்தங்களுடன் கல்லூரி மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியதுடன் G.T.Z நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டினால் இந்தக் கல்லூரியின் சேதமடைந்த பகுதிகள் மீளவும் அழகுறப் புனரமைக்கப்பட்டது. கல்லூரியின் அதிபராக இருந்த க.இரட் ணசிங்கம் ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்ல கல்லூரியின் அதிபராக அருட் திரு ஜே.எ.ஜேசுதாஸ் அடிகளார் பொறுப்பேற்றார். இவரது முயற்சியினால் விஞ்ஞான ஆய்வுகூடம், நூல் நிலையம், கணினிப் பயிற்சி நிலையம் என்பவற்றுக்குத் தனித்தனிக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அத்துடன் பாடசாலைக்கு அருகில் கிறிஸ்து இல்லம் என்ற பெயரில் 150 மாணவர்கள் தங்கி இருந்து கல்வி பயிலக் கூடியதாக விடுதி ஒன்றையும் நிர்மாணித்துள்ளார். இதனால் பல ஏழை மாணவர்கள் இவரது அரவணைப்பில் கல்வி பயின்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமன்றி 2005இல் இடம்பெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் இந்தக் கல்லூரி தேசியமட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றதுடன் 2007ல் முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. தொடர்ந்து 5 தடவைகள் மாகாணமட்ட சம்பியனாக விளங்கியது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவரது காலத்தில் கல்லூரி, கல்வியிலும், விளையாட்டுதுறையிலும் உன்னத நிலையினை அடைந்தமை குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து 2009 இல் அருட்திரு ஜேம்ஸ் சிங்கராயர் அதிபரானார். தற்போது கல்லூரியில் மாணவர் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளதனால் போதிய வகுப்பறைக் கட்டடங்கள் இல்லாததனால் பாடசாலை பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகிறது. பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை மேலும் விஸ்தரிக்கும் முகமாக அருகில் இருந்த அரசகாணி பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இருந்தும் இதனூடாக ஒழுவில் வீதி செல்வதால் இவ்வீதியை மைதானத்தை சுற்றி செல்லக் கூடியதாக அமைக்கப்பட்டது. அது உரிய முறையில் செப்பனிடப்படாததனால் மைதானத்தை முழுமையாக பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

க.ஸ்ரீ

எனவே தற்போதைய அதிபரின் முன்னே பல சவால்கள் உள்ள போதும் கல்லூரி கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத் துறைகளில் பல சாதனைகளை தடம்பதித்து வருகிறது. கல்லூரித் தினம் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 13 ஆம் திகதி கொண்டாடப்படுவதால் நாடு பூராகவும் இருந்து கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்று கூடுவதும் தத்தமது பழைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும் மறக்க முடியாத ஒரு நிகழ்வாக உள்ளது. ஊர்காவற்றுறை,கத்தோலிக்க மக்கள் பரந்துள்ள ஒரு பகுதி. இந்தக் கல்லூரியில் கற்றவர்களில் ஐந்துபேர்கள் ஆயர்களானதில் ஊர்காவற்றுறை மக்கள் பெரிதும் மகிழ்ச்சி கொண்டுள்ளனர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 600 ஹெரோயின் பக்கற்றுகளுடன் மூவர் கைது

கொழும்பு, ஜன.5

சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 600 ஹெரோயின் பக்கற்றுகள் பொரளையில் இருந்து வெல்லம்பிட்டிக்கு கொண்டு சென்ற இரண்டு ஓட்டோக்கள் நுகே கொட பொலிஸாரால் சோதனையிடப்பட்டபோது கைப்பற்றப்பட்டன.

அதில் பயணித்த பெண்ணொருவரும் இரண்டு ஆண்களும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் நீண்ட காலமாகவே ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட தினம் இவர்கள் பொரளைப் பிரதேசத்தில் பெற்ற ஹெரோயினை வெல்லம்பிட்டிக்கு கொண்டு சென்றபோதே கைதாகினர்.

சந்தேக நபர்கள் மூவரும் நுகேகொட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபின் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நுகேகொடப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சுராற் அபேவர்த்தனவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றைப் பின்பற்றியே இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.(ம-5)

## ஐந்தாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 02 . 05 . 1943



மறைவு 01 . 01 . 2006

### அமரர் சிவப்பிரகாசம் இராசகுலசிங்கம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - வருமானவரித் திணைக்களம்)

திதி: பூர்வபக்க பிரதமை (05.01.2011)

ஆண்டுகள் ஐந்து கடந்தாலும் ஆறிடுமோ எம் இதயம்
உங்கள் உணர்வலைகள் எம் விழிகளில்
இருந்து கண்ணீராய் வடிகின்றதே!
என்றும் உங்கள் நினைவாக
எங்கள் குலவிளக்காய்த் திகழ்ந்த எம்
குடும்பத் தலைவனின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்!

தம்பலத்தவை, துன்னாலை வடக்கு.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்: மனைவி- இ.திலகேஸ்வரி (குடும்பத்தினர்).

(சி/574317)

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 25 . 02 . 1941



உதிர்வு 16 . 12 . 2010

### திருமதி இராமசாமி பொன்னம்மா (சின்னக்கிளி)

அன்புக்குள் எம்மை அடைகாத்து
அரவணைத்த தெய்வமே!
கண்ணுக்குள் நீ நிறைந்து
நெஞ்சுக்குள் சுமை தந்து
விண்ணுக்குள் சென்றதேனோ?

இன்று (05.01.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

80/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8835. (108452)

குடும்பத்தினர்.

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, ஜன.5

மின்சாரம் இயங்கிக் கொண்டிருந்த வேளையில் மின்குமிழ் மாற்றிய குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரத்தால் தாக்கப்பட்டுக் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மீசாலையில் இடம்பெற்றது.

இதேஇடத்தைச் சேர்ந்த மா.சுகுமா ரன் (வயது 52) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். (ம-207)

## மாணவனைப் பாம்பு தீண்டியது

பாடசாலை மாணவன் பாம்பினால் கடியுண்டார் .

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பளை முல்லையடியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். நிசாந்தன் (வயது 16) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். இந்த மாணவன் பளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.(ம-207)

## முதியவர்களுக்கு கொடுப்பனவு

கனடாவில் உள்ள நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம் நெடுந்தீவில் உள்ள முதியவர்களுக்கு வாழ்வாதார உதவியை வழங்குகின்றது.

இந்தத் திட்டத்தில் முப்பது முதியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா300 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. (204-7)

36ஆவது வருடக் கல்விச் சேவையில்

2013 விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L கலை, வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம்- ஜனவரி- 8 (8மணி) கலைப் பிரிவு


| கலைப் பிரிவு | |
|---|---|
| Tam N.குழந்தை | Geo P.S.V.தினேஸ் |
| ECo N.B.கஜீதரன் | Chi S.K.றூட் |
| Hin N.T.தரன் | P.sciMr.ஸ்ரீரங்கநாத் |
| His Mr.தாஸ் | Log Mr.வாகீசன் |
| H.CMr.பத்மராஜா | Rama & Th.கஜகரன் |

2013

| வர்த்தகப் பிரிவு |
|---|
| Acc A.P.பகீரதன் |
| Eco N.B.கஜீதரன் |
| B.st N.யசோ |

★ அனுமதிகள் இன்று முதல்
★ கலை, வர்த்தக Day Class
Mon- To Fri 8.00 - 1.00
★ விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

## ஓய்வுநிலை அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களின் பவளவிழா



காலம்: 08.01.2011
சனிக்கிழமை
பிற்பகல் 3மணி
இடம்: கொக்குவில்
இந்துக் கல்லூரி

உள்ளத்தால் உயர்ந்த
அறிவால் மேம்பட்ட
மனிதநேயம்
கொண்ட
உத்தமரின்
பவளவிழா
சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

நிரூ நியூசன் சென்ரர், கோண்டாவில்.

(இ/ 574133)

VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND,SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY,DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road,Jaffna.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 12.02.1969



மறைவு 17.12.2009

### அமரர் பொன்னுத்துரை மகேஸ்வரன் (ராசன்)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எம்துயரம்-அப்பா!
உங்கள் மெய்யை விட்டு உயிர் பிரிந்து
இன்று ஓராண்டு ஆனதப்பா-நாங்கள்
கைகூப்பி நின்றவனும் எம்மை
கைவிட்டு விட்டானப்பா-நாங்கள்
கண்கலங்கி வாடுகின்றோம்-எங்கள்
கண் துடைக்க வாருமப்பா- எம்
கவலையது தீருமப்பா -அப்பா
உங்கள் பொன்மொழியும்
புன் சிரிப்பும் குறுங்கதையும்
குட்டி நடையும்
கண்முன் நிழலாடுதப்பா!
நாங்கள் கதிகலங்கித் தேடுகின்றோம்-அப்பா
காணுகின்றோம் கண்ணாடிக்குள் நிழற்படமாய்
அப்பா உங்கள் ஆசியுடன் உமைநினைத்து
நித்தம் எம் பணியைத் தொடருகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கச்சாய் தெற்கு,
பாதாள வைரவர் கோயிலடி, கொடிகாமம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நாவின் தொழிலாளருக்கான பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த முன்வரவில்லை

## பெருந்தோட்ட சமூக மாமன்றம் தெரிவிப்பு

நுவரெலியா,ஜன.05

இலங்கையில் பெருந்தோட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசுக்கு ஐ.நா குழு அளித்திருந்த பரிந்துரைகள் குறித்து அரசு இதுவரை உரிய நடவடிக்கை எதுவும் எடுக்க முன்வரவில்லை எனப் பெருந்தோட்ட சமூக மாமன்றம் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் கடந்த நவம்பரில் நடைபெற்ற ஐ.நாவின் பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான குழுவின் கூட்டத்தின் போது,

இலங்கையில் மலையகப் பெருந்தோட்ட சமூகத்தினர் நீண்டகாலமாக எதிர்நோக்கி வருகின்ற பிரஜாவுரிமை, வீட்டுரிமை, வாழ்வாதாரம் மற்றும் சுகாதார உரிமைகளை அரசு உரிய முறையில் உறுதிசெய்ய வேண்டும் - எனப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

பெருந்தோட்ட சமூக மாமன்றத்தின் சார்பில் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள், இலங்கை அரசின் சார்பில் இந்தக் குழுவுக்கு ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டிருந்த அறிக்கையில்,

மலையகப் பெருந்தோட்ட சமூகத்தினர் ஏனைய சமூகங்களுக்கு இணையான வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுள்ளனர் எனக் கூறப்பட்டிருந்தது.

இந்தநிலையில் பெருந்தோட்ட சமூக மாமன்றம் உண்மை நிலையை முன்வைத்ததையடுத்து ஐ.நா குழு இந்தப் பரிந்துரைகளை முன்வைத்துள்ளது என மன்றத்தின் உறுப்பினரும் தொழிற்சங்கத் தலைவருமான எஸ்.முருகையா பி.பி.சி.யிடம் கூறியுள்ளார்.

மலையக மக்களின் அடிப்படையான உரிமைகள் பற்றி ஐ.நா குழு பரிந்துரைகளை முன்வைத்துள்ள முதல் சந்தர்ப்பம் இதுவெனச் சுட்டிக்காட்டிய எஸ்.முருகையா, அரசு இவற்றை நடைமுறையில் கொண்டுவர உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்எனத் தெரிவித்துள்ளார்.

மக்களைத் தெளிவுபடுத்தி அரசியல், தொழிற்சங்க மட்டங்களில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் இந்தப்பணியை முன்னெடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ளி)

## பிரதேச சபை உபதலைவரின் விளக்கமறியல் நீடிப்பு

கொரியாவில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி ஏமாற்றி ஏராளமான இளைஞர், யுவதிகளிடமிருந்து சுமார் 25 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஹரிஸ்பத்துவ பிரதேச சபையின் உபதலைவரை இன்று புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபருக்கு எதிராக மேலும் முறைப்பாடுகள் வந்த வண்ணம் இருப்பதால் அவருக்குப் பிணை வழங்கக் கூடாதென கண்டிப் பொலிஸார் நீதிமன்றத்துக்குத் தெரிவித்ததையடுத்தே விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

(ளி)

## 1,30,000 சட்டவிரோத சிகரெட்டுகளுடன் குருநாகல் பிரதேசத்தில் வியாபாரி கைது

குருநாகல், ஜன.5

மத்திய கிழக்கிலிருந்து சட்டவிரோதமாகக் கடத்திவரப்பட்ட சுமார் 26 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த 1,30,000 வெளிநாட்டு சிகரெட்டுகளை வைத்திருந்த வியா பாரியொருவர் குருநாகல் பிதுறுவெல்ல பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ஜகத் அபேசிரி குணவர்தனவுக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போதே சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டன.

''கோல்ட் சீல்'' எனும் ரகத்தைச் சேர்ந்த இந்த சிகரெட்டுகள் ஹிந்தகலவில் உள்ள சுங்கப் பொருள்கள் தனியார் நிறுவனத்தில் இருந்து மாவெல்ல பிரதேசத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோதே கைப் பற்றப்பட்டன. அவற்றைக் கொண்டு சென்ற வானும் கைப் பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

(ளி)




## பத்தனை ஸ்ரீபாத கல்லூரியில் மாணவர் அனுமதி 17 ஆம் திகதி

கண்டி, ஜன.5

பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் இவ் வருடத்திற்கான புதிய மாணவர் அனுமதி எதிர்வரும் 17 ஆம்திகதி இடம்பெறவுள்ளது எனக் கல்லூரியின் பீடாதிபதி ஏ.சுந்தர லிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்திற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் 90 பேருக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இந்த மாணவர்களுக்காக ஏற்கனவே அனுப்பிவைக்கப் பட்டுள்ள பிணைப்பத்திரம் செல்லுபடியற்றதாகிவிட்டது. இதனால் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்குப் புதியதொரு பிணைப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும்.

இந்தப் புதிய பிணைப்பத்திரத்தையே மாணவர்கள் பயன்படுத்த வேண்டும் - என்று பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

(ளி)

## 6 கர்ப்பிணித் தாய்மாருக்கு எச்1 என்1 காய்ச்சல்

காய்ச்சல் காரணமாக தம்புள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஆறு கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் பன்றிக்காய்ச்சல் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கர்ப்பிணிகளுக்குகாலாவதியான பன்றிக்காய்ச்சல் தொற்றுத் தடுப்பூசி வழங்கப் பட்டுள்ளது 'என அவர்களது உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இவர்களுக்குக் காலாவதியான தடுப்பூசிகள் எதுவும் வழங்கப்படவில்லை என்று வைத்தியசாலை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ளி)

# அம்பாறையை கரையோர மாவட்டமாக்க பூர்வாங்க நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

அம்பாறை, ஜன.5

அம்பாறையை கரையோர மாவட்டமாக உருவாக்கு வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜனாதிபதியைக் கோரும் தீர்மானமொன்றை தேசிய முஸ்லிம் கவுன்சில் நிறைவேற்றியுள்ளது.

தேசிய முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் எம்.ஐ.எம். வலீத் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டு அவை தொடர்பில் தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டபோதே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

* கல்முனையில் இயங்கிவந்த அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் காரியாலயத்தை மீண்டும் திறந்து அதனைச் சகல வசதிகளும் கொண்ட அதிகாரம் நிறைந்த அலுவலகமாக இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* கல்வி அமைச்சின் தேசிய இடமாற்றக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகாணத்திற்கென ஆசிரியர் இடமாற்றக் கொள்கையொன்று வகுக்கப்பட்டு அதன்பிரகாரம் ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அது அறிமுகப் படுத்தும்வரை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஆசிரியர் இடமாற்றங்கள் யாவும் இடைநிறுத்தப்பட வேண்டும்.
* அம்பாறை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த மக்களுக்கு மாற்று வீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.
* அக்கரைப்பற்று நுரைச்சோலைப் பகுதியில் சவூதி அரேபிய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஐநூறு வீடுகளும் சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் குடும்பங்களுக்கே வழங்கப்பட வேண்டும்.
* சகல அதிகாரங்களையும் கொண்ட மாவட்டக் கல்வி அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
* கைவிடப்பட்டிருக்கும் கல்முனை நகர அபிவிருத்தித் திட்டத்திற்கான நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டு அத்திட்டம் துரித கதியில் நிறைவேற்றப்பட வேண்டும்.
* கல்முனை மாநகரசபைக்குச் சகல வசதிகளும் கொண்ட நவீன கட்டடத்தொகுதி அமைக்கப்பட வேண்டும்.
* மட்டக்களப்பு தொடக்கம் பொத்துவில் வரையான பகுதிக்கு ரயில்ப் பாதை அமைக்கும் பழைய திட்டத்திற்கு புத்துயிர் அளித்து இப்பிராந்தியத்திற்கான ரயில் சேவை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* அம்பாறை கரையோரப் பிரதேசத்திற்கென தனியான உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் மகஜர்களை அனுப்பி வைப்பதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகக் கவுன்ஸில் செயலாளர் நாயகம் செயிட் ஏயெஸ் மௌலானா தெரிவித்தார்.

(ளி)

## 15 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மூன்று பிரதேசங்களில் பாதிப்பு

கல்முனை மாநகரப் பிரதேசத்திற்குட்பட்ட மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் 15 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பிரதேச செயலாளர் தெரிவிக்கின்றார்.

கல்முனைப் பிரதேசசெயலக முஸ்லிம் பிரிவில் 5 ஆயிரம் குடும்பங்களும், தமிழ்ப் பிரிவில் 5,300 குடும்பங்களும், சாய்ந்தமருது செயலகப்பிரிவில் 4,800 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன எனக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பிரதேச செயலாளர்களான எம்.எம்.நௌபல், கே.லவநாதன், ஏ.எல்.எம்.சலீம் ஆகியோர் இந்தத் தகவலைத் தெரிவித்தனர். (ளி)




## மட்டு மாவட்டத்தில் நுளம்புப் பெருக்கம்; மீண்டும் டெங்கு பரவும் அபாயம்

மட்டகளப்பு,ஜன5

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாரிய வெள்ளத்தையடுத்து மாவட்டமெங்கும் நீர் தேங்கியுள்ளதால் நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது.இதனால் இந்த மாவட்டத்தில் மீண்டும் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் டெங்கு பரவும் நான்காவது மாவட்டமான மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமான இடங்களில் நீர் தேங்கியுள்ளது.

நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த மாவட்டத்தில் கடந்த வருடம் டெங்குநோயினால் 15க்கும் மேற்பட்டோர் பலியாகி பலநூறு பேர் பாதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. நுளம்புகளின் பெருக்கத்தினால் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றனர். (204-21)

## தமிழ் பாடசாலைகளின் கீதங்கள் நூலுருவில் ஆவணப்படுத்தத் திட்டம்

அம்பாறை, ஜன.5

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பாடசாலைகளின் பாடசாலைக் கீதங்களை ஒன்று திரட்டி நூலுருவில் ஆவணப் படுத்தும் வேலைத்திட்டமொன்றை இலங்கைத் தென்கிழக்கு ஆய்வு மையம் மேற்கொண்டு வருகின்றது.

[illegible] மட்டுமே பிரயோசனமாகியிருக்கும் இப்பாடசாலைக் கீதங்களை ஒன்று திரட்டி நூலுருவில் ஆவணப் படுத்தும் வேலைத்திட்டத்தின் பயனாக அவற்றைப் பாடசாலைச் சூழலுக்கு அப்பால் சமூக மட்டத்தில் ஓர் அழியாத வரலாற்றுத் தடயமாக ஜனரஞ்சகப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும். இப்பெரும் பணியினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு வலயக்கல்விப் பணிப்பாளர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது என இலங்கைத் தென்கிழக்கு ஆய்வுமையத்தின் பொதுச் செயலாளர் அ.அஸ்ஹர் தெரிவித்தார்.

இது தொடர்பான கடிதங்கள் விரைவில் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைக் கீதங்கள் தொடர்பான விவரங்களை செயலாளர், இலங்கைத் தென்கிழக்கு ஆய்வு மையம், இல. 377, மாளிகா வீதி, மாளிகைக்காடு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளனர்.

(ளி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பரமார்த்தரின் பக்தி




பரமார்த்தரின் வேண்டுகோளின் படி மதுரை மன்னன்அவருக்கும் சீடர்களுக்கும் அரண்மனையில் விருந்து அளித்து ஒருநாள் தங்க வைத்தான். பட்டு மெத்தையில் படுத்துக் கொண்டிருந்த பரமார்த்தர் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தார். சீடர்களில் மண்டுவுக்கும் மூடனுக்கும் மட்டும் தூக்கம் வரவில்லை.
''குருவே! சற்று நேரம் உலாவினால் தூக்கம் வரும் என்று வைத்தியர் காலையில் யாரிடமோ சொன்னாரே... அதேபோல் நாமும் எங்காவது சென்று உலாவிவிட்டு வரலாமே'' என்றான் மண்டு.
''நல்லது! அப்படியே செய்வோம்'' என்று அவனைத் தட்டிக் கொடுத்தார் பரமார்த்தர்.
தெருவில் நடந்தால் நம்மைத் திருடர்கள் என்று காவலர்கள் பிடித்துக் கொண்டால் என்ன செய்வது? அதனால் உப்பிரிகைக்குச் சென்று உலாவலாம்!'' என்றான், மூடன்.
அதன்படியே மற்ற சீடர்களையும் எழுப்பிக் கொண்டு எல்லோரும் மெதுவாக நடந்து சென்றனர்.
உப்பிரிகையின் படிகள் இருக்குமிடம் வந்ததும் மட்டி மட்டும் குருவை மிஞ்சிய சீடனைப் போல கட கட என்று அவரைத் தள்ளிக் கொண்டு வேகமாக மேலே ஏறினான்.
நான்கு படிகள் ஏறுவதற்குள் கால் வழுக்கித் தடதட என்று உருண்டு கீழே வந்தான்.
உருண்டு வந்த வேகத்தில் குருவின் மேல் மோதி; அவர் பின்னால் வந்த சீடர்களை மோதி எல்லோரும் உருண்டு கீழே வந்து சேர்ந்தனர்.
''மட்டியே! அவசரப்படுகிறாயே!'' என்று திட்டினார் பரமார்த்தர். மறுபடியும் எல்லோரும் மெதுவாக ஏறி உப்பிரிகையை அடைந்தார்கள்.
அன்று முழு நிலவு நாள். அதனால் நாடும் நகரமும் அழகாகத் தெரிந்தது. ''அற்புதம், அற்புதம்'' என்று குரு மகிழ்ந்தார்.
அப்போது மடையன் மட்டும் அலறினான்
''என்ன? என்ன?'' என்று பதறினார் குரு.
''குளிர்கிறதே'' என்றான் மடையன்.
''அப்படியானால் நீ மட்டும் கீழே போய்ப் படுத்துக்கொள். நாங்கள் பிறகு வருகிறோம்'' என்று பரமார்த்தர் சொன்னதும் அவன் கீழே இறங்கிப் போய்விட்டான்.
குருவும் மற்ற சீடர்களும் நகர அழகைக் கண்டு இரசித்துக்கொண்டு இருந்தனர்.
அரச வீதிகளில் நிறையக் காவல் இருந்தன. குதிரையில் வீரர்கள் அப்படியும் இப்படியும் வந்து கொண்டு இருந்தனர்.
அந்த வீரர்களைப் பார்த்துக் குருவுக்கும், குதிரைகளைப் பாத்துச் சீடர்களுக்கும் நடுக்கம் ஏற்பட்டது.
அதற்குள் கீழே இறங்கிப் போன மடையன் மறுபடியும் மேலே ஏறி வந்து, ''குருவே.. நான் கீழே இறங்கிப் போனேன். அங்கே இரண்டு பேர்; ஒருவன் குண்டாக இருந்தான்;

(தொடரும்)

## ஆனந்தக் கொண்டாட்டம்....



திறமை:கொக்குவில் மத்திய சனசமூக நிலைய இந்து முன்பள்ளியின் ஆண்டிறுதிக் கலைவிழா அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் முன்பள்ளி மாணவிகளின் நடன நிகழ்ச்சியினைக் காணலாம். (100)

## அறிவுக்குச் சில....

★பின்னால் வருபவர் மேலும் சிறப்பாகப் பணிபுரிந்தால் அதனால் பாராட்டப்பட வேண்டியவர் முன்னால் பதவி வகித்தவர்.

★தூரத்தில் இருப்பதை விரும்புவதன் மூலம் அருகில் இருப்பதைக் கோட்டை விட்டு விடாதீர்கள்.

★ஒரு மனிதனின் உள்ளம் எப்படியோ அப்படியே அவனது தீர்ப்பும் இருக்கும்.

★கண்டிப்பினால் சாதிக்க முடியாததை அன்பு சாதித்துவிடும்.

[illegible]

## பாப்பாப் பாட்டு

முறுக்கு மீசைக் கூர்மை!
முண்டாசு நேர்மை!
உருக்கி வார்த்த கவிதை!
உரைத்தது அவன் பெருமை!

பாப்பாவுக்குப் பாட்டு
பண்பை நிலை நாட்டும்!
நாட்டுக்கான பாட்டு!
வெள்ளையர்க்கே வேட்டு!

தேசபக்தி மூச்சு
செந்தமிழில்ப் பேச்சு
பாசம் மிக்க கவிஞன்
பாரதத்தாய்ப் புதல்வன்!

[illegible], கொழும்புத்துறை.

## பொது அறிவு

✱மணமாகாதவர்களைச் சபையில் பேச அனுமதிக்காத நாடு?
ஆபிரிக்கா.

✱நாயைச் செல்லப் பிராணியாக முதன் முதலில் வளர்த்தவர்கள்?
ரோமானியர்கள்.


✱அரிமா சங்கத்தை தோற்றுவித்தவர்?
மெல்வின் ஜோன்ஸ்.

✱இந்தியாவின் தேசிய கீதம் பாடி முடிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் நேரம்?
52 விநாடிகள்.

✱கைகளைக் கட்டிக்கொண்டு நடக்கும் குரங்கு வகை?
உகாரி

## உலகத் தந்தையர்கள்

இவர்களின் கண்டுபிடிப்புக்கள் முதல் முதலில் அறியப்பட்டதன் காரணமாக இவர்கள் அத்துறையின் தந்தையர்கள் எனப் போற்றப்பட்டனர்.



நவீன விஞ்ஞானத்தின் தந்தை - சேர் ஐசாக்நியூட்டன்.
சாரணியர் இயக்கத்தின் தந்தை - பேடன் பவல்.
நவீன சுற்றுலாவின் தந்தை - தோமஸ் குக்.
நவீன வானவியலின் தந்தை - நிக்கலஸ் கொப்பனிக்கஸ்.
வானொலியின் தந்தை - மார்க்கோனி.
எண்களின் தந்தை - பைதகரஸ்.
மருத்துவத் துறையின் தந்தை - ஹிப்போகிரட்டீஸ்.
ஆவர்த்தன அட்டவணையின் தந்தை - திமீத்ரி இவனோவிச் மெண்டெலீவ்.
ஐதரசன் குண்டின் தந்தை - எட்வேட் டெல்லர்.
ஐக்கிய நாடுகளின் தந்தை - கோர்டல் ஹல்.

ச.பானுமதி, யா/கண்டுக்குழிபெண்கள் பாடசாலை

## உடற்பயிற்சி

தலையைப் பின்புறம் 10 முறையும் முன்புறம் 10 முறையும் சாய்க்கவும்.
தலையை நன்றாகப் பின்நோக்கி வைத்துக் கொண்டு வாயை நன்றாகத் திறந்து அசைத்து மூடவும்.
தலையை ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்குத் திருப்பவும்.
பிறகு தலையை வலது தோள்பட்டை வரை கொண்டு சென்று மறுபடி இடது தோள் பட்டைக்கு கொண்டு செல்லவும்.
இது போல் 10 முதல் 20 தடவை செய்யவும்.
வாய்க்குள் காற்றை நிரப்பி மூடவும்.
பின்னர் காற்றை வெளியேற்றவும். இதுபோல் 10 முறை செய்யவும்.
கண்களை வட்டமாகச் சுற்றிப் பார்க்கவும். இதுபோல் ஒரு 2 நிமிடம் செய்யவும்.
கழுத்தை நேராக இருக்குமாறு வைத்து தரையில் உட்கார்ந்து கழுத்தை கொஞ்சம் கொஞ்சமாக சாய்க்கவும்.
அதேபோல் மெதுவாக மூச்சை இழுத்து விட்டுக் கொண்டு கழுத்தை மேலே உயர்த்தவும்.
இரு புருவங்களுக்கும் மேலே ஒற்றை விரல்களால் சில நிமிடங்கள் வரை அழுத்திக் கொண்டே இருந்து விடவும்.
(கண்களைச் சுற்றி சுருக்கங்கள் விழுவதால் வெகு சீக்கிரம் வயதாகி விட்டது போன்ற தோற்றம் ஏற்படும். கீழ்க்கண்ட பயிற்சியின் மூலம் கறுப்பு வளையங்கள் நீங்க வாய்ப்புள்ளது).
முதலில் நேராகப் பார்த்து பிறகு கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வையைத் தூக்கி மேலே பார்த்து பிறகு கீழே பார்க்கவும்.
இதே போன்று வலப்பக்கமும் இடப்பக்கமும் பார்க்கவும்.
விரல்களின் அடிப்பக்கத்தால் முகம் முழுக்க [illegible]
முகத்தில் உள்ள தளர்ச்சி நீங்கும்

[illegible],
யா/இருக்குடும்பக் கன்னியர்மடம்.

## சிந்தனைத் துளிகள்....

''உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்திற்கு முற்றிலும் முரண்பட்டது''
''நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகின்றாய். உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்''
''பலவீனத்திற்கான பரிகாரம், பலவீனத்தைக் குறித்து ஓயாது சிந்திப்பதல்ல. மாறாக வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான்''
''நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால், பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகி விடும்''
''மனிதனே மேலானவன்; எல்லா மிருகங்களை விடவும் எல்லாத் தேவர்களை விடவும் உயர்ந்தவன்; மனிதனை விட உயர்ந்தவர் யாருமே இல்லை''
''தனி மனிதனின் நிலை உயர்த்தப்பட்டால் தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்''
''உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன''
''உயர்ந்த இலட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறு செய்தால் இலட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதாயிரம் தவறுகளைச் செய்வான்''
''தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். இவை அனைத்திற்கும் மேலாக அன்பு வேண்டும்''
''எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள், இனியும் தூங்க வேண்டாம் எல்லாத் தேவைகளையும் எல்லாத் துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிறது''
''முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக் கொள். கட்டளையிடும் பதவி உனக்குத் தானாக வந்து சேரும்''
''பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம்''

றொகான்,
யா/பத்திரிசியார் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள நிவாரண நிதியை மிக விரைவில் வழங்குக!

## பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கருணாநிதி நேரில் வலியுறுத்து

சென்னை,ஜன.5

வெள்ள நிவாரண நிதியை விரைந்து வழங்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் முதல்வர் கருணாநிதி நேரில் வலியுறுத்தினார்.

தமிழகத்துக்கு இரண்டு நாள்கள் பயணமாகச் சென்னை வந்த பிரதமர் மன்மோகன் சிங்கை ஆளுநர் மாளிகையில் நேற்று முன்தினம் முதல்வர் கருணாநிதி சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் அளித்த பதில் வருமாறு -

கேள்வி - பிரதமரைச் சந்தித்தபோது என்னென்ன விடயங்கள் குறித்துப் பேசினீர்கள்?

பதில் - தமிழகத்தில் ஏற்பட்ட பெரு மழை, வெள்ளம் பற்றிப் பேசினோம். மீண்டும் மழை வரக் கூடும் என்று சொல்



லப்படுகிறது. தமிழகத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு நிவாரண நிதியை தமிழக அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. மத்திய அரசு இதற்கு விரைவில் நிதியுதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

கே - ஞாயிறன்று பிரதமரைப் பார்க்க நீங்கள் செல்லாத காரணத்தால் நகரில் பெரிய பரபரப்பு ஏற்பட்டதே?

ப- ஞாயிற்றுக்கிழமை நான் ஏற்கனவே ஒப்புக்கொண்ட ஒரு நிகழ்ச்சி இருந்தது. அது கவிஞர் வைரமுத்துவின் நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி. அதிலே பலர் பேச வேண்டியிருந்தது. அதனால் தாமதமாகி விட்டது. சந்திக்க முடியவில்லை. இன்று (நேற்றுமுன்தினம்) சந்தித்தேன்.

கே - பிரதமர் அடையார் பூங்காவைத் திறந்து வைக்காதது தமிழக அரசுக்கு வருத்தமாக இருக்கிறதா?

ப - வருத்தம் ஒன்றும் கிடையாது. பொருத்தமான காரணங்களைத்தானே சொல்லி இருக்கிறார்கள்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளை உள்துறை இணைச் செயலாளர் எல்.விஸ்வநாதன் தலைமையிலான குழு நேரில் ஆய்வு செய்தது. அவர்கள் டில்லி சென்று தமிழக அரசிடம் சில விளக்கங்களைக் கோரியுள்ளனர். அவை அனைத்தும் அளிக்கப்பட்டு விட்டன எனத் தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், ஓரிரு நாள்களில் தங்களது அறிக்கையை மத்திய குழுவினர் மத்திய அரசிடம் அளிக்கவுள்ளனர். இதன் அடிப்படையில் தமிழகத்துக்கான வெள்ள நிவாரண நிதி ஒதுக்கப்படும் எனத் தெரிகிறது.

தமிழக அரசின் சார்பில் ரூபா 1,800 கோடி அளவுக்கு நிவாரண நிதி கோரப்பட்டுள்ளது. ஆனால் தாற்காலிக நிவாரணமாக குறைந்த அளவுக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்படக்கூடும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே பிரதமரைச் சந்தித்து வெள்ள நிவாரண நிதியை விரைந்து வழங்கவேண்டும் என முதல்வர் கருணா நிதி கோரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# வறுமையை ஒழிக்கக் கருணாநிதியிடம் எந்தத் திட்டமும் இல்லை; ஜெ.தாக்கு

ஏழைகள் இருக்கும்வரை இலவசங்கள் தொடரும் என முதல்வர் கருணாநிதி அறிவித்திருப்பதன்மூலம் வறுமையை ஒழிக்க அவரிடம் எந்தத் திட்டமும் இல்லை என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார் - என்று அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதா குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்தமை வருமாறு - தமிழகத்தில் உள்ள ஏழை மக்கள் ஏழைகளாகவே இருக்க வேண்டும் என்றுதான் கருணாநிதி விரும்புகிறார். அப்பொழுதுதான் இலவசங்களை லஞ்சமாகக் கொடுத்து, ஏழை, எளிய மக்களின் வாக்குகளைப் பெறமுடியும் என்று அவர் நினைக்கிறார்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் சீனாவை அடிபணிய வைப்பதற்காகவும், சீனர்களுக்குப் போதை மருந்தை பிரிட்டிஷார் ஊட்டினர். இதன்விளைவாகப் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து சீனர்கள் விடுதலை பெற நூறாண்டுகளாகின. இதுபோன்ற மேலாதிக்கம் இம்மாநிலத்தில் உள்ள ஏழை மக்கள் மீது நிரந்தரமாக நிலை நிறுத்தப்பட வேண்டும் என்று கருணாநிதி விரும்புகிறார். - என்றார்

# பாபர் மசூதி இடிப்பு வழக்கில் குறுக்கு விசாரணை கடந்த திங்களன்று ஐ.பி.எஸ். அதிகாரியிடம்

ரே பரேலி, ஜன.5

பாபர் மசூதி இடிப்பு வழக்கின் குறுக்கு விசாரணை கடந்த திங்களன்று நடைபெற்றது. சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி அஞ்சு குப்தாவிடம் குறுக்கு விசாரணை நடைபெற்றது.

பா.ஜ.க. மூத்த தலைவர் எல். கே.அத்வானிக்கு பாதுகாவல் அதிகாரியாக அஞ்சு குப்தா நியமிக்கப்பட்டிருந்தார். பாபர் மசூதி இடிக்கப்பட்ட 1992 ஆம் ஆண்டு டிசெம்பர் 6 ஆம் திகதி அவரும் அத்வானிக்கு அருகே இருந்தார். இதுதொடர்பாக அவரிடமும் குறுக்கு விசாரணை நடைபெற்றது.

எதிர்த்தரப்புச் சட்டத்தரணி எல்.பி.சிங் அவரிடம் கேள்விகள் கேட்டார். இதையடுத்து இந்த வழக்கு விசாரணையை ஜனவரி 25 ஆம் திகதிக்கு நீதிபதி விஷ்ணு பிரசாத் அகர்வால் ஒத்திவைத்தார்.

முன்னதாக நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்த அஞ்சு குப்தா, பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு சற்று முன்னர் சங்க பரிவார் தொண்டர்கள் மத்தியில் பேசிய அத்வானி அவர்களது உணர்ச்சியைத் தூண்டும் வகையில் உரையாற்றினார் என்று குறிப்பிட்டிருந்தார்.

நவம்பர் 19 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் 2 பத்திரிகைப் புகைப்படக்காரர்கள் தாக்கப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.


# ஆங்கில மொழி மூல ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கலைமகள் சர்வதேசக் கல்லூரியின் ஆங்கில மொழி மூல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 2009 டிசெம்பரில் இணைந்த 48 மாணவர்களுக்கு வெற்றிகரமாகத் தமது பயிற்சி நெறியை முடித்து பட்டமளிப்பு விழா நடந்தபின் எமது சர்வதேச பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். எமக்கு என்றும் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டு விடக்கூடாது எனும் நோக்கில் இவ்வருடமும் 50 விண்ணப்பதாரிகளை உள்வாங்கி ஒரு வருடப் பயிற்சிநெறி முடிந்ததும் நியமனம் வழங்க உள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

விண்ணப்பிக்க விரும்புவோருக்கு:

- க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்.
- க.பொ.த (சா/த) அல்லது க.பொ.த (உ/த) ஏதாவது ஒன்றில் ஆங்கிலத்தில் சித்தியெய்தியவராக இருக்க வேண்டும். அல்லது ஆங்கில பாடத்தில் விசேட தகைமை கொண்டிருத்தல் வேண்டும்.
- 2011 ஜனவரியில் 30 வயதைத் தாண்டாதவராக இருக்க வேண்டும்.

பயிற்சி நெறி:

- கிழமை நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெறும்.
- ஒரு வருடம் பயிற்சி நெறி காணப்படும்.
- பிரத்தியேகச் சீருடை, இறுக்கமான ஒழுக்க நடவடிக்கை காணப்படும்.

ஆற்றலும் தகுதியும் உடையவர்கள் 08.01.2011, 09.01.2011 ஆகிய நாள்களில் காலை 9 மணி முதல் பி.ப.2 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு தங்களுடைய கல்விச் சான்றிதழ்களின் அசல், நகல் பிரதிகளுடன் நேரில் சமுகம் தரவும்.

மேலதிக விவரங்களுக்கு:

KALAI MAGAL INTERNATIONAL COLLEGE

GHURCH LANE,
KOKUVIL EAST,
KOKUVIL

T.P.: 021 3215785
Mob: 077 8834592

மேலதிக விவரங்களுக்கு: 021 3215875, 077 8834592


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

## செல்லத்துரை பஞ்சாட்சரம்

(ஆசிரியர், ஸ்ரீபார்வதி வித்தியாசாலை, அரியாலை)

**தோற்றம்** 24.03.1957 **மறைவு** 16.12.2010

கடந்த 16.12.2010 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று(05.01.2011) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் சக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*05, கச்சேரி வீதி,*
*சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.* (108469) - குடும்பத்தினர்.

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.5

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும் என்று கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-72)

## மகரஜோதி உற்சவம்

தென்மராட்சி,ஜன. 5

சாவகச்சேரி கல்வயல் ஐயனார் ஆலய மரகஜோதி மண்டலாபிஷேக பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

மகரஜோதி உற்சவம் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறும்.

(207)

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து) விசேட பொதுச்சபைக் கூட்டம் ஒத்திவைப்பு

எதிர்வரும் 09.01.2011ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவிருந்த விசேட பொதுச்சபைக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர்,
சங்கானை ப.நோ.கூ.சங்கம்.

(108461)

## பெயர் மாற்றம்

56, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த திருச்செல்வம் பிறின்ஸ் ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் திருச்செல்வம் றோமனிட் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

திருச்செல்வம் றோமனிட்,
56, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.

(108461)

## அறிவித்தல்

*மானிப்பாய் கிராம உப அலுவலகம்*

ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம்-05, யாழ்.- மானிப்பாய் வீதி, ஆதன இல 55/1.

வட்டாரம் 05 யாழ்.மானிப்பாய் வீதி ஆதன இல 55/1 இல் அமைந்துள்ள ஆதனமானது வேலன் கைம்பெண் சின்னம்மா என்பவரால் அறுதியாக விற்கப்பட்டு வேலுப்பிள்ளை செல்வராசா, செல்வராசா புஸ்பராசா என்பவர்களால் 71- 2010.10.31ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமைகோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து வேலுப்பிள்ளை செல்வராசா, செல்வராசா புஸ்பராசா எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

திருமதி ஈ.சிவலிங்கம், செயலாளர்
(108464) வலி.தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்

## விற்பனையாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல புடைவை நிலையமொன்றுக்கு விற்பனையாளர்கள் (ஆண்/பெண்) உடன் தேவை.

(அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை)

தொடர்பு: 0212229286

## தொடர்பு கொள்ளவும்

அண்மைக்கால நிலைமை காரணமாகத் தனித்து உதவியற்ற நிலையில் வாழும் வயது வந்த பெண்கள் வீட்டுப் பராமரிப்பு பயிற்சி பெற்று ஒரு நல்ல குடும்பத்துடன் இணைந்து வாழ விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பணிப்பாளர்,
சென்றல் நேசிங் ஹோம்
350, பலாலி வீதி, திருநெல்வேலி.

இனிய தமிழ்ப்புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்

# தைப் பொங்கலை முன்னிட்டு

Unbelievable Sales

# JAFFNA ELECTRICAL நிறுவனத்தின்

## என்றும் எங்கும் இல்லாத அதிரடி விலைக்கழிவு

(05.01.2011 முதல் 14.01.2011 வரை)

LG No 1 Dealer in SriLanka



LG Single Door Fridge
Model- GN - V 191 SLK
Normal Show Room Price
Rs 41,990/=
Our Spcial Price 29,990/=



LG Double Door Fridge
(Door Cooling)
Model- GL- M252 VME
Normal Show Room Price
Rs 62900/=
Our Spcial Price44,900/=



LG Double Door Fridge
(Normal)
Model- GL- B252 VME
Normal Show Room Price
Rs 54600/=
Our Spcial Price39,900/=



LG Fully Automatic
Washing Machine
Model WF- 760E
Normal Show Room Price
46 990/=
Our Spcial Price 33,900/=



LG Ultra Slim T.V. + Free LG DVD Player

Rs Unbelievable Price

Unbelievable Sales



LG Semi Auto Washing Machine + Free

Rs UnbelievablePrice



LG Air Conditioner

Rs Unbelievable Price

அதிவிசேட விலைக்கழிவு
இலவச இணைப்பு
03 இலவச சேவை

Abans உத்தரவாதத்துடன்

# LG JAFFNA ELECTRICAL

141,Power House Road, Jaffna. T.P: 021 222 8378, 5766.

94 (6), Stanley Road, Jaffna. 021 222 2353

No: 04,New Market, Chavakachcheri. T.P: 021 2270 268

No.135, A-9 Road, Kilinochchi. T.P: 021 228 0008

Cool Line: 0777725258

Authorized Dealer for Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் அணுசக்தித் திட்டங்களை இராஜதந்திரிகள் பார்க்க அனுமதி

வெளிநாட்டு ராஜதந்திரிகள் ஈரானின் அணுச்க்தித் திட்டங்களைப் பார்வையிட முடியுமெனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரானும் தனது அணுசக்தித் திட்டங்களைப் பார்வையிடுவதற்கு வெளிநாட்டு இராஜ தந்திரிகளுக்குத் தான் அழைப்பு விட்டுள்ளதை உறுதி செய்துள்ளது.

உலகின் முக்கிய நாடுகள் ஈரானில் அணுசக்தித் திட்டம் தொடர்பாகப் புதிய பேச்சுவார்த்தையை நடத்தியதையடுத்தே இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

ரஷ்யா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவையே அழைக்கப்பட்டவர்களுள் அடங்கியுள்ளன. ஆனால் இது அமெரிக்காவுக்கும் விரிவாக்கப்படுமா என்பதற்குத் தெளிவான செய்திகள் எதுவுமில்லை.


அநேக மேற்கத்திய நாடுகள் ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக ஐயம் வெளியிட்டுள்ளன. ஆனால் தனது அணு தொடர்பான நடவடிக்கைகள் அமைதி நோக்கங்களுக்கானதென ஈரான் மறுத்து வருகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சார்ந்த சில நாடுகள், அணிசேரா இயக்கம் மற்றும் ஆறு உலக வல்லமை கொண்ட நாடுகள் ஆகியன எமது அணுசக்தித் திட்டங்களைப் பார்வையிடுவதற்கு அழைக்கப்பட்டுள்ளனவென ஈரானின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இந்த விஜயம் ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பாக இந்த மாத இறுதியில் துருக்கித் தலைநகர் இஸ்தான்புல்லில் ஈரானுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கம் வகிக்கும் ஐந்து நாடுகளாகிய அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளுக்குமிடையே புதிய பேச்சுவார்த்தைகளுக்கு வழி வகுக்கும்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் ஜெனிவாவில் இரு நாள்களாக நடைபெற்ற கூட்டத்தின் தொடரானதாகும். (க)

# கலிபோர்னியா மாகாணத்தின் ஆளுநர் ஆர்னல்ட் பதவியில் இருந்து விலகினார்



கலிபோர்னியா,ஜன.5

கார்ப்பிரேட், ஹொலிவூட், ரியல் எஸ்டேட், அரசியல் என்று அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்த பிரபல நடிகரும், கலிபோர்னியாமாகாணத்தின்ஆளுநருமான ஆர்னல்ட் ஆளுநர் பதவியில் இருந்து விலகினார்.

ஹொலிவூட் பிரபல நடிகர் ஆர்னல்ட். இவர் கலிபோர்னியா மாகாணத்தின் ஆளுநராகத் தொடர்ந்து 7 ஆண்டுகள் பதவி வகித்தார்.

இவர் பதவி விலகியதை அடுத்து குடியரசு கட்சியை சேர்ந்த ஜெர்ரி பிரவுன் ஆளுநராகிறார்.

இந்த நிலையில், அவருக்கு வழி விட்டு பதவியில் இருந்து ஆர்னல்ட் விலகினார். 63 வயதாகும் ஆர்னல்ட் சுயசரிதை எழுதவேண்டும் என்று பல புத்தக வெளியீட்டாளர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

4 குழந்தைகளுக்கு தந்தையான ஆர்னல்ட் நல்ல திரைக்கதை கிடைத்தால் சினிமாவில் மீண்டும் நடிக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் நடந்த பிரிவு பசார விழாவில், ''எந்த எதிர்கால திட்டமும் என்னிடம் இல்லை. சுற்றுப்புற சுகாதாரம், காற்றில் மாசு கலப்பதைத் தடுக்க தொடர்ந்து குரல் கொடுப்பேன்'' என்று ஆதரவாளர்களிடம் ஆர்னால்ட் கூறினார்.

# மெக்சிக்கோ எல்லைகளில் தொடரும் மர்மக் கொலைகள்

மெக்சிக்கோ,ஜன.5

மெக்சிக்கோ எல்லைகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மர்மக் கொலைகளால் பொதுமக்கள் மேலும் அச்சத்துக்கு ஆளாகியுள்ளனர்.

அந்த நாட்டின் காட்டுப் பகுதிகளில் சீட்டா எனப்படும் கடத்தல்காரர்கள் நீண்டகாலமாக குழுவாக இயங்கிவருகின்றனர்.

எல்லைப் பகுதிகளில் நடமாடுவோரைக் கொலை செய்வதும் கொள்ளையிடுவதுமாக இவர்களின் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாக வெளிநாட்டுச் செய்திச்சேவைகள் தெரிவிக்கின்றன.

கொலைசெய்யப்படுவோரின் முதுகில் வீ வடிவத்தில் கத்தியால் கீறிக் காயப்படுத்திச் செல்லும் முறையை இவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்களில் மேலும் பல குழுவினர் இருப்பதாக அந்த நாட்டுப் பாதுகாப்புத் தரப்பினர் கருத்து தெரிவித்துள்ளனர்.

அண்மையில் 14 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் பலர் கடத்தலில் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக ஆதாரத்துடன் செய்தி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வட இங்கிலாந்து பகுதியில் நில நடுக்கம்

லண்டன்,ஜன.5

வட இங்கிலாந்து பிரதேசத்தில் சிறியளவு நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வட யோர்ஷயர் பிரதேசத்தில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், 3.6 ரிச்டர் அளவில் இந்த நில நடுக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிங்கிலி, ஸ்கைப்டன், லீட்ஸ் போன்ற பிரதேசங்களில் இந்த நில நடுக்கம் உணரப்பட்டதாகக் குறிப்படப்படுகிறது.

இவ்வாறான நிலநடுக்கங்களை 100 கிலோ மீற்றர்வரையில் உணர முடிந்த போதிலும் பாதிப்புக்கள் ஏற்படாது என விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

இந்த நில நடுக்கம் சில நொடிகளுக்கு நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜன்னல் மற்றும் கதவுகளும் அதிர்ந்ததாக பிரதேச மக்கள் அறிவித்துள்ளனர். (ம)

# வட கொரியாவுடன் பேச்சு நடத்த தயார் தென்கொரிய அதிபர் அறிவிப்பு

வட கொரியாவுடன் பேச்சு நடத்தத் தயாராக உள்ளதாகத் தென்கொரியா அறிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் தென் கொரிய தீவு ஒன்றைக் குறிவைத்து வட கொரியா நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் ஏற்பட்டது.

அந்த போர் பதற்றம் தற்போது தணிந்துள்ள நிலையில் தென் கொரிய அதிபர் லீ மியுங் - பக், நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில், வட கொரியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

அதேசமயம், தென்கொரியா மீது மீண்டும் ஒரு தாக்குதல் தொடுக்கப்பட்டால் அதற்கு தென்கொரியா தக்க பதிலடியைக் கொடுக்கும் என்றும் அவர் எச்சரித்தார். (ம)

# சூடானைப் பிரிப்பதற்கும் கருத்துக் கணிப்பில் 40 லட்சம் சூடானியர்கள் வாக்களிப்பு

சூடான் நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்காக நடத்தப்படும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் 40 லட்சம் சூடானியர்கள் தமது வாக்குகளைச் செலுத்துவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வாக்கெடுப்புத் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களம், இதுவோர் நல்ல ஆரம்பமாகும் என்று குறிப்பிட்டுள்ளது.

சூடானின் உள்நாட்டுப் போரில் 20 லட்சம் மக்கள் கொல்லப்பட்ட தோடு இந்தப் பிரதேசத்தில் அபிவிருத்தியெதுவும் நிகழவில்லை.

சூடானின் தெற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் நாட்டின் வடக்கிலிருந்து பிரிவதற்கும் தனியானதொரு நாடு அமைவதற்கும் ஆதரவாக வாக்களிப்பரென எதிர்பார்க்கின்றது.

இந்த நாட்டின் தெற்குப் பகுதியில் 3,930,916 பேர் தம்மை வாக்காளராகப் பதிவு செய்துள்ளனர். இவர்களே சூடானில் அதிக வாக்காளர்களாகவும் உள்ளனர். (க)

# திருடிய களைப்பில் தூங்கிய திருடன்!

ஜேர்மன்,ஜன5

ஜேர்மனை சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் ஒருவன் கடந்த செவ்வாய்க்கிழமை அந்த நாட்டில் உள்ள ஆஹாஸ் என்ற நகரில் உள்ள கடை ஒன்றில் திருடச் சென்றுள்ளான். அங்கிருந்த மின்சாரப் பொருள்கள், உணவுப் பொருள் கள், இனிப்பு வகைகளை அளவுக்கு அதிகமாக திருடிய திருடன் அசதியால் கடைக்குள் தூங்கி விட்டான்.

மறுநாள் காலையில் கடையை திறந்த உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் திருடனின் உறக்கத்தை கலைக் காமல் பொலிஸாருக்கு தகவல் அளித்தனர். பொலிஸார் வந்து பின் புறத்தால் எழுப்பிய போதுதான் தான் தூங்கிவிட்டது திருடனுக்கு தெரியவந்தது.



வெள்ளத்தில் மிதக்கிறது ஆஸ்திரேலியா: கடுமையான மழை காரணமாக ஆஸ்திரேலியாவின் பெரும் பகுதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வீடுகள், கடைகள் அனைத்துக்குள்ளும் வெள்ளம் புகுந்ததால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குயிலான்ட் மாநிலத்தில் வெள்ளம் வடிந்துவருவதை அடுத்து தண்ணீரில் ஊறிப்போன தமது தளபாடங்களை வெளியே இழுத்துப் போட்டு காயவைக்க முயற்சிக்கிறது இந்தக் குடும்பம். (உ)

# ஆஸ்திரேலியாவில் பெரு வெள்ளம்; உதவிக்கு இராணுவ விமானங்கள்

ஆஸ்திரேலிய நகரான நொக்காம்ப்ரனில் வெள்ளநீர் அதன் உயர்ந்த மட்டத்தை இன்னமும் 12 தொடக்கம் 18 மணித்தியாலங்களுக்குள் எட்டிவிடுமெனத் தெரிகின்றது.

இந்தப் பகுதியில் எஞ்சியுள்ளவர்களுக்கு விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இராணுவ விமானங்கள், விரைந்து கொண்டிருக்கின்றன.

மூன்று பேரின் உயிர்களைக் காவு கொண்ட பாம்புகளால் மொய்க்கப்பட்ட வெள்ள நீரிலிருந்து விலகியிருக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

குயின்லான்ட் மாநிலத்தின் பிரதேசங்கள் சில வெள்ளத்திலிருந்து மீண்டு வரும் அதே வேளை வேறுசில பிரதேசங்கள் புதிய வெள்ள நீரை எதிர்பார்த்துத் தயார் நிலையிலுள்ளன.

20 நகரங்களுக்கு மேல் வெள்ளத்தினால் துண்டிக்கப்பட்டுள்ளதோடு 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மேலும் நொக்காம்ப்ரன் விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. இந்த நகரத்துக்கான விநியோகங்கள் இராணுவ ஹெலிகொப்ரர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுபற்றிக் கருத்து வெளியிட்ட அவுஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கிலாட் இதுவொரு ''பெரிய இயற்கைப் பேரழிவு'' என்று குறிப்பிட்டார். ஆனால் குறித்த வேளையில் இதிலிருந்து மீளமுடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லீக் அணிகளுக்கு இடையில் உதைபந்தாட்டம்:**

# பருத்தித்துறை-சிவில் பாதுகாப்பு அணிகள் ஞாயிறு இறுதியாட்டத்தில் மோதுகின்றன



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி

யாழ்ப்பாணம்,ஜன.5

சிறிலங்கா உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்திவரும் சிரேஷ்ட லீக் அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சிற்றி லீக் உதை பந்தாட்ட ஆடுகளத்தில் நடை பெறவுள்ளது.

பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து ஸ்ரீலங்கா சிவில் பாதுகாப்பு படை லீக் அணி மோதவுள்ளது.

43 லீக் அணிகள் பங்கு பற்றிய இந்தச் சுற்றுப் போட்டி யில் முதல் சுற்றில் விலகல் முறையிலும் பின்னர் லீக். முறையிலும் சுற்றுப் போட்டி நடைபெற்றது.

அரையிறுதி ஆட்டம் வரை யில் பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் அணி எந்த அணியிடமும் தோல்வி அடையாது தனது திறமையைக் காட்டி வெற்றி பெற்றது.

பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் அணி முதலாவது விலகல் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் அணியுடன் மோதிய ஆட்டம் இரு அணியினரும் 2:2 என்ற கோல்களைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதில் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப் பட்டது.

பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் அணி 3:2 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் அணியை வெற்றி கொண்டது.

பருத்தித்துறை உதை பந் தாட்ட லீக் அணி தனது இரண்டாவது ஆட்டத்தில் ஸ்ரீலங்கா விமானப்படை அணியுடன் மோதியது. இதில் இரண்டு அணியினரும் 3:3 என்ற கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர் மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் அணி 4:3 என்ற கோல்களைப் பெற்று ஸ்ரீலங்கா விமானப்படை அணியை வெற்றி கொண்டது.

பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் அணி லீக் முறையிலான ஆட்டங்களில் மட்டக்களப்பு லீக் அணியை 6:0 என்ற கோல் கணக்கிலும் ஹற்றன் லீக் அணியை 4:1 என்ற கோல் கணக்கிலும் அனுராதபுர லீக் அணியை 3:2 என்ற கோல் கணக்கிலும் வெற்றி கொண்டது.

அரையிறுதி ஆட்டத்தில் நீர்கொழும்பு லீக் அணியை 3:1 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

(ஐ-23)

## யாழ். மாவட்டத்தில் குறுக்கறுத்து ஓடும் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.5

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் குறுக்கறுத்து ஓடும் போட்டி மிக விரைவில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கு கொள்ளும் போட்டியாளர்கள் தங்களது பெயர் விவரங்களை யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள விளையாட்டுத் துறைப் பிரிவில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எப்.ரூபசிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.(ஐ-23)



கம்பஹா நவலோக உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த டிசெம்பர் மாதம் ஸ்ரீலங்கா கனின் யுகு சோட்டோகான் சங்கத்தினரால் நடத்தப்பட்ட தேசிய கராத்தே போட்டியில் 18 வயதினருக்கான சண் டைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற எம்.திபா கர் தங்கப் பதக்கத்தினைப் பெற்றுக்கொண்டார். (23)

## உலக கிண்ண கிரிக்கெட் : மாலிக், அக்மலுக்கு வாய்ப்பு இல்லை

உலக கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் தொடங்கு கிறது. இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் முன்னாள் கேப்டன் சோயிப் மாலிக், கமரன் அக்மல் ஆகியோர் இடம் பெறுவ தற்கான வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது.

சூதாட்ட புகார் காரணமாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் வீரர் களின் வங்கி கணக்கை கேட்டு இருந்தது. இதுவரை இருவரும் வங்கி கணக்கை கொடுக்க தவறிவிட்டனர்.

இதனால் இருவரும் உலக கிண்ணப் போட்டியில் இருந்து நீக்கப் படு வார்கள் என்று கூறப்படுகிறது. ஏற்கனவே ஸ்பாட் பக்சிங் சூதாட்டம் காரணமாக சல்மான்பட், முகமது ஆசிப், முகமது அமீர் ஆகிய 3 வீரர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டு இருந்தனர் என் பது குறிப்பிடத்தக்கது. (23)

## உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை முன்னிட்டு தொலைக்காட்சித் தொடர்

எதிர்வரும் உலகக் கிண்ண கிரிக்கட் சுற்றுத் தொடரை முன்னிட்டு தொலைக்காட்சித் தொடரொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொடரில் 12 நிகழ்ச்சிகள் உள்ளடங்குகின்றன.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஒலிபரப்பு பங்குதார நிறுவனமாக செயற்படும் ஈஎஸ்பீஎன் ஸ்டார்-ஸ்போர்ட்ஸ் நிறுவனம் நிகழ்ச்சிகளைத் தயாரித்துள்ளது. இதில் உலகக் கிண்ண சுற்றுத் தொடர் சார்ந்த வரலாறு திரையிடப்படுவதுடன், முக்கியமான வீரர்களின் நேர்காணல்களும் இடம்பெறவுள்ளன.

## மேசைப்பந்தாட்ட பயிற்சிமுகாம் கண்டியில்



யாழ்ப்பாணம்,ஜன.5

சர்வசேத மேசைப்பந்தாட்ட பயிற்றுநர் பயிற்சி முகாம் எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை ஐந்து நாள் கள் பேராதனை ஜனத் ராஜபக்ஷ சர்வதேச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற வுள்ளது.

இலங்கையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 30 மேசைப்பந் தாட்ட பயிற்றுநர்கள் இந்த முகாமில் பங்குகொள்ளவுள்ளனர்.

இந்த பயிற்றுநர் பயிற்சி முகாமில் பங்குகொள்வதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் ஜெகநாதன் மோகன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ-23)

## வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி கலந்துரையாடல் சனியன்று

யாழ்ப்பாணம், ஜன.5

சிறிலங்கா வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் சனிக்கிழமை 2 மணியளவில் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்டபெறவுள்ளது.




யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் அங்கம் வகிக்கும் சகல மத்தியஸ்தர்களையும் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றியவர்களையும் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள சகல கழகங்களின் தலைவர், செயலாளர்களையும் கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு யாழ்.வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவி ஏ.எப்.ரூபசிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.(ஐ-23)

## உலகக் கிண்ண போட்டிகளுக்கான இலங்கை மைதானங்கள் தயார்

எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் உள்ளூர் மைதானங்களின் கட்டுமானப் பணிகள் இறுதித் தறுவாயில் உள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழுவின் தலைவர் டீ.எஸ்.டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தப் பணிகளை முழுமையாக பூர்த்தி செய்வதே அரசாங்கத்தின் இலக்காகும். சர்வதேச கிரிக்கெட் பேரவையின் நிபுணர் குழு ஜனவரி 15ஆம் திகதி இலங்கை வந்து மைதானங்களின் நிலைமைகளை ஆராயவிருக்கின்றது.


உலகக் கிண்ணச் சுற்றுத்தொடருக்கு முன்னதாக மேற்கிந்திய தீவுகள் அணி பங்கேற்கும் மூன்று ஒருநாள் சர்வதேசப் போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற்போட்டி ஜனவரி 31ஆம் திகதி சூரியவெவ மஹிந்த ராஜபக்ஷ மைதானத்திலும், ஏனைய போட்டிகள் கெத்தாராம மைதானத் திலும் நடைபெறவுள் ளன.



வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் கடந்த மாதம் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியில் இரண்டாம் இடத் தைப் பெற்றுக்கொண்ட கா.பாஸ்கரனுக்கு இலங்கை மேசைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் சந்தன பெரேரா சான்றிதழ் வழங்குகின்றார். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் அசத்தலான ஆட்டம் இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு




கேப்டவுன், ஜன.5

கேப்டவுனில் இடம்பெற்று வரும் இந்தியா - தென்னா பிரிக்க அணிகளுக்கு இடையி லான 3 ஆவது டெஸ்ட் போட்டி யில் நேற்று ஆட்ட நேர முடி வில், 2 ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா 2 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களை பெற்றது.

சிமித் 29 ஓட்டங்களுக்கும் ஹாரீஸ் ஓட்டம் எதுவும் எடுக்கா மலும் ஆட்டம் இழந்தனர். பீற் றர்ஸன் 22 ஓட்டங்களுடனும் அம்லா ஓட்டம் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 142 ஓட்டங்களை எடுத்திருந்த இந்தியா தனது முதலாவது இன்னிங்ஸை நேற்றுத் தொடர்ந்தது.

65 ஓட்டங்களுடன் களத் தில் இருந்த கம்பீரும் 49 ஓட் டங்களுடன் களத்தில் இருந்த டெண்டுல்கரும் நேற்று அதிர டியாக ஆட்டத்தைத் தொடங்கினர்.

கம்பீர் 93 ஓட்டங்களை எடுத்திருந்தபோது, ஹாரிஸின் பந்துவீச்சில் பௌச்சரிடம் பிடிகொடுத்து, சதமடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

அடுத்து சச்சினுடன் ஜோடி சேர்ந்த லக்ஷ்மன் (15) ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளி யேறினார். பின்னர் களம் புகுந்த புஜாரா 2 ஓட்டங் களுடன் ஸ்ரெயின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறை யில் ஆட்டமிழந்து வெளி யேறினார். பின்னர் கள மிறங்கிய இந்திய அணித் தலைவர் டோனி, ஓட்டம் எதுவும் பெறாமல், ஸ்ரெயின் பந்துவீச்சில் பிரின்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து, பெரிய ஏமாற்றத்தை அளித் தார்.

மறுமுனையில் நிதான மான அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்த சச்சினுக்கு, ஹர்பஜன் சிங் ஒத்துழைப்புக்கொடுத்து ஆடினார்.

ஹர்பஜன் சிங் அதிரடியாக ஆடி மூன்று பவுண்டறி களையும் இரண்டு சிக்ஸர்க ளையும் விளாசி 40 ஓட்டங் களைப் பெற்றார்.

அதிரடியாக ஆடிக் கொண்டிருந்த சச்சின் 146 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட மிழந்தார்.தொடர்ந்து வந்த ஸஹீர் ஹான் 23 ஓட்டங்களைப் பெற்றார்.

அத்துடன் சகல விக்கெட் டுக்களையும் இழந்து 386 ஓட் டங்களை இந்தியா பெற்றது.

இரண்டு ஓட்டங்களைப் பின்நிலையில் இருந்த தென்னாபிரிக்கா இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது.

இரண்டு விக்கெட்டுக் களை இழந்து 52 ஓட்டங் களைப் பெற்றது.

இன்று ஆட்டத்தின் நான் காம் நாள்.

## இங்கிலாந்து அணி சிறப்பாக செயற்படுகின்றது - வோர்ன்

இங்கிலாந்து அணி இப்போது அபாரமாக விளையாடி வருவதாக ஆஸ்திரேலிய முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது குறித்து 'டெலிகிராப்' பத்திரிகையில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

கடந்த ஆண்டிலிருந்து இங்கிலாந்து அணி சிறப்பாக விளையாடி வருகிறது. இத னால் உலகின் முன்னணி அணியாகத் திகழ வேண்டும் என்ற அந்த அணியின் விருப்பத்தை நெருங்கி வருகிறார்கள் என்றே கூறவேண்டும். ஆஷஸ் டெஸ்ட் தொடரில் அவர்களின் ஆட்டம் அற்புதமாக இருந்து வருகிறது. ஆஷஸ் கிண் ணத்தைத் தக்க வைத்துக்கொண்டிருப்பது, அந்த அணிவீரர்களின் நம்பிக் கையையும், அணி மீது ரசிகர்கள் வைத்துள்ள நம்பிக்கையையும் அதிகரித்துள்ளது.

எனினும் அணியில் மேலும் சில மாற்றங்களைக் கொண்டு வருவது அவசியம். உள்நாட்டில் நடைபெற்று வரும் போட்டிகளில் மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலம் மேலும் திறமையான வீரர்களை உருவாக்க முடியும். இங்கிலாந்து அணியின் இயக்குநராக உள்ள அன்டி பிளவருக்கும், அணியின் முன்னேற்றத்தில் சிறப்பான பங்களிப்பு உள்ளதை மறுக்க முடியாது - என்று வோர்ன் கூறியுள்ளார்.

## மிகச் சிறப்பாகச் செயற்படுவேன் ரோஹன் போபண்ணா நம்பிக்கை

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியின், வாவ்ரிங்காவுடனான முதல் சுற்று ஆட்டத்தின்போது சிறப்பாக விளையாட முயற்சிப்பேன் என்று இந்திய வீரர் ரோஹன் போபண்ணா தெரிவித்தார்.ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் போபண்ணா, சுவிற்சர்லாந்தின் வாவ்ரிங்காவை எதிர்கொள்கிறார். கடந்த ஆண்டும் முதல் சுற்றில் வாவ்ரிங்காவையே சந்தித்தார் போபண்ணா. அந்த ஆட்டத்தில் போபண்ணா தோல்வியடைந்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:

வாவ்ரிங்காவுடனான ஆட்டம் கடினமானதுதான். இருப்பினும் சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்தி வெற்றிபெற முயற்சிப்பேன். ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர்கள் இதுவரை பட்டம் வென்றதில்லை. எதிர்வரும் காலங்களில் இந்திய வீரர்கள் சிறப்பாக விளையாடி பட்டம் வெல்வார்கள்.

பாகிஸ்தானின் அய்சம்-உல்ஹக் குரேஷியுடன் இரட்டையர் பிரிவில் விளை யாடவுள்ளேன். கடந்த ஆண்டில் சிறப்பாக விளையாடி உலகின் முன்னணி வீரர் களை வீழ்த்தியுள்ளோம். 2011இலும் சிறப்பாக விளையாடுவோம். கடந்த ஆண்டும் 'மாஸ்டர்ஸ்' டென்னிஸ் போட்டிகளில் இரண்டில் மட்டும் தான் பங்கேற்றோம். இந்த ஆண்டு அனைத்திலும் (9) பங்கேற்கவுள்ளோம் - என்றார்.

### ஆஷஸ் கடைசி டெஸ்ட்

# 280 ஓட்டங்களுடன் சுருண்டது ஆஸி. கணக்கை ஆரம்பித்தது இங்கிலாந்து

சிட்னி, ஜன.5

ஆஷஸ் டெஸ்ட் போட்டித் தொடரின் கடைசி டெஸ்டில் இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. முதல் இன்னிங்ஸை தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி 106.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 280 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி நேற்றைய ஆட்டநேர முடிவில், 48 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை எடுத்தது.

நேற்றுமுன்தினம் மழையால் பாதிக்கப்பட்ட முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 134 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சிட்னியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

தொடரில் 2-1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலை வகிப்பதால், இந்தப் போட்டியில் வெற்றி பெற்றால் தான் தொடரைச் சமன் செய்ய முடியும் என்ற நெருக்கடியுடன் ஆஸ்திரேலிய அணி களம் கண்டுள்ளது.

4 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களை முதல் நாள் ஆட்டத்தில் எடுத்திருந்த ஆஸ்திரேலிய அணி, நேற்றுத் தனது இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது.

12 ஓட்டங்களுடன் களத்திலிருந்த மைக் ஹஸ்ஸி நீண்டநேரம் நிலைக்கவில்லை. 33 ஓட்டங்களுடன் கொலி[illegible] வீசிய பந்தில் ஆட்டமி[illegible] வெளியேறினார். அடுத்துக் களம்புகுந்த ஹடின் 6 ஓட்டங்களுடன் அன்டர்ஸன் வீசிய பந்துக்கு பிறையரிடம் பிடிகொடுத்து வெளியேறினார். பின்னர் வந்த ஸ்மித் 18 ஓட்டங்களுடன் அன்டர்ஸன் வீசிய பந்துக்கு கொலிங்வூட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்துக் களம்புகுந்த ஜோன்சன் சற்று நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஜோன்சன் 53 ஓட்டங்களை எடுத்திருந்தபோது, பிரஸ்னனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் வந்த சிடில் 2 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து, அன்டர்ஸனின் வீசிய பந்துக்கு ஸ்டிராஸிடம் பிடிகொடுத்து வெளியேறி[illegible] ஓட்டங்களை எடுத்து, அன்டர்ஸனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். பீர் 2 ஓட்டங்களை எடுத்தார். ஆஸ்திரேலிய அணிக்கு உதிரி ஓட்டமாக 15 ஓட்டங்கள் கிடைத்தன.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளர்களான அன்டர்ஸன் 4 விக்கெட்டுக்களையும், பிரஸ்னன் 3 விக்கெட்டுக்களையும், ரம்லெட், ஸ்வான், கொலிங்கவூட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆஸ்திரேலிய அணி 106.1 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 280 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது இங்கிலாந்து அணி. ஆரம்ப வீரர்களாக ஸ்டிராஸ் - குக் களம்புகுந்தனர். அதிரடியாக ஓட்டம் குவித்த இந்த ஜோடி 73 ஓட்டங்களை எடுத்திருந்த போது, ஹில்பென்ஹாஸ் பந்துவீச்சில் ஸ்டிராஸ் (60) ஆட்டமிழந்து வெளி யேறினார். அடுத்து வந்த டிராட் வந்தவேகத்திலேயே ஜோன்சன் பந்துவீச்சில் றெட் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த பீற்றர்ஸன் 36 ஓட்டங்களுடன் ஜோன்சன். பந்துவீச்சில் பீரிடம் பிடிகொடுத்து வெளியேறினார். பின்னர் வந்த அன்டர்ஸன் ஒரு ஓட்டத்தை எடுத்திருந்தபோது நேற்றைய ஆட்டம் முடிவுக்கு வந்தது.

ஆட்டநேர முடிவின்போது இங்கிலாந்து அணி 48 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 . 02 . 1979



மறைவு 05 . 01 . 2007

அமரர்

## நவரெட்ணம் மனோராஜ்

தன்னை பூமிக்கு அறிமுகம் செய்த
பெற்றோருக்கு நல்ல மகனாய்
பாசமழை பெய்திட வளர்த்த
உடன் பிறப்புகளுக்கு நல்ல சகோதரனாய்
அன்பின் சின்னமாய் விளங்கிய
உறவுகளுக்கு நல்ல உறவாழனாய்
பிறரின் இன்னல்களைப் போக்கிட வந்த
நல்ல நண்பனாய்
தன் தாய் நாட்டின் பாரம்பரியம் நிலைத்திட வந்த
நல்ல இளைஞனாய்
புன்னகையால் எல்லோரையும் ஆழ வந்த
புன்னகை அரசனாய்
மத பேதமின்றி வாழ்ந்து காட்ட வந்த
நல்ல மானிடனாய்
எம் வாழ்வில் அழியா ஆதவனாய்
உதித்திருந்தீர்....
காலத்தின் விளையாட்டால்
கண்ணிமைக்கும் நேரத்தில்
எம்மை விட்டுப் பிரிந்தாலும் – உம்
நினைவுகளோடு என்றும் நாம்....

38, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

# இரு தினங்களில் 962 பேருக்கு வாகன அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், ஜன.5

நல்லூர் பிரதே செயலகத்தில் கடந்த இரு தினங்களிலும் 962 பேருக்கு வாகன வரி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

வருட ஆரம்ப தினமான நேற்று முன்தினமே காலையில் இருந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் கூடினர். அன்று 486 பேருக்கு வாகன வரி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. நேற்றும் 476 பேருக்கு பத்திரம் வழங்கப்பட்டது.

பொலிஸாரின் சோதனை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால் வாகன வரி அனுமதிப் பத்திரம் பெறுவதில் மக்கள் அக்கறை காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-ஐ)

---

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத் தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அதாவுல்லாவுக்கோ, பிரதி யமைச்சருக்கோ தெரியாத நிலையில், இதனை நிறைவேற்ற முனைவது வேடிக் கையாகும்.

உள்ளூராட்சிசபை தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்தினூடாக ஐக்கிய தேசியக் கட்சி, ஏன் அரசுடன் இணைகிறது என்று தெரியவில்லை. அரசுடன் ஒன்று சேர்ந்து தேநீர் அருந்தி, உணவு உண்டு இந்த திருத்தச் சட்டமூலத்திற்கு ஏன் ஆதரவு தெரிவிக்கின்றார்கள் என்றும் தெரியவில்லை.

நாட்டு மக்களின் விருப்பமானது சரியான முறையில் வெளிப்படுத்தப் படவேண்டும்.

அதேவேளை தமிழ், முஸ்லிம் மக்கள் இன அடிப்படையில் உருவாக்கப் பட்டுள்ள கட்சிகளுக்கு இச்சட்ட மூலமானது பெரும் தடையாகவும், சவாலாகவும் காணப்படும். எனவேதான் இச் சட்டமூலத்தை ஜே.வி.பி. எதிர்க்கின்றது - என்றார்.

(ஒ-சி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சகோதரத்துவ உறுப்பினரான திருமதி பாலசுப்பிரமணியம்
கலாதேவியின் தந்தை

**பொன்னம்பலம் சதாசிவம்**

05.12.2010 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆசிரிய சகோதரத்துவம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கவேலாயுதம் திரௌபதி



தும்பளை மேற்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி, கனோவர் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேலாயுதம் திரௌபதி கடந்த 27.12.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தங்கவேலாயுதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - செல்லமுத்து தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் ஆசை மருமகளும் சிதம்பரநாதன், காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன், வைகுந்தநாதன் மற்றும் ஆனந்தநாதன், பஞ்சநாதன், அரியமலர், தனசிகாபதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான துரைராசா, ஞானசுந்தரம், குலசிங்கம் மற்றும் நாகரத்தினம், பரமேஸ்வரி, சீதாலட்சுமி, ஆனந்தமயில் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2011) புதன் கிழமை பி.ப. 1.30 தொடக்கம் பி.ப. 3 மணிவரை Stoeckener freidhof, Stoeckener Str, 88, 30419 Hannover எனும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
திருமதி அரியமலர்
கணேசநாதன்
0112589045

*19 A, Clifford Place,*
*Bambalapitty.*

(சி/374306)

## சுப்பிரமணியம் சண்முகராசா (சண்முகம்)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகராசா நேற்றுமுன்தினம் (03.01.2011) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் சின்னம்மா தம்பதியரின் மருமகனும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் சாந்தீபன், ஜசிகரன், ஜீவரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தெய்வேந்திரம், அஞ்சலாதேவி, தர்மபாலன், சற்குணதேவி, மகேந்திரம், சிவசுந்தரம், சுசிலாதேவி, தயாளகுணதேவி, நவீந்திரராஜா, ரவீந்திரராஜா, பாலநாராஜனி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாரதாதேவி, கிருஸ்ணபிள்ளை, சந்திரபவானி, காலஞ்சென்ற மனோகரன் மற்றும் சிவனேஸ்வரி, தேவலோஜினி, ஜோதீஸ்வரன், பத்மராணி, விக்னேஸ்வரன், சுகிர்தா, ரவீந்திரன், கணேசரெத்தினம், இராசரெத்தினம், சற்குணரெத்தினம், நவரெத்தினம், விஜயலட்சுமி, இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் சரோஜினிதேவி, பேரின்பராஜா, வேலாயுதபிள்ளை, மங்கள இராஜேஸ்வரி, சிவமதி, குலசேகரம் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2011) வியாழக் கிழமை நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
*சுசீலாதேவி (மனைவி),*
*தெய்வேந்திரம் (சகோதரன்),*
*சுப்பிரா உணவகம், சங்கானை.*

*வட்டு தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*

(103500)


இவ்வாண்டும்...

TECHNO WORLD
Studies (Pvt) Ltd

கணினி பயிற்சி நிறுவனம்
நாடளாவியரீதியில் கணினி உயர்கல்விக்காக வழங்கும்
இலவச புலமைப்பரிசில்

FREE
COMPUTER SCHOLARSHIP - 2011

பரீட்சை நாள்
JANUARY
23
ஞாயிற்றுக்கிழமை



கணினிப் பாடநெறிகள் அனைத்திற்கும்....
75% வரை கட்டணக்கழிவு பெறும் வாய்ப்பு

- ஒரு மணிநேரம் கொண்ட பல்தேர்வு வினாக்கள்
- பொதுஅறிவு பொது உளச்சார்பினைக் கொண்டது
- 15 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம்.
- இப்பரீட்சைக்கு கட்டணம் எதுவும் இல்லை
- கணினி பாடநெறிகள் அனைத்திற்கும் 75% வரை கட்டணக் கழிவு பெறும் வாய்ப்பு

10ஆவது ஆண்டில்

யாழ்குடா நாட்டில்...

| | |
|---|---|
| 344, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 021 4921124 | 246/25, மாலி சந்தி, நெல்லியடி-கரவெட்டி 021 4925145 |
| 397, 4ம்கட்டை யாழ் வீதி, ஆனைக்கோட்டை-மானிப்பாய் 021 4922400 | கென்ஸ்மன் வீதி, நீதிமன்று முன் சாவகச்சேரி 021 4925114 |
| 64, பலாலி வீதி, திருநெல்வேலி 021 4922401 | ஐயா கடை சந்தி மீசாலை |

கணினி உலகில் என்றும் உங்கள்

2010 - (O/L) மாணவர்களுக்கு விசேட கழிவுடன் தினமும் கணினி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## க.இ.குமாரசாமி

(கோவைகிழார்)

(கூட்டுறவாளர், சமூக சேவையாளர்)

திதி: மார்கழி பூர்வபக்க பிரதமை
05.01.2011 (புதன்கிழமை)

மலர்வு 30.06.1913

உதிர்வு 17.12.2009

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"**

**என்ற குறள்வழி வாழ்ந்து இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திக்காக இவ் முதலாவது சிரார்த்த தினத்தில் பிரார்த்திக்கின்றோம்.**

'இரத்தினவாசா',
வீதி, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தர்மகுலசிங்கம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் தற்பொழுது பிரான்ஸில் வசிப்பவருமாகிய கந்தையா தர்மலிங்கம் நேற்று (04.01.2011) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் கமலாதேவியின் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் பராசக்தி தம்பதியரின் மருமகனும் சுகந்தனின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும் சுவிற்றியின் அன்பு மாமனும் வேனுஜா, வினுஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், யோகலிங்கம், பாலசுப்பிரமணியம், விஜயரட்ணம் மற்றும் முத்துலெட்சுமி, பெரியநாயகி ஆகியோரின் சகோதரனும் குலேந் திரன், கனகராசா, ரெத்தினம், ஞானம், சிவம், தவம், விமலாதேவி, சியாமளா தேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
*இல. 15, 2ஆம் ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில்.*
**மகேஸ்வரி விஜயரட்ணம் (அண்ணி), பிள்ளைகள்.**

## ஞானப்பிரகாசம் பிறிற்றோ

**(Retaired Assistant Bosan of Ship, Fisheries Dep.)**



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டை, விதானையார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் பிறிற்றோ நேற்றுமுன்தினம் (03.01.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனியாப்பிள்ளையின் (இராசமணி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கபிரியேற்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மேரி யோசப்பின் பேரின்பரெட்ணம், காலஞ்சென்ற மாசில்லாமணி மற்றும் சவிரியம்மா சிவஞானம் (கனடா), நீக்களஸ் கிறிஸ்ரின் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும், பாலேந்திரா, சிந்தியா, விமலேஸ்வரி, யோசப்பின் (நோர்வே), நிசாராஜேஸ்வரி, றஞ்சிற் (நோர்வே), யூலியற் தனேந் திரன் (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர்மடம், பாசையூர் புனித அந்தோனியார் பாடசாலை) ஜெனற் குளோறியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்தியாப்பிள்ளை (இளைப்பாறிய சுங்க அதிகாரி), புஸ்பராணி பாலேந்திரா (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), துரைரெட்ணம் (Wiram work shop), ஸ்ரெனிஸ்லொஸ் (நோர்வே), காலஞ்சென்ற தேவநாயகம் (Ship 2nd officer), மற்றும் றஞ்சித் கௌரி (நோர்வே), தனேந்திரன் (Ess Jay Electricals shop), றோய் நீக்கிளஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் நிசாத் (லண்டன்), கிருஷாந்தி, பிரியா, அமல்றாஜ் (Ship 2nd officer), விமல்ராஜ் (மின்னிய லாளர்), நிமல்ராஜ் (கனடா), திலக் தேவறாஜ் (லண்டன்), எனிற், மைதிலி (கனடா), அஜித்குமார் (Sri Lanka Insurance), மெரின் பிறேமாளா, லெனோ (நோர்வே), தர்ஷன் (நோர்வே), தர்மிஷன் (நோர்வே), அனுசா (லண்டன்), சினோஜா, றெமிஷன், ரெர்வின், பிரவின், மெர்வின் (நோர்வே), எமர்ஷன் (லண்டன்), துகானி, டறின், நிக்கொலின் ஆகியோரின் பேரனும் ஷெறோன், நிறோன், டிறோன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.01.2011) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
*6/7, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.*
**பாலேந்திரா (மகன்)** (108475)

## செல்லையா சுப்பிரமணியம்

**(ஓய்வுபெற்ற சாரதிப் பயிற்றுநர், இ.போ.ச.)**



நல்லூரைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுப்பிரமணியம் (மணியம் மாஸ்டர்) கடந்த 01.01.2011 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் தவசீலன், ஜெயசீலன், பிரபா, சத்தியா, தனப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கசனியா, யசோ தரா, பகீரதன், இரவீந்திரன், விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் றூபி, லாவண்யா, ஜீதனா, கிரண், திவாகர், நவீன், சஞ்சீவ், ஆரபி, அடானா, கரிசினி, கஜன், அஸ்வினா, ஆதர்ஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2011) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
*பிரான்ஸ்.* (108477)
**குடும்பத்தினர்.**

## உள்ளூராட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் இந்தச் சட்ட மூலம். அதை எப்பொழுதும் நிறைவேற்றுவோம். எதிர்க்கட்சிகள் அவசரப்படத் தேவை இல்லை என்கிறது அரசு.

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.அத்தாவுல்லா நேற்று நாடாளு மன்றத்தில் உள்ளூராட்சி அதிகார சபைகள், விசேட ஏற்பாடுகள் சட்ட மூலம் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் என்பனவற்றின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றினார்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட விருப்பு வாக்கு முறையினால் தமது தொகுதியில் தாம் விரும்பிய ஒருவரைத் தெரிவுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால், அந்தத் தவறை உணர்ந்து தொகுதிவாரித் தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இன்று ஆதரவு தர முன்வந்துள்ளது.

என்றாலும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கான எல்லைகளை தீர்மானிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, இவ்விரு சட்ட வரைவுகள் தொடர்பாக பிறிதொரு தினத்தில் வாக்கெடுப்பு நடத்த அரசு தீர்மானித்துள்ளது என்று கூறினார்.

அமைச்சரின் இந்தக் கூற்றை எதிர்க்கட்சிகள் வன்மையாக எதிர்த்தன. ஜே.வி.பி. உறுப்பினரான அநுரகுமார திஸாநாயக்க, ஐ.தே. கட்சி உறுப்பினர் ஜோஸப் மைக்கல் பெரேரா ஆகியோர் கடுமையாக விமர்சித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜோஸப் மைக்கல் பெரேரா உரையாற்றும்போது, இந்த அரசு நேற்று ஒன்றையும், இன்று ஒன்றையும் கூறுகின்றது.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், இன்று இவ்விரு சட்டவரைவுகளும் சபையில் விவாதித்து வாக்கெடுப்பு நடத்துவதற்காக ஒப்புக்கொள்ளப்பட்டது. அதற்கு நாங்களும் ஆதரவு தருவதாக உறுதி அளித்தோம். அதற்கு தயாராகவும் இந்தச் சபைக்கு வந்தோம். ஆனால் இன்று அமைச்சர் இல்லை. இன்று வாக்கெடுப்பு நடத்த முடியாது என்று நொண்டிச்சாட்டு கூறுகின்றது.

எல்லை நிர்ணய சபையின் நடவடிக்கைகளில் தாமதம் என்று கூறுவதும் வியப் பாக இருக்கின்றது. சட்டமூலங்களை சபையில் நிறைவேற்றினால் தான் தொகுதி எல்லை நிர்ணய சபையை அமைக்க முடியும் என்பது தான் விருப்பம். ஆனால் உண்மை நிலை என்னவென்றால் ஆளும்கட்சி உறுப்பினர்கள் ஒரு பகுதியினர் தொகுதிவாரித் தேர்தல் முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மக்கள் முன் செல்லும் துணிவு இல்லாதது தான் உண்மை.

நாங்கள் விட்ட தவறைத் திருத்த நாங்களே முன்வந்துள்ளோம். எனவே, உடனடியாக இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார்.

ஜே.வி.பி. உறுப்பினரான அநுரகுமார திஸாநாயக்க வேறு வழியில் கூறினார். அதாவது தொகுதிவாரித் தேர்தல் முறை சிறுபான்மை இனம் மற்றும் சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை முடக்கி விடும். இது அரசின் ஒரு சூழ்ச்சி. புதிய தேர்தலில் எந்த அடிப்படையில் உறுப்பினர்களைத் தெரிவு செய்யப் போகின்றது என்று தெளிவுபடுத்தவில்லை என்றும் சுட்டிக் காட்டினார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார,

இந்தக் கட்டமைப்பு அரசால் கொண்டுவரப்பட்டது. அதனை எப்படியும் நிறைவேற்றுவோம். எதிர்க்கட்சிகள் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.


## உரும்பிராயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகாலிங்கம் அமுதராசா (வயது 35) என்பவரையே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவரின் சகோதரி ஆணைக் குழுவில் செய்துள்ள முறைப் பாட்டில் -

தனது சகோதரன் வீட்டுக்கு அருகில் இரவு நேரத்தில் நண்பர்களுடன் இருந்து கதைப்பது வழக்கம். நேற்றுமுன்தினம் இரவும் நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார். ஆனால் அன்றிரவு வீடு திரும்பவில்லை - என்று தெரிவித்துள்ளார். (ஒ-ஐ-86)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## சேனாதிராஜா தயாளன்

**(இலங்கை மின்சார சபை ஊழியர், சுன்னாகம்)**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1960-05-10 | 2008-12-28 |

இரண்டு ஆண்டுகள் நீர் போய்
உருண்டோடித்தான் சென்றிடினும்
வரண்ட எம் நெஞ்சங்கள் வலுவிழந்து
இருண்டு போனதையா உன் பிரிவால்

தற்காலிக முகவரி:
C1/1, சென்ட்ரல் றோட், கொழும்பு-12
நிரந்தர முகவரி:
நீர்வேலி வடக்கு.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## சானையன் நாகமுத்தன்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி கிழக்கு, கலைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சானையன் நாகமுத்தன் நேற்று (04.01.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும் பொன்னையா, காலஞ்சென்றவர்களான சின்னம்மா, கட்டையர், மீனாட்சி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இராஜேஸ்வரி, கந்தசாமி (சுவிஸ்), புவனேஸ்வரி, புஸ்பராணி, செல்வராணி, காலஞ்சென்ற ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் திரவியம், பூபதி (சுவிஸ்), மனோகரன், சற்குணராசா, சிறிதரன், காலஞ்சென்ற கோடீஸ்வரன் ஆகியோரின் அருமை மாமனும் கௌசலாதேவி, சுசித்திரா, சதீஸ்ராஜன் (ஜேர்மனி), சுவந்தா, கேதீஸ்வரன் (சுவிஸ்), கேதீஸ்வரி, சாருஜா (சுவிஸ்), சாருஜன் (சுவிஸ்), றஜித்தா, சிந்துஜா, சிந்துஜன், காலஞ்சென்றவர்களான சதீஸ்குமார், சதீஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேரனும் கனிசியா, றெஜினியா, டனுசியா, கீர்த்திகா, இளநிலா, றொசானி, மதுஷன், வினுஷன், தமிழின்பன், லதுர்சன், நிலாசினி (ஜேர்மனி), நிலாஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கைதடி கிழக்கு, கலைநகர்.*
**குடும்பத்தினர்.**

## செல்லப்பா இராசா

(உரிமையாளர், குகன் ஸ்ரோர்ஸ், இல.43, கோயில் வீதி, யாழ்ப்பாணம்)



வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா இராசா நேற்று (04.01.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தில்லையம்மா தம்பதியரின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் நடராசா, காலஞ்சென்ற தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவராணி, காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் கந்தவேள், இராஜேஸ்வரன், கௌரி, குகதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்னேஸ்வரன், மங்களராணி, உலகேஸ்வரன் ஆகியோரின் மாமனும் பவித்திரன், வசிகரன், விநோஜிதன், திருஷ்டிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் செல்வராசா (லண்டன்), மகாலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்காலிக வதிவிடமான இல.62, சந்தன மாதாகோயில் வீதி, சுண்டுக்குழி எனும் முகவரியில் நாளை (06.01.2011) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் மு.ப.10 மணியளவில் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல.62, சந்தன மாதா கோயில் லேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.*
**குடும்பத்தினர், அம்பிகைபாலன் (அப்பு), (பெறாமகன்)**


ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY

ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY — In God we trust — a school with a difference — humedica

Vacancies for Graduate Teachers

Applications are invited for immediate appointment to teach Physics Chemistry, Biology, Commerce, English and Maths up to G.C.E A/L in English medium for National & Cambridge Exams.

School has Reopened, Addmissions Available:- For Ages 4-6 in Manipay and 3-5 in Jaffna.

Mathers' Lane, Manipay, Jaffna. Contact No-0777238300, 0212229738.

வேலையாள்கள் தேவை

சன்னதி முருகன் வேக் சொப், இல.241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
மெக்கானிக் வேலை, சேவிஸ் வேலை தெரிந்தவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை. (ஆண்கள்) கணக்கு வேலை தெரிந்த (பெண்) பிள்ளைகள் தேவை.
தொ.பே: 0212228076

பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் ஆசிரியர் குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை.
தொடர்பு: 0779235382

ஆசிரியர் ஆ.தங்கராஜா, B.Sc.
G.C.E (A/L) புதிய பாடத்திட்டம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை செல்வரத்தினம்

தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை, மகாதனையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை செல்வரத்தினம் நேற்று (04.01.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் சின்னம்மாவின் (தெல்லிப்பழை பல.நோ.கூ. சங்கம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் செல்வபூரணம், சரஸ்வதி, அன்னமுத்து மற்றும் செல்வராசா, செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2011) புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகாதனை,*
*தெல்லிப்பழை.*

தகவல் :
சி.செல்வராசா (சகோதரன்).

(108490)

# அந்தணர்களுக்கான கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், ஜன.5

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றி யம் நடத்தும் அந்தணர்களுக்கான கருத்தரங்கு இன்று பிற்பகல் 2.30 மணிக்குச் சுன்னாகம் கதிரமலை சிவன் கோயில் தேவஸ்தான மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் சிவபதி சபா. வரததேவக் குருக்கள் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் கருத்துரையை சித்தார்த்த நல்லறிஞர் டாக்டர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் வழங்கு வார்.

நிகழ்வுக்கு வலி. தெற்கு, வலி. வடக்குப் பிரதேச அந்த ணர் களைத் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

கலை, வர்த்தக, கணித, உயிரியல்
A/L 2013
ஆரம்பம்: ஜனவரி 8
காலை 8
புதிய அனுமதிகள் இன்று முதல்
NEC
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

A/L 2013
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி - 08
காலை - 08.00
DMI

பொருளியர் கல்லூரி யாழ்.நகர் இணுவில்
தமிழ் DAY-CLASS
திரு.N.சத்தியவேந்தன்
(B.A.(Hons) Tamil.Spl. M.Phil.Jaffna)

| யாழ்.நகரில் | | இணுவில் | |
|---|---|---|---|
| திங்கள், புதன், வெள்ளி | - 8.00 | செவ்வாய், வியாழன் | - 8.00 |
| | | புதன், வெள்ளி | - 3.30 |
| செவ்வாய், வியாழன் | - 9.00 | ஞாயிறு - | - 4.00 |

இரு இடத்திலும் மாதத்தில் 25 மணித்தியாலங்கள் வகுப்பு நடைபெறும்
A/L 2013 வகுப்புக்கள் நடைபெறுகின்றன
யாழ்.நகரில் பிரிவு - 1 - 12 Pm இணுவிலில் பிரிவு - 1 - 8 am

## மரண அறிவித்தல்



### செல்வி இம்மானுவேல் ஆன்சிலின்

சங்குவேலி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இம்மானுவேல் ஆன்சிலின் நேற்று (04.01.2011) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.01.2011) புதன் கிழமை அவரின் இல்லத்தில் பி.ப. 2 மணியளவில் இடம்பெற்று, இறுதிநிகழ்வு தாவடி கல்வாரி சேமக் காலையில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி,*
*உடுவில்.*

தகவல் :
குடும்பத்தினர்.

A/L - 2013
கலை வகுப்புகள்
ஆரம்பம் : 05.01.2011
இன்று பிற்பகல் 4.00 மணி

| | |
|---|---|
| தமிழ் | - T.S.குகன் |
| வரலாறு | - S.S.தாஸ் |
| அரசியல் | - பிரபல்ய ஆசிரியர் |
| புவியியல் | - S.வேந்தன் |
| இந்து நாகரிகம் | - N.T.சுரன் |
| கிறி.சமயம் | - S.பபூ |
| அளவையியல் | - ஜெயந்தன் |
| நாடகமும் அரங். | - N.கஜிதன் |

யாழ். கல்லூரி

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
PHYSICS ⇨ K.Selvan B.Sc. (Hons)
A/L - 2012 LIGHT
ஆரம்பம் : 07.01.2011 (வெள்ளி) (6.30 A.m)
வெள்ளி : (6.30 - 7.30 A.m)
வெள்ளி : (5.00 - 6.00.P.m)

தை 2011 பிரிவுகளுக்கான பதிவுகள் ஆரம்பம்



edexcel INTERNATIONAL BTEC
HND
CIVIL
ENGINEERING
HND
QUANTITY
SURVEYING

பொறியியலாளர் ஆக வேண்டும் என்ற உங்கள் கனவை நாம் நனவாக்கித் தருகின்றோம்.

IIS CITY CAMPUS குடிசார் பீடத்தின் கீழ் நடாத்தப்படும் மேற்படி கற்கை நெறிகளுக்கு கல்வியாண்டு 2011 தை மாதப் பிரிவிற்காக மாணவர்கள் உள்வாங்கப் படுகின்றனர்.

உங்கள் அனுமதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

"கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச்சாம்ராஜ்யம்"

IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna.
Tel : 021 222 8060 Fax : 021 222 6933
E-mail : info@iis.edu.lk Web : www. iis.edu.lk

Personal Class (கணினி)
* Lap Top மூலமாக பாடநெறிகள்யாவும் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்டும்.
* Ms. office 2007, Internet and e-mail, DTP, Web Design, Graphic Design.
* பயிற்சியின் பின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
ஆசிரியர் KRC
T.P0779672038 நல்லூர்.

NEW SCIENCE CENTRE
(Beacon)ல்
Clock Tower Road
A/L 2013
கணித உயிரியல் பிரிவுகள்
CHE:- M.G. BENO
Phy :- ஸ்பெல்மன், எடிசன், பிரபா
Maths:- ஜெயந்தன்
ஆரம்பம் ஜனவரி - 08
நேரம்:- 02.00 p.m

English Medium
A/L - Com. - 2013
* Accounting
M.Asokumar
B.Com. (Hons) Spl.Acc.
* Economics
G.Gnanachanthiran
B.A (Hons) Spl.Eco, M.Sc. (Eco)
* Business Studies
B.Kajen
B.Com (Hons) Spl.FM.
புதிய சாயி கல்வி நிலையம்
கோயில் வீதி, நல்லூர்.
08.01.2011 : பிற்பகல் 3.00 P.m
T.P : 0775289206

ஒலிம்பியா ஸ்போட்ஸ் தரும் தகவல் 4ஆம் பக்கத்தில்
(108481)

A/L தமிழ்
2011
2012
ஜனவரி - 08
காலை - 08.00 am
நா.தமிழிந்திரன்
BEACON

## மரண அறிவித்தல்



### சுந்தரமூர்த்தி பொன்னம்மா

அளவெட்டியைப் பிறப்பிட மாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி பொன்னம்மா நேற்று (04.01.2011) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சுந்தர மூர்த்தியின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம் (ஜிப்சி மணியம்), தருமராசா (பிரான்ஸ்) காலஞ்சென்ற சறோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சறோஜினிதேவி , கொறின் (பிரான்ஸ்) காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்பு மாமியும் சந்தானகோபால் (செல்லா), சசிகலா (கனடா), ராஜினி (லண்டன்), சசிகுமார் (ராசா), பாலகுமார் (கனடா), றோசா (இந்தியா), எமிலி, எலுகி, கிறிஸ்தோபர், ஜினிபர், திலான், சித்திரா, உஷா, உதயகுமார் (கனடா), சசிதரன் (லண்டன்), சிறிகௌரி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் வருண், ரதுசன், சங்கீத், ஜிந்துஜன், தமிஜா, கரணி, மதுசன், நேத்திகா, சஜிந்த், சிம்மஜி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.01.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத் துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

73, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212225261

தகவல்:
சு.பாலசுப்பிரமணியம்
(ஜிப்சி மணியம்)
மகன்.

(108488)

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
10-01-2011
Batch 9 : 09.00 AM - 01.00 PM
Batch 10 : 01.30 PM - 05.30 PM
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/ 0714295335
BCHS

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் மலர்ந்துள்ளது. எங்களது சகல செயற்பாடுகளும் அபிவிருத்தியடைய ஆரம்பித்துள்ளன. எங்களது வாழ்க்கை மீண்டும் மலர ஆரம்பித்துள்ளது. புத்தாக்கங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் எங்களது கைவினைத்திறன் கைத்தொழிலை நவீனமயப்படுத்தி எமது வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ள தேசிய வடிவமைப்பு நிலையம் இங்கு வந்து சிரமம் பாராது எங்களுக்கு உதவி செய்தது. அவ்வாறு நாங்கள் உற்பத்தி செய்த எமது புத்தாக்கங்களை ஒன்று சேர்த்து நாங்கள் ஒரு கண்காட்சியை நடத்துகிறோம்.



Hon. President Mahinda Rajapaksa | Hon. Minister Douglas Devananda | Hon. Deputy Minister Weerakumara Dissanayake | Secretary to the Ministry Mr. V. Sivagnanasothy

நவீன கைப்பணிப் பொருட்கள் கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தை

yugayatanimawum

# காலத்திற்கேற்ற உற்பத்திகள் 2010 யாழ்ப்பாணம்

# ஜனவரி 10-11-12

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

மு.ப.10.00 மணியிலிருந்து பி.ப.8.00 மணி வரை

මාධ්‍ය අනුග්‍රහය
ஊடக அனுசரணை
Media sponsor

YOUNG DESIGNERS' exhibition 2010 JAFFNA

காலத்திற்கேற்ற உற்பத்திகள் கண்காட்சிக்கு சமாந்தரமாக நடைபெறும் இளம் வடிவமைப்பாளர்கள் கண்காட்சி

ஒத்துழைப்பு வழங்கியோர்
இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை (யாழ்ப்பாணக் கிளை)
பனை அபிவிருத்தி சபை
மீளெழுச்சி கருத்திட்டம்

ජාතික මෝස්තර මධ්‍යස්ථානය
தேசிய வடிவமைப்பு நிலையம்
NATIONAL DESIGN CENTRE
සම්ප්‍රදායික කර්මාන්ත හා කුඩා ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍යාංශය
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT



# O/L, A/L மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

GATEWAY CICT

- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking
- International Computer Driving Licence
- e-Citizen

## உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

மற்றும்

## FAST TRACK Training Programme

| | |
|---|---|
| Fundamentals of IT | Computer Hardware |
| Windows XP | Adobe Pagemaker |
| Word Processing MS Word 2007 | Adobe Photoshop |
| Spreadsheet Ms Excel 2007 | Adobe Premiere |
| Database Ms Access 2007 | Corel Draw |
| Presentation Ms PowerPoint 2007 | Internet & e Mail |

e-Kids



ஆரம்பம் 08.01.2011

# IT ISLAND GATEWAY CENTRE

347, Kasthuriyar Road, Jaffna
021 567 5555 / 222 7967

Luxemee Theatre Lane, Nelliyady
021 226 2395

New Market Building, Chavakachcheri
021 227 0323

noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org